ஸ்ரீ:

॥ श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

வேதாந்த தீபிகை.

ஸம்பாதகர்:—ஸ்ரீ வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 20.] சுக்ல௵ கார்திகை-மார்கழி௴ [ஸஞ்சிகை 2-3

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवराम्बरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जं विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

[ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம்.

[இரண்டாம் அங்கம்.]

[ஸ்ரீ. உப. வித்வாந் ஏ. வி. கோபாலாசார்யர், வக்கீல், திருச்சி.]

முதல்அங்கம் ஸ்ரீரங்கத்தில் உபய காவேரீ மத்யத்தில் நடைபெற்றது. இரண்டாம் அங்கம் கங்கா தீரத்தில் நடப்பதாக வைக்கப்பட்டிருக்கிறது. 'தக்ஷிணாபதஜாஹ்நவீ' [தென் தேசகங்கை] என்று ஆறுவது அங்கத்தில், கங்கையை உபமாநமாக இட்டுக் காவேரியை வர்ணிக்கிறார். அர்ச்சாவதார எம்பெருமான்களையிட்டு காவேரிக்கு ஏற்றம். விபவாவதாரமாகிய த்ரிவிக்ரமப் பெருமானுடைய திருவடியினின்று உத்பத்தியானதையிட்டு கங்கைக்கு ஏற்றம். ப்ரபோத சந்த்ரோதயத்தின் இரண்டாவது அங்கத்தில், காசீ க்ஷேத்ரத்தில் டம்பன் அஹங்காரன் முதலியவர்கள் கூடுவதாக வர்ணிக்கப்படுகிறது. இந்த அங்கத்தில் முக்யமாகச் செய்யப்படுவது, பரமதஸ்தர்களின் எதிர்வாதம். ஸம்ஸ்க்ருத பாஷையின் விக்ருதிகளான பாளீ மாகதீ முதலிய பாஷைகளுக்கு வடதேசங்களிலேயே ப்ரசாரம் அதிகம். பௌத்த ஜைநாதி பரமதங்கள் அங்கு மிகுதியாய் உள்ளதாலும்,

காங்கா தீரத்தில் சாஸ்த்ர ப்ரசாரம் அதிகமாயுள்ளபடியாலும், சாஸ்த்ர வாதம் அங்கே செய்யப்படுவது உசிதம். இந்த அங்கத்தின் முதலில், ப்ரவேசத்தில், ச்ரத்தை விசாரணை என்னும் இரண்டு தோழிகள் ப்ரவேசித்து ஸம்பாஷிக்கிறார்கள்; இவர்கள் ஸுமதியின் சேடிகள். ஒருவன் ச்ரத்தாவித்தனுய் ப்ரஹ்ம விசாரம் செய்யவேண்டுமென்பது சாஸ்த்ர விதி. எவனுக்கு எப்படி ச்ரத்தை இருக்குமோ அப்படித்தான் அவன் இருப்பான். 'புருஷன் ச்ரத்தாமயன்' என்பது ஸ்ரீகீதாசார்யன் வார்த்தை. அத்யாத்ம ஸம்பத்தில் ஸுமதிக்கு ஸஹசரிகளாக ச்ரத்தையையும் விசாரணையையும் எடுத்தது மிகவும் உசிதம்.

நடுவிலுள்ள கதாவ்ருத்தாந்தத்தை, ப்ரவேசகத்தில் ஸம்பாஷணம் செய்பவர்கள் மூலமாய்க் காட்டுவது நாடக மர்யாதை. பரவாதிகள் எல்லோரும் சேர்ந்திருக்கிறார்கள் என்றும், அவர்களோடு வாதம் செய்ய வ்யவஸாயன் என்ற ஸேனாபதியுடன் ப்ரபல ஸ்வபக்ஷவாதிகளைக்கொண்டு வாதயுத்தத்துக்கு ஏற்பாடு செய்வதாலும், அந்த யுத்தத்தில் தன்னுடைய பர்த்தாவாகிய விவேக மஹாராஜருக்கு ஜயமுண்டாவதற்காகப் பகவானைப் பூஜிப்பதற்குப் பாகீரதி நதியிலிருந்து தாமரஸ புஷ்பங்களைக் கொணரும்படி ச்ரத்தையை ஸுமதி ஏவினதாகவும் சொல்லப்படுகிறது. இங்கே இவர்கள்பேச்சு மிகவும் மதுரம். ச்ரத்தை பரம ச்ரத்தையுடனும் ஆதரத்துடனும் தன் எஜமாநி ச்ரத்தையோடு செய்யவேண்டிய நியம பூஜைக்காகப் பரபரப்புடனும் வேகத்துடனும், சந்தரன் போன்ற தன் முகத்திலிருந்து சொட்டுகிற அம்ருத திவலைகள் போலும், அப்பொழுது அலரும் மல்லிகைப் பூவிலிருந்து ஒழுகும் தேன் திவலைகள் போலும், யௌவனம் என்கிற இளங்கொடியில் தோன்றின மொட்டுக்கள் போலும் விளங்கும் முத்துக் கோவை போன்ற வேர்வைத் துளிகளோடு, இளங்கன்றைத் தேடிப் போகும் வாத்ஸல்ய நிர்ப்பரமான பசுவைப்போல் எதிரில் வருபவரும் தெரியாமல் போவதாக விசாரணை வர்ணிக்கிறாள். 'எங்கே இவ்வளவு த்வரையாய்ப் போகிறாய்?' என்று கேட்டதற்கு, 'மஹாராஜர் ஆரம்பித்த ப்ரதிபக்ஷ வாத யுத்தத்தில் நிர்விக்[illegible] ஜயம் ஸித்திக்கும்படி நாராயணன் என்னும் தேவனை த்யாநம் செய்துகொண்டு, ப்ராணாயாமத்தால் ஜநார்த்தநனை மனத்தில் நிறுத்தி, மின்னு நேமியின் கோவிலை ராம பட்டாபிஷேகத்தைச் செவியுற்ற கோஸலை மேவியதுபோல, மங்களாலங்காரங்களால் அலங்க்ருதையாய்க் கமலாபதி சரண கமல ஸமர்ச்சந யோக்யமான பொற்றாமரை மலர்களால் பகவானை ஆராதிக்கக் கோரி, பரம பரிசுத்தமான கங்கையிலிருந்து அம்மலர்களைக் கொண்டு வரும்படி தனக்கு ஆஜ்ஞை செய்துவிட்டு, பாஹ்ய புஷ்பங்களைக் காட்டிலும் சாந்தி

தாந்தி முதலிய ஆந்தரமான புஷ்பங்களை அதிகமாய் ஸமர்ப்பிக்க வேண்டுமென்று சுபைகதானமான ஹ்ருதயத்துடன் நைர்மல்யாப்யாஸம் செய்து கொண்டிருக்கிறாள் தன் யஜமானி என்றும், தான் அந்த விஷயத்தில் ச்ரத்தையோடும் த்வரையோடும் ஸஹகரிக்க வேண்டி, தெளிந்த ப்ரவாஹத்தையுடைய பாகீரதி நதிக்குத் தான் வேகமாய்ச் செல்வதாயும் சொல்லுகிறாள். இங்கே கங்கையின் தெளிந்த ப்ரவாஹம், கமலாஸநரான ப்ரஹ்மாவினுடைய முக கமலத்தில் விளையாடும் ராஜஹம்ஸியான வாக்தேவிக்கு ஒப்பிடப்படுகிறது. தமஸா நதிக்கரையில் ராமாயணம் அவதரிக்கும் ஸமயத்தில் வால்மீகிக்கும் அவர் சிஷ்யரான பரத்வாஜருக்கும் நடந்த ஸம்வாதத்தை மனத்திற் கொண்டு, இந்த ப்ரவேசகத்தில் கங்கா தீரத்தின் குளிர்ந்த காற்று ஸஜ்ஜந ஹ்ருதயம் போல சீதளமா யிருப்பதாக வர்ணிக்கப்படுகிறது.

இந்த ப்ரவேசகத்தில் உள்ள நீண்ட ப்ராக்ருத ச்லோகங்களைப் போல மதுரமாய் அமைந்த ப்ராக்ருத ச்லோகங்கள் எங்கும் இல்லை என்னலாம். ம்ருச்சகடிக நாடகத்தில் மூர்க்கனான சகாரன் மூர்க்கத்தனமாய் உளறும் நீண்ட சில ப்ராக்ருத ச்லோகங்கள் உண்டு. மற்ற ப்ரஸித்த நாடகங்களில் சிறிய வ்ருத்தங்களில் ப்ராக்ருத ச்லோகங்கள் காணப்படுகின்றனவே யன்றி பெரிய வ்ருத்த ச்லோகங்கள் அகப்படமாட்டா. பில்ஹணருடைய 'கர்ண ஸுந்தரீ' நாடகத்தில் இதைப்போன்ற பெரிய சில ப்ராக்ருத ச்லோகங்கள் மதுரமாய் அமைந்ததுண்டு. உத்தர ராம சரித்ர நாடகத்தில் கோதாவரியையும் அதன் தீரத்திலுள்ள வ்ருக்ஷங்களையும் பற்றிப் பெரிய ஸம்ஸ்க்ருத ச்லோகத்தில் பவபூதி வர்ணித்திருக்கிறார். அந்த வர்ணநத்தை மனத்திற்கொண்டு, இங்கே ஸ்வாமி வர்ணிக்கிறார் என்பதை இரண்டாவது ச்லோகத்தில் காட்டுவோம். 'தாமரஸ புஷ்பங்களுக்காகக் கங்கைக்கு வேகமாய்ப் போகிறேன்' என்று சொல்லும்போது, அந்தக் கங்கைக்கு உபமானமாக ஸரஸ்வதி விளையாடும் தாமரை ப்ரஹ்மாவின் முகமென்றும், அந்த ப்ரஹ்மா தாமரையில் உதித்தவரென்றும், இப்படித் தாமரை மயமாக வர்ணிப்பது அழகு. இந்த ஸமயம் மத்யாஹ்ந வேளை. இதில் ச்ரத்தை, கொடியவர் வசநத்தைப் போல தீக்ஷ்ணமான சண்ட கிரணனுடைய உக்ரமான வெயிலைக் கவனியாமல் நெற்றியில் வேர்வை உண்டாக வேகமாய் நடக்கிறாள். கங்கையின் கரையிலுள்ள குளிர்ந்த கல்பக வ்ருக்ஷ சோலைகளில் கங்கை அலைகளிலிருந்து வீசும் குளிர்ந்த புஷ்ப வாஸனையோடு கலந்த காற்றினால் மார்க்க ச்ரமம் சாந்தமாக வேண்டுமென்றும், அநேகமாயிரம் ஜந்ம மார்க்கத்தில் ஓயாமல் ஸஞ்சரிப்பதனால் உண்டான மார்க்க ச்ரமத்தினால் ஏற்பட்ட துக்க ஹேதுவான பாப ச்ரமங்களை எப்பொழுது மந்தாகிநி மந்தப்படுத்துவாளோ என்றும் சொல்லுகிறாள். இங்கே

மந்தாகிநி மந்தப்படுத்துவாளென்று சொல்லும் அழகு நோக்கத்தக்கது; ஹயக்ரீவ ஸ்துதியில், மந்தாகிநியை ஹயக்ரீவாநுக்ரஹ லப்தமான வாக் ப்ரவாஹங்கள் மந்தப்படுத்துகின்றன என்று சொல்லுகிறார். இந்த இரண்டு விதமான மார்க்க ச்ரமங்களையும் அழகாய்ச் சேர்ப்பது அத்யாத்ம நாடகத்தில் மிகவும் அழகு. கங்காப்ரவாஹமானது, தன்னை அனுகுபவரை அபதாபராக்கவும் அபாபராக்கவும் செய்யும் வன்மையுடையது. விசாரணையும் விவேக மஹாராஜாவினுடைய வாத யுத்த ஸங்நாஹத்தைக் கேட்டுக் கோபங் கொண்ட எதிர் அரசனான மஹா மோஹனால் புத்த ஸித்தாந்தம் ஜைந ஸித்தாந்தம் முதலிய ப்ரதிபக்ஷ ஸித்தாந்திகளையெல்லாம் ஒன்று சேர்த்துத் திரட்டிக்கொண்டு வாதத்துக்கு அனுப்பப் போகிறார் என்கிற பராபரியான வார்த்தையைக் கேட்டு, ஸுமதி தேவி, சத்ருக்களுடைய அந்த வ்ருத்தாந்தத்தை ஏகாந்தமாய் ஸேநாபதியிடம் தெரிவிக்கும்படி தனக்குக் கட்டளையிட்டதாகவும், மஹா ராஜரும் ஸேநாபதியும் கூடி மந்த்ராலோசனை செய்து கொண்டிருப்பதால் அவர்கள் இருக்குமிடம் தான் போவதாயும் சொல்லுகிறாள். கங்கைக் கரையின் அருகில் மாதவிக் கொடி படர்ந்த லதா க்ருஹத்தில் இருவரும் உட்கார்ந்துகொண்டு ச்ரம பரிஹாரம் செய்து கொள்கிறார்கள். கோதாவரீ தீரத்திலுள்ள வ்ருக்ஷங்களைப் பவபூதி அடியிற்கண்டபடி வர்ணித்திருப்பதற்கு எதிர்த்தட்டாக, இங்கே மதுரமான பெரிய ப்ராக்ருத ச்லோகத்தால் ஸ்வாமி வர்ணிக்கிறார்.

இது பவ பூதியின் ச்லோகம் :—

"[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

கீழ்க் காணப்படுவது ஸ்வாமி ச்லோகம் .—

"[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

இவ்விரண்டு ச்லோகங்களிலும், உச்சி வேளையில் மஹாநதிக் கரையில் உள்ள வ்ருக்ஷங்கள், தங்களுடைய புஷ்பங்களை ஒரு காரண விசேஷத்தால் தங்கள் கிளைகளிலிருந்து உதிர்த்து நதியை அர்ச்சனை செய்வது போல

அதில் விழச்செய்கின்றன என்று வர்ணந ஸாம்யம். பவபூதி ச்லோகத்தில் போல் இங்கும் மூன்றுவது பாதம் **"ஆயா'** என்கிற பதத்தோடு ஆரம்பிப்பதைக்கொண்டும், பவபூதிக்கு மிகுந்த ப்ரியமானதும், மஹாவீர சரித்ரத்தில் தாடகாவர்ணநம் முதலிய இடங்களில் ப்ரயோகிப்பதுமான **'ஹாஹார'** சப்தத்தை இந்த ச்லோகத்தின் முதல் பாதத்திலும், அடுத்த ச்லோகத்தில் **'ஹும்காரஹாஹாரகம்'** என்று ப்ரயோகித்ததையும், வர்ணநமும் சைலியும் போகிற வழியின் ஒற்றுமையையும் கொண்டு, பவபூதியின் கவந ரீதியை மனத்தில் வைத்துக்கொண்டு இங்கே ஸ்வாமியினுடைய கவநம் விழுகிறதென்று ரஸிகர்கள் அறிவார்கள். அந்த ச்லோகத்தில், 'யானைகள் தங்கள் ஸ்வபாவத்தை அநுஸரித்துக் கோதாவரிக் கரையிலுள்ள வ்ருக்ஷங்களில், கன்னத்திலுள்ள தினவுகளைச் சொரிந்து கொள்வதற்காக அவைகளை உறைத்துக் கொள்ளும் பொழுது அவை ஆட்டம் கொடுக்கின்றன; ஏற்கெனவே தீவ்ரமான வெயிலினால் தங்கள் பந்தநங்களிலிருந்து நழுவ ஆரம்பித்துத் தானாய் விழக் கூடிய ஸ்திதியிலிருந்த புஷ்பங்கள் நதியில் விழும்பொழுது, அந்த வ்ருக்ஷங்கள் நதியைப் புஷ்பங்களால் அர்ச்சிப்பதுபோல் காண்கின்றன; வெயில் பொறுக்க மாட்டாமல் யானைகள் நதியில் விழுந்து விளையாட ஆசைப்படுகின்றன' என்று இவ்வகை வர்ணநம் அங்கே த்வநிக்கிறது. பக்ஷிகள் வெயில் தாங்கமாட்டாமல் நிழலைத் தேடி அந்த மரங்களை வந்தடைந்து, அவைகளிலுள்ள புழுக்களைத் தங்கள் மூக்குகளினால் கொத்தி இழுக்கின்றன. அந்த மரத்தில் கட்டியிருக்கும் கூடுகளிலுள்ள பறைவைக் குஞ்சுகள் அந்த வெயில் வேளையில் சப்திக்கின்றன. வெயிலின் உக்ரத்தை வர்ணிப்பதில், அந்த ஸமயத்தில் அந்த வ்ருக்ஷங்களில் நடக்கும் ஸங்கதிகளெல்லாம் ஸ்வபாவோக்தியாய் வர்ணித்திருக்கிறது. ஆனாலும் முன்பாதியில், வ்ருக்ஷங்கள் புஷ்பங்களால் நதியை அர்ச்சிப்பதாகச் சொன்னதற்குப் பின்பாதியில் சொல்லப்படும் விஷயங்கள் கொஞ்சமேனும் பொருந்தியிருக்கவில்லை. இங்கே ஸ்வாமி ஸாதித்துள்ள வர்ணநத்தின் ஔசித்யத்தைப் பார்ப்போம். நதிக் காற்றினால் அசையும் வ்ருக்ஷங்கள், தங்கள் சாகாக்ரங்களாகிய கைவிரல்களால் தங்கள் பூச்சுமையை நதியின் பேரில் கொட்டுகின்றன. மனிதர் ஆநந்த பரிதாய்த் தேஹ ஆட்டத்துடன் புஷ்பங்களால் தேவதையை அர்ச்சிப்பார்கள். அர்ச்சனை செய்வதில் வாஸனையும் தேனும் கலந்திருப்பது உசிதம். இந்த அழகிய புஷ்பங்களிலிருந்து வாஸனை மிகுதியாய்க் கமழ்வதுடன், தேனும் ப்ரபூதமாய்ச் சொரிந்து கொண்டு, புஷ்பங்களுக்குச் சோபையையும் ஏற்றத்தையும் உண்டு பண்ணுகின்றன. இந்த இடத்தில் ஓடும் மஹாநதி ஜலத்துக்கு அர்ச்சனை செய்வதால் தனியாக அபிஷேக தீர்த்தம் தேவையில்லை. இந்தப் பூக்கள், மீன் கொடியோனான மன்மதனும், பெண்கள் மாநத்தை வாங்கும் ஒரு பெரிய

வில்லாளியுமாகிய தேவனுக்குப் பாணங்கள். மீன்கள் நிறைந்த நதியை வர்ணிப்பதில் மீன்கொடியைச் சொன்னது அழகு. இந்தப் புஷ்பங்கள் தேவார்ஹமானவை என்பதை இந்த மந்மத ப்ரஸ்தாவம் காட்டுகிறது. மந்மதனை வெறுப்பது விசாரணை என்னும் பெண்ணின் நோக்கானபடியால், பெண்களின் மானத்தை வாங்குகிறான் என்று சொல்வது பொருந்தும். பேதைப் பெண்களின் ப்ராணனைத்தான் வாங்குவான் இந்தப் பெரிய வில்லாளி என்று நிந்தையில் நோக்கு. இது பற்றியே 'ஸஹாயாத்தலக்ஷ:' என்று அவனது வர்ணநம் உள்ளது. இந்தப் புஷ்பங்கள், நிழலுக்காக அவற்றின் அடியில் ஒண்டியிருக்கும் மஹேந்த்ரனுடைய அப்ஸர ஸ்த்ரீகளின் கூந்தலில் மாலையாகத் தொடுத்துச் சூடத்தகுந்தவை. இதனாலும் அவற்றிற்குத் தேவதார்ஹதை ஏற்பட்டது.

கங்கைக் கரையில் குளிர்ந்த நிழலில் உட்கார்ந்து விடாய் தீர்த்துக் கொள்ளும்படி விசாரணை கேட்டுக்கொண்ட வண்ணம், இருவரும் சேர்ந்து, லலிதமான விலாஸத்தோடு உட்காருகிறார்களென்று சொல்லப்படுகிறது. விசாரணைக்கும் ச்ரத்தைக்கும் சேர்ந்து அழகான ஸஹாஸிகையைச் சொல்வது அழகு. உபநிஷத்தில் விசார பூர்வகமாக உபதேசம் செய்யுமிடத்தில் 'ஸ்ருத்வா விசார்ய' என்று சொல்லப்படுகிறது. தத்வ விசாரத்தில் புத்தியை விச்ருங்கலமாகப் போகவிடாமல், சாஸ்த்ர ச்ரத்தையோடு, ஆஸ்திக்யவானாகி வேத சாஸ்த்ரா விரோதிகளான தர்க்கங்களைக்கொண்டு ஸாது அஸாது விவேகம் செய்ய வேணும். 'விசாரணை எங்கே போகிறாள்?' என்று ச்ரத்தை கேட்க, முமுக்ஷுவான ஜீவனுடைய புத்தியை மஹா மோஹன் ப்ரபலமான புத்திவாதிகளான பௌத்தர் சமணர் முதலிய பரஸமய வாதிகளை அவன் ஸமீபம் போகச் சொல்லி, அவர்களைக்கொண்டு யுக்திகளால் கலைத்து, வேதாந்த மார்க்கத்திலிருந்து திருப்பிவிட ப்ரயத்நப்படுகிற வ்ருத்தாந்தத்தை விவேக மஹாராஜாவின் ஸேநாபதியாகிற வ்யவஸாயனிடம் தெரிவிக்கும்படி ஸுமதி தேவி தன்னை நியமித்ததாகவும், அவ்விருவரும் மந்த்ராலோசனை செய்துகொண்டிருக்கும் ஸமயமாக இருப்பதால், அவர்கள் ஸமீபம் போய்த் தெரிவிப்பதற்காகத் தான் புறப்பட்டதாகவும் சொன்னாள். இங்கே, 'ஹாலிகஜங்காதுபலம்பந்யாயம்' என்று ஒன்றை ஸ்வாமி உதாஹரித்திருக்கிறார். ஹாலிகன் என்பது உழவனைச் சொல்லும். அத்யாத்ம விஷயத்தில் க்ருஷி செய்கிறவன் முமுக்ஷுவான ஜீவன். க்ஷேத்ரமாகிய சரீரத்தையும் மநஸ்ஸையும் ஸாத்விகமான ஆஹார விஹாராதிகளால் உழுது சோதநம் செய்து, விரோதிகளான களைகளை எடுத்து, முக்தி பீஜமான ஜ்ஞாநத்தை விதைத்து, ப்ரீதி ரஸ

மென்னும் ஜலத்தைப் பாய்ச்சி, பயிரைப் பல பர்யந்தம் வளர்த்து, முக்தி பலத்தை அநுபவிப்பதால் இவனே ஹாலிகன் என்று சொல்வது உசிதம். ஹாலிகன் உழுதுகொண்டிருக்கையில், ஜம்புக மென்கிற குள்ள நரியைக் கண்டு, தன் உழவை விட்டு அந்நரியைத் துரத்திக்கொண்டு வெகு தூரம் ஓடினல், அவனுக்கு நரியும் அகப்படாமல் பயிர் வ்யாபாரமும் கெட்டுப்போகிறது. வீணன பரிச்ரமங்களே, 'காட்டு வாத்துக்களைப் பின் தொடர்ந்து ஓடுதல்' என்னும் சொல் தொடரால் இங்க்லீஷ் பாஷையில் வழங்குவர். இங்கே பரவாதிகளே நரிக்கு ஒப்பிட்டது அழகு. நரிகளுக்கு வஞ்சனைக்கு உபயோகமான மிகுந்த புத்தி ஸாமர்த்யம் உள்ளதென்பது ப்ரஸித்தம். பரவாதிகளில் பௌத்தர்கள் முதலில் எடுக்கப்பட்டதும் அழகு. 'பௌத்தம்' என்கிற சப்தம் அவதாரண கர்ப்பமானது; கேவலம் புத்தி மாத்ரத்தால் ஸாதிக்கப்படுவதென்பது அதன் பொருள். இவைகள் பௌத்த யுக்திகளே. அவலம்பித்திருக்கும் மாயையை அவலம்பித்த தர்சநங்கள். பரதர்சநங்களின் ஸம்யோக ப்ரஸ்தாவத்தில் 'ஜம்புக தர்சநம்' என்று ப்ரயோகித்தது அழகு. பரதர்சநங்கள் ஜம்புக தர்சநங்கள்; அதாவது, வஞ்சனையான நரி ஸித்தாந்தங்கள் என்றும் வ்யஞ்ஜநம். விவேக புத்திக்கு வ்யவஸாயத்தை ஸேனைத் தலைவனுகச் சொல்வதும் அழகு. 'வ்யவஸாயாத்மிகா புத்திரேகேஹ குருநந்தந । பஹுசாகா ஹ்யநந்தாஶ்ச புத்தயோऽவ்யவஸாயிநாம் ॥'' என்கிற கீதா ச்லோக ந்யாயம் இங்கே அநுஸரிக்கப்படுகிறது. விவேக புத்தி வ்யவஸாயாத்மகமாக இருக்கவேணும். அது ஒரு வழியாகவே இருக்கும்; ஸம்சய விகல்பமாக இராது. வ்யவஸாய மென்பது, மநநம் அப்யாஸம் முதலிய விடாமுயற்சியைச் சொல்லுவதோடு, அதன் பரிபாகமும் பலனுமான ஸுத்ருடமான நிச்சய புத்தியையும் சொல்லும். 'வேதாந்தவிஜ்ஞாநஸுநிஶ்சிதார்தா:' என்கிறபடி நிச்சய புத்தியும் வ்யவஸாய சப்தத்தால் அபிப்ரேதம்.

இதைக் கேட்ட ச்ரத்தை, 'மஹாமோஹனுடைய ஏற்பாடாகிய பிசாச விவாஹத்தில், கர்த்தபங்கள் கூட்டமாய்க் காநம் செய்வது போல் ஆயிற்று' என்கிருள். குமதி யென்னும் பேய்ப்பெண்ணை ஜீவனுக்கு மாலையிடும்படி மஹாமோஹன் மநோரதம் செய்து விவாஹம் கோடித்திருக்கிருன். அந்தப் பிசாச விவாஹத்தில் அதற்கு அநுரூபமாகக் காயக்ர்கள் கர்த்தபர்கள் என்று வேடிக்கை. 'ஜயஸ்வாத்மஶப்தஸ்வரம் யேந கேநாப்யுபாயேந வாதிந: ஸ்வாத்மகோஷோ ஹவிஷ:' என்கிற ந்யாயப்படி வாதத்தில் சப்தக் கூப்பாட்டால் ஜயம் தங்களுடையதுபோல உத்கோஷிப்பது அஸமீசீந வாதிகளின் ஸ்வபாவம். அவர்கள் தங்களுடைய பேச்செல்லாம் காநத்தைப்

போல் இனிமையுடையதாக அபிமாநம் கொள்ளுகிருர்களே யொழிய அந்தப் பாட்டுப் பாட்டல்ல. அதைப் பாட்டென்று சொன்னாலும், அது விஸ்வரமாயும் கர்ணக டோரமாயும் கர்த்தப காநத்தைப்போல் ஆகுமென்று வ்யஞ்சநம். 'ப்ருஹஸ்பதி முதலிய மஹா புத்திமாங்களால் ஸ்தாபிக்கப்பட்ட ப்ரபலமாயும் அநேகமாயுமுள்ள ப்ரதிபக்ஷங்களை எப்படி ஒருவரான விவேக மஹாராஜா நிர்மூலநம் செய்யக்கூடும்?' என்று விசாரணை சங்கிக்கிருள்: 'விபுதிஷ்டூஸ்ஃவாபெ ஹஙயஸாம ஸ்ஹா ஃஷ்யீயஹூம' 'வெயெபஹாஙுாம வஅநம' என்றுமுள்ள வசநங்கள் 'பஹஒுாம' என்கிற பதத்தினல் ஸூசிதம். 'அநேகர் பேச்சு ஜயிக்குமா? ஒருவர் வார்த்தை வெல்லுமா?' என்று சங்கை. ப்ருஹஸ்பதி மதம், சார்வாக மதம் என்கிற நாஸ்திக மதம். சார்வாகனைக் குருவாக ப்ரபோத சந்த்ரோதயத்தில் இரண்டாவது அங்கத்தில் காட்டி, அவருக்கும் அவர் சிஷ்யருக்கும் ஸம்பாஷணை மூலமாய் வேதாந்த தர்சநம் நிந்திக்கப்பட்டது. இங்கே வேதாந்த தர்சந ஸ்தாபகரான ஸ்ரீபாஷ்யகாரரைக் குருவாகவும் வேதாந்தாசார்யரான ஸ்வாமியை சிஷ்யராகவும் வைத்துப் பர ஸமய நிராஸம் செய்யப்படுகிறது. 'அஜ்ஞாநமென்னும் இருட்டைப் போக்குகிற' என்கிற பொருள் கொண்ட 'குரு' சப்தத்தை இருட்டையே கோடிக் கணக்காய்ப் பெருக்கும் சார்வாகன் விஷயத்தில் ப்ரயோகித்து, குரு என்னும் பாத்ரமாக அவனை வேதாந்த நாடகத்தில் வைப்பது உசிதமல்ல என்பது ஸ்வாமியின் பாவம். 'உத்தரொத்தரயுக்தௌ அ வக்தா வாஅவஹ்தியஃயா' என்று உக்தி ப்ரத்யுக்தி ரூபமான வாதத்தில புங்காநுபுங்கமாய்ச் சலிக்காத ப்ரதிபையினல் மேலும் மேலும் கக்ஷி சொல்லும் திறமை உள்ளவர் ப்ருஹஸ்பதி. அவரே உயர்ந்த வாதிகளுக்கு உபமாநபூதர் என்று மஹர்ஷி சொன்னர். கர்மம் ஜ்ஞாநம் ஸாமாந்ய தர்மங்கள் முதலிய அநேக பாகங்களைப் பௌத்த ஜைநாதிகள் ஒப்புக்கொண்டவர்களே ஒழிய அவர்கள் சார்வாகனைப்போல் நாஸ்திகர்களல்லர். 'ஹஷீ ஹ ெதவஹ் தெஹஹ் வ~தாமநேம க~தஃ' என்று சொல்லிக்கொண்டு மறுபிறப்பை மறுக்கும் ப்ருஹஸ்பதி மதத்தை ஒத்தவர்களல்லர். பௌத்த ஜைநாதிகள், ப்ரமாணங்களுக்குள்ளும் சார்வாகனைப் போல ப்ரத்யக்ஷமொன்றையே அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறவர்களல்லர். அநுமாநம் முதலிய வேறு ப்ரமாணங்களையும் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிருர்கள். ஆகையால் பொல்லாத்தனத்தில் காஷ்டையை அடைந்தது ப்ருஹஸ்பதி மதம். மத ப்ரவர்த்தர்களுக்குள்ளும் ப்ருஹஸ்பதியே எல்லோரைக் காட்டிலும் புத்தியில் மேம்பட்டவர். மேலும் அவ்வராலே ப்ரவர்த்திதமான தேஹாத்மவாதம் எல்லோருக்கும் அநுபவாரூடமாய் உலகெங்கும் பரவி லோகாயதமதமென்று பேர் பெற்றது. இந்

தக் காரணங்களைக் கொண்டு ப்ருஹஸ்பதியை முன்னிட்டுப் பரமதங்கள் இங்கே உபலக்ஷணமாகக் கொள்ளப்பட்டன.

இங்கே 'நிர்மூலநம்' என்கிற சப்தம் பயிரைத் தின்றுவிடக்கூடிய களைகளான பரமதங்களை வேரோடு பிடுங்கவேணு மென்று காட்டுகிறது. இதற்கு ச்ரத்தை வெகு அழகாகப் பதில் சொல்லுகிருள். எது உண்மையோ அதுதான் அழியாமல் நிலை நிற்கும்;எது பொய்யோ அது என்றைக்கும் உண்மைபோல் நிலை நிற்கமாட்டாது. மேலும் ஸ்வல்ப காலத்தில் அது பொய்யென்று வெளிப்பட்டுவிடும். மெய் போல் பரவாதிகளால் சொல்லப்பட்ட அந்தப் பொய் சீக்ரத்தில் பச்சைப் பசும்பொய் யென்று எல்லோராலும் காணப்பட்ட பகல் போல வ்யக்தமாகும். மஹாவாக்யங்களால் ப்ரபஞ்ச ஸத்யத்வத்தைப் பாதிக்கக்கூடிய அபரோக்ஷ ஜ்ஞாநம் ஏற்படும் என்பது வேதாந்தங்களின் ரஹஸ்யம் என்று அறுதியிட்டால், ஆயிரம் தரம் மஹாவாக்யங்களைக் கேட்டுப் பார் சொல்லும் ப்ரகாரமே அவற்றின் அர்த்தங்களை அநுஸந்தாநம் செய்தாலும் ப்ரபஞ்ச மென்னும் பேதம் எள்ளளவும் பாதிக்கப்படாமல் மேலும் மேலும் த்ருடமாகவே அநுவர்த்தித்துக்கொண்டு வருவது அநுபவ ஸித்தமா யிருப்பதால், ப்ரபஞ்ச மித்யாத்வ வாதம் அநுபவத்தால் பாதிக்கப்பட்டு அளீகமாகும் என்று காட்டுவதில் இங்கு நோக்கு. 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்' என்பது பழமொழி. இங்கே 'பெக்ஷிஷ்யஸெ' என்கிற பதத்தால் 'நீயே நேரில் பொய்யென்று காண்பாய்' என்று சொன்னதற்கு, த்ருச்ய காவ்யமாகிய இந்த நாடகத்தில் பரமதங்களின் அத்ருச்யத்வத்தை நீ த்ருச்யமாக (அதாவது ப்ரத்யக்ஷம் போல்) காணப்போகிருய் என்று பாவம். 'ஒருவர் அஸங்க்யேயரான பலரை எதிர்த்து அவர்களை இருந்த இடம் தெரியாமல் பறந்து போம்படி எப்படிச் செய்யக்கூடும்?' என்று கேட்டதற்கு ஒரு அழகான பெரிய ப்ராக்ருத ச்லோகத்தினல் ச்ரத்தை பதில் சொல்லுகிருள்.

"ஜீஸஞொஜிகஸெஸ்ஸொவ்வஹஊஂகஸாரவஹ்லாரகம்
ஜிவ்வஞொக(வ்)ாணஸொவ்விஉஊஂவிஸ்யாஊவீஉண்ஜூஂ ।
தமரஞொகவஹஂஜஞொவ்த-ஸியஂஸெபெணதஸெ-க்கரஂ
வெக்கஞொணிஹிஊஂவிஉ-ஂஉஊஉகஂஹெத்தஂவிவெஒவஹஂ ॥"

மஹாவீர சரித்ரத்தில் 'வீதஅஜி-உதகஉ-உஉவநவ்ராஹ்லாரவொரொஜு ஸவ்உ்யாஜொஜுஸ்தஹாரஹெரவவவ-உ-உவெ-உாஜுதஂ யாவதி ॥" என்று தாடகா வர்ணத்தில், தாடகை ராமன் பேரில் விழுவதற்காக வேகமாய் மேக இருட்டைப்போன்று ஸ்தந பாரத்தோடு ஓடிவரும் அவஸரத்தில் 'வ்ராஹ்லார'

சப்தம் ப்ரயோகிக்கப்பட்டது. கோதாவரி தீரத்தில் குளிர்ந்த சோலைகளில் வாஸந்தியும் தமஸையும் ஸம்பாஷணம் செய்வதை அநுஸரித்து இங்கே கங்கைக் கரைச் சோலையில் இந்த இரண்டு பெண்களுக்கும் ஸம்பாஷணம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கே இரண்டாம்தரம் 'ப்ராஹ்லாத' சப்தம் உபயோகிக்கப்பட்டது. உலகத்தில் ஒரு ஜ்ஞாநி இருந்தால் எத்தனையோ அஜ்ஞாநிகள் இருப்பர்; ஒரு நெற்பயிருக்குக் களைகள் அநேகம். ஒரு ஸூர்யன் உதயமானவுடன், கும்பலாயும் கநமாயுமிருக்கும் இருட்டு முழுவதும் இருந்த இடம் தெரியாமல் அகன்று விடும். பரபக்ஷங்களை இருட்டுக் கூட்டமாக ரூபணம். இந்த த்ருஷ்டாந்தத்தில் விவேகம் உதிக்கையிலேயே ஒரு விவேக ப்ரகாசத்தால் பரபக்ஷங்களாகிய இருட்டுக் கூட்டம் முற்றிலும் தொலையுமென்று காட்டப்பட்டது. அவித்யை என்னும் பரமத இருட்டுக் கூட்டத்திற்கு நம் ப்ரதி தந்த்ரம் என்கிற ஒரு அர்த்தத்தின் விவேகம், ப்ரத்யூஷமாகும். ஆனல், இருட்டு என்பது பாவ பதார்த்தமா? அல்லது ஆலோகாபாவ மாத்ரமா? என்று விவாதப்படுவார்கள். பரபக்ஷங்களை அபாவ மென்று சொல்லுவது ஆக்ஷேபகரமானதால். விந்த்ய பர்வத சிகரத்தில் உள்ள வநஸ்பதிகள் (அதாவது விருக்ஷங்கள்) அடர்ந்த காடுகள், அதன் மத்தியில் கிளம்பும் அக்நி ஜ்வாலையினல் எப்படிக் கொளுத்தப்பட்டுப் பஸ்ம மாக்கப்படுமோ என்று இரண்டாவது த்ருஷ்டாந்தம் கூறப்பட்டது. இந்த த்ருஷ்டாந்தத்தில் சில ஸ்வாரஸ்யங்கள் உண்டு. பரமதங்கள் பாவங்களே. அம்மத ப்ரவர்த்தகர்கள் ப்ருஹஸ்பதிகளென்று தங்களைச் சொல்லிக்கொண்டாலும் அவர்கள் வாஸ்தவத்தில் வநஸ்பதிகளே. ஒரு பொறி நெருப்புக்கூட ஒரு பெரிய காட்டைக் கொளுத்தக்கூடும். ஒரு விவேகப் பொறி போதும் பரமதக் காடுகளைக் கொளுத்த. ஜ்ஞாநமென்னும் அக்நி ஸர்வ கர்மங்களையும் கொளுத்தும். இலவம்பஞ்சானது தீயில் எப்படிப் பொசுங்கிவிடுமோ அப்படி இந்த வித்யையுடையவனுடைய ஸர்வ பாபங்களும் நசித்துப் போகும். 'தீயினில் தூசாகும்' 'தழல் சேர்ந்த தூலமென' என்கிற வசநங்கள் இந்த த்ருஷ்டாந்தத்தால் அநுஸரிக்கப்படுகின்றன. பர மதஸ்தர்களைக் கொளுத்துகிறதென்று சொன்ன த்ருஷ்டாந்தத்தில், அவர்கள் மதத்தை அழிப்பது இஷ்டமானலும் அவர்களை அழிப்பது என்று சொல்லுவது அநுசிதமாகையால், பர்வத ப்ரமாணமான பஞ்சுக் குவியல்கள் ஒரு காற்றினல் பறக்கடிக்கப்படுவன போல என்று மூன்றும் த்ருஷ்டாந்தம் கூறப்பட்டது. இங்கே தூரமாய் நிரஸநமே யொழிய வேறு நாசம் முதலியன இல்லை. மலைபோல் த்ருடமானதும் அசைக்கக்கூடாததுமாயிருப்பது தங்கள் மதமென்று அவர்கள் அபிமாநம். மலை அவர்களுக்குத் துலை யென்று நினைப்பு. தூலம் என்கிற பஞ்சு அவர்களுக்குத் துலை

யென்று வேடிக்கையில் நோக்கு. நான்காவது பாதம் தார்ஷ்டாந்திகத்தை உபபாதநம் செய்கிறது. விவேகம் கண்ணெடுத்துப் பார்த்த க்ஷணத்திலே யே பரமதாந்தகாரம் பேதிக்கப்படும். 'தஸ்மிந் த்ருஷ்டே பராவரே' என்கிற ச்ருதியில் போல், பார்த்த மாத்ரத்திலேயே எல்லா ஸம்சயங்களும் சேதிக் கப்படுமென்று அபிப்ராயம். ஜ்ஞானக் கண்ணாகிய நெற்றிக் கண்ணினால் த்ரிபுரத்தை தஹித்ததுபோல வென்றும் இங்கே ஸூசிதம்.

இப்படி மஹாமோஹன், பரமத ப்ரவர்த்தகர்களைத் தன் கக்ஷிக்குப் பலத் துக்காகவென்று நினைத்து, அவனுக்கு நேர் விபரீதமாக முடிகிறதென்று மற் றொரு த்ருஷ்டாந்தத்தால் காட்டப்படுகிறது. ஸமுத்ரம் தாண்ட விரும்புகிற வன் பக்க பலத்திற்காக ஓட்டைக் கப்பல்களைச் சேர்த்து அணைத்துக் கொண்டதுபோலாகும். அபலைகளான ஸ்த்ரீகளையும், ஸ்ரக் சந்தநாதிகளையும், காமன் க்ரோதன் முதலிய ஸைநிகர்களையும் மட்டும் துணையாகக்கொண்டு மஹாமோஹன் யுத்தத்துக்கு வந்தால் அவனை ஜயிப்பது ச்ரமமாகவே இருக்கும். காதா சத க்ரந்திலமான அதி பல்பஜமான பரமதங்களைத் தன் கக்ஷியில் சேர்த்துக் கொண்டதனால் அவனை ஜயிப்பது நிரம்பவும் எளிது. வாதமென்பது இப்படியும் அப்படியும் மோதித்துக் கொண்டும் சப்தித்துக் கொண்டு மிருக்கும் அலைகளையுடைய ஸமுத்ரத்துக்கு ஒப்பா கும். அந்த வாத ஸமுத்ரத்தைத் தாண்டுவது, ஜல ஸமுத்ரத்தைத் தாண் டுவது போல் கஷ்டம். இந்த உபபாதநத்தைக் கேட்டு விசாரணையின் சங்கை தெளிகிறது. இந்த ப்ரவேசகத்தின் முடிவில் ச்ரத்தையின் வார்த் தையினால் வெகு அழகான ஒரு விஷயத்தை ஸ்வாமி காட்டுகிறார். இரண்டு தோழிகளும் ஸகிகள். 'ஸகா' என்கிற சப்தம் தோழனைச் சொல்லும். தோழனுக்கு ஏன் 'ஸகா' என்று பெயரென்பதை அறிந்துகொள்ள 'ஸகா' சப்தத்தின் ப்ராசீந வைதிக நிர்வசநத்தைப் பார்க்கவேணும். 'ஸகாயஃ' என்பதற்கு 'ஸமாநக்யாநாஃ' என்பது நைருக்தமான அர்த்தம். இதை ஸ்ரீசாயந பாஷ்யத்தில் பல இடங்களில் காணலாம். ஒரே விதமான புத்திப்ரகாசத்தை உடையவர்கள் ஸகாக்கள். எந்த விஷயத் திலும் அவர்களுக்குத் தனித்தனியாய் ஒரே விதமான அபிப்ராயம் தானாக உண்டாக வேணும். அப்படிப்பட்டவர்களைத்தான் ஸகாக்கள் அல்லது ஸகிகள் என்று சொல்லலாம். இங்கே ச்ரத்தை, ஸமாந சித்த வ்ருத்தித் வம் தான் ஸகித்வம் என்று லக்ஷணம் சொல்லுகிறாள். நம்மிருவர்க்கும் மநோவ்ருத்தி ஒரே விதமாய்த் தானாய் உதித்து ப்ரஸரிப்பதால், 'நீ எனக்கு ஸகி' என்று சொல்லுகிறாள். ஒரு தோழியின் மனத்தில் உதிக்கும் ரஹ ஸ்ய மெல்லாம் மற்றொரு தோழியின் மனத்திலும் தானாகவே உதிக்கு மாகையால், ஒருத்தி மற்றொருத்திக்குச் சொல்லாமலே இருவர் மனத்தில்

உதிப்பதும் இருவர்க்கும் ப்ரகாசமாகும். 'ஜீவ பரமாத்மாக்களை ஸகாக்கள் என்று சொல்லியிருப்பதற்குப் பரமபதத்தில் போல் அவ்விருவரும் எல்லா விஷயத்திலும் ஏகாபிப்ராயர்களா யிருக்கும் ஸ்வபாவ முடையவ ரென்று பாவம். (தொடரும்.)

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

*ராமாநுஜ மதத்தின் சிறப்பு.

யோகாஷீ௩ ௪வி ௨ாஜெவம ௪யயா ௪ஂ௱ித்௩வாரயூா ।

நரவிஹாயெ௩ா ம௱௱ஃ ஸ்ரீ௨ாநு ஜீயா௩ா அ௲தாரகம் ॥

அடியேன் இங்கு விண்ணப்பம் செய்ய எண்ணங்கொண்ட விஷயம் ராமாநுஜ மதம் என்பது. ஸ்ரீ வைஷ்ணவ மதமே ராமாநுஜ மத மென்று வழங்கப்படும். இப்படி இது வழங்கப்படுவது கொண்டு எம்பெருமானார் காலத்துக்குப் பிறகு அவராலேயே இது உண்டாக்கப்பட்டபடியால் இதற்கு இப்பெயர் வழங்கலாயிற்று என்று சிலர் கூறக் கேட்டதுண்டு. அடியேன் அறிந்த வரையில் இதன் உண்மையை விசாரிப்பதுடன் இதன் பெருமையையும் சுருக்கிச் சொல்லுகிறேன்.

நம் இராமாநுச மதமே யாவர்க்கும் உரியதும், மிகப் பழமையானதுமாகும். அம்மை வயிற்றோடு நமன் கயிற்றோடு கட்டுண்டு தட்டித் திரிந்து துன்புறும் உயிர்களுக்கு, அவை இன்பமுற்று உய்யும் வகையை நன்கு உணர்த்துவதும் இதுவே.

இது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையே கொண்டதாகும்; ஸ்ரீ வைஷ்ணவர்கள் கைக்கொண்ட மதமும் இதுவேயாம். இவர்கள் கைக்கொண்ட தர்மங்கள் பாகவத தர்மங்கள் என்று புராணங்களால் அறிகிறோம். விசிஷ்டாத்வைதம் என்பது, ச்ருதியில் 'ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம' என்று தொடங்கிப் பல இடங்களில் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ளது. வேதங்கள்

* இது, ஸ்ரீ. உப. வித்வான் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி தமையன் குமாரரும் அந்தேவாஸியுமான வெங்கடாசார்ய ஸ்வாமியால், வேலூர் மஹா ஸங்கத்தில் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

இந்த மதத்தை ஒருமிடமாய் ஆதரித்துப் பேசினாலும், பலருடைய மதி பேதத்தினால் அது பலவகைப்பட்டு, வேதத்தின் உட்கருத்தை உள்ளபடி அறிவது அருமையாகவே முடிகிறது. அதன் கருத்தை ஆராய்ந்து உரைத்த ரிஷிகள் வாய்க்கொண்டு அதனை நன்கு அறியலாகும். ஸ்ரீ பாரதம் ஆரண்ய பர்வத்தில் இம்மதம் தெளிவாய் ஓதப்பட்டுள்ளது. ச்வேத கேது என்னும் ரிஷி, தம்முடைய மஹிஷி ஆஸந்ந ப்ரஸவையா யிருக்க, அதற்காக வேண்டி அர்த்தார்ஜநத்தைக் கருதி ஜநகர் பன்னிரண்டு ஆண்டு யாகம் தொடங்கியது கேட்டு அவ்விடம் சென்றார். அங்கு வருணனுடைய ப்ருத்யன் ஒருவன் ஒரு கார்யமாக வந்திருந்தான். அவன் அங்கு வரும் பெரியோரை வேதாந்த வாதப்போருக்கு அழைத்தான். போரில் அவனுக்குப் பதில் சொல்ல முடியாது விழிக்குமவர்களை அவன் அங்குள்ள தடாகத்தில் அமிழ்த்திவிடுவது வழக்கம். அவர்களில் இவரும் ஒருவராதலால் குறிப்பிட்ட காலத்தில் இவர் ஊர் திரும்ப முடியாதவரானார். பார்யையும் ப்ரஸவித்தாள். அது புருஷ ப்ரஜை. அவரே அஷ்டாவக்ரர். அவர், ஸகல வேத சாஸ்த்ரங்களையும் அப்யஸித்தார். அவருக்குப் பன்னிரண்டு ஆண்டு நிறைந்தது. அவர் ஒருநாள் தமது தந்தையைக் குறித்துத் தம்தாயினிடம் கேட்டார். அவளும், நடந்த வ்ருத்தாந்தத்தை நவின்றாள். உடனே அஷ்டாவக்ரர் ஜநகருடைய யாக பூமியை அணுகி அவரை நோக்கி "நான் வந்தியோடு வாதப்போருக்கு வந்தவன்; 'ப்ரஹ்மாத்வைதம் கதயிதுமாகதோஸ்மி' [வேதங்களில் ஓதப்படுகிற ப்ரஹ்மாத்வைதம் இதுவே என்று தெளிய உரைக்கவந்தவன்;] வந்தியைக் காட்டாய்" என்றார். ஜநகர் இவரது வடிவும் வயதும் கண்டு, "சிங்கம் போற் சிறந்து நிற்கும் வந்தியுடன் வாதம் செய்ய வல்லனோ இவன்? இவனுக்குப் பூர்வமீமாம்ஸா பரிசயத்துக்கே அவகாசமில்லையே! ப்ரஹ்ம வாதத்தில் பேசும் திறமையை இவன் எங்ஙனம் அடைவன்? இதை ஆராய்ந்து பார்த்தே வந்தியோடு வாதப்போர்க்கு இவனை விட வேண்டும்" என்று நினைத்து, பூர்வ மீமாம்ஸையில் இவனுக்கு உண்டான அறிவைச் சோதிக்க வேண்டி ஒரு ச்லோகத்தால் ஒரு ப்ரச்நத்தையும், பிறகு உத்தர மீமாம்ஸையிலுள்ள அறிவை நோக்கும் பொருட்டு இரண்டு ச்லோகங்களால் சில ப்ரச்நங்களையும் ப்ரவேச பரீக்ஷா ரூபமாகச் செய்து தெளிந்து, பிறகு வந்தியோடு வாதப்போருக்கு விடுத்தார். அஷ்டாவக்ரர் வந்தியோடு வாதாடி, முடிவில் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமே உயர்ந்ததென்று உறுதி செய்து, மற்றவைகளுக்குள்ள தோஷங்களையும் எடுத்துக் காட்டினார். பின்னும், இந்த ரஹஸ்யம் அறிந்தவரும் அறியத்தகுந்தவரும் சிலர் தானென்றும் கூறி, இதன் அருமையை உள்ளபடி பதினான்கு ச்லோகங்களால் தெளிய உபபாதித்துக்

காட்டியிருக்கிறார். ஆகையால் விசிஷ்டாத்வைதம் நேற்று இன்று உண்டானதல்ல; அநாதியே.

இதற்கு ராமாநுஜ மதமெனப் பெயருண்மையானாலும், இது அநாதி என்பது நன்கு விளங்கும். படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களுக்குரிய ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்களில் ப்ரதாநரான விஷ்ணுவுக்குச் சில பரிகரங்கள் உண்டு. அவர் பரிகரங்களென்று காட்டக் கூடிய சில வெளிப்படையான அடையாளங்களும் அவர்களுக்குத் தனியாகச் சில கொள்கைகளும் இருக்கின்றன. அப்பரிகரங்களே வைஷ்ணவர்கள். அவர்களுக்குள்ள அடையாளங்களே வைஷ்ணவர்களுக்குரிய சிந்ஹங்கள்; அவர்கள் கொள்கையே ஸ்ரீ வைஷ்ணவ மதம் என்பது. படைப்புத் தொழிற் கடவுளான ப்ரஹ்மா, விஷ்ணுவின் நாபீ கமலத்தினின்று தோன்றியதால் பிள்ளையாகிறார். உலகம் அழிவதற்காக அவ்வைஷ்ணவனிடம் தோன்றிய சிவ பெருமானும் வைஷ்ணவனன்றோ? ஒரு வைஷ்ணவன் உலகம் படைப்பதும், நடுவில் விஷ்ணுவே புகுந்து அவ்வுலகைக் காப்பதும், முடிவில் வைஷ்ணவன் ஒருவனே புகுந்து உலகை அழிப்பதுமாயிருக்க, வைஷ்ணவ மதம் இன்று தான் முளைத்தது என்று யார் கூறத் துணிவர்?

இனி, இவர்கள் கொள்கையும் வேஷமும் வேறுபட்டிருக்குமெனக் கருதுவதும் பொருத்த மற்றதேயாம். "ஜாயெய வைஷ்ணவத்வம் து ஸவஜன்மஸு கேவலம்" [பிறவிதோறும் நான் வைஷ்ணவனாக வேண்டும்] என்று ஜிதந்தே ஸ்தோத்ரத்தில் ப்ரஹ்மா விஷ்ணுவை நோக்கிக் கூறியுள்ளார். வைஷ்ணவ மதத்தை விரிய உரைக்கப் புகுந்த பாஞ்சராத்ரத்தை விஷ்ணுவினிடம் உபதேசம் பெற்றுப் பிறர்க்கும் தெளிய ஆதியில் உபதேசித்ததும் ப்ரஹ்மாவே. ருத்ரன் அந்தத் தர்மத்தை நாரதருக்கு உபதேசித்திருக்கிறார். இதனை லக்ஷ்மீ இந்த்ரனுக்கு உபதேசித்ததாக லக்ஷ்மீ தந்த்ரத்தில் சொல்லியிருக்கிறது. ஆகவே இவர்களும் வைஷ்ணவர்களே யாவர்.

கண்ணன் த்வாரகையை விட்டு ஹஸ்திநாபுரம் சென்றபோது, ஒரு சமயம் த்வாரபாலகர் கண்ணன் வெளியேறின்மை கேட்டு, ஆரேனும் விரோதிகள் உட்புகுவரேல் என் செய்வதென்றஞ்சி, கண்ணன் கழலிணையை வணங்கி, "தாம் மீண்டு வருமளவும் உள்ளே புகவிட வல்லார் யார்? விலக்க வல்லார் யார்?" எனக்கேட்க, கண்ணன் "அசக்ராங்கிதா: ஸர்வே வைஷ்ணவா யாவதாகமநம் மம। நாசக்ராங்கிதா: ஸர்வே வைஷ்ணவா யாவதாகமநம் மம॥" [நான் வருமளவும், திருவிலச்சினை தரித்துள்ளார் வரில் உள்ளேவிடுக; அஃதில்லாரை விலக்கிவிடுக] என்று அருளிச் செய்தான். இதனால் திருவிலச்சினை முதலிய சிந்ஹங்கள் முந்தியே உள்ளனவெனக் கொள்ளல் வேண்டும்.

இதில் "நாஊ-ஹிருதாஃ" இத்பாதியாலே ஒரு விசேஷமுண்டு. அதாவது: "சக்ராங்கந மில்லாதார் வரில் அவர்களைப் பாவ சோதநம் செய்து, அவர் சுத்த பாவராகில் உள்ளே விடுக; ஹ்ருதயத்திலும் வைஷ்ணவ சிந்ஹம் காணு தொழியில் அவனை விலக்குவாய்" என்ற கருத்துடன் கண்ணன் உரைத்தானுகக் கொள்ளல் வேண்டும். ஆக, இவ்வடையாளங்களை வைஷ்ணவமெனப் பிறர் அறிய வேண்டும். ஆதலால், இவற்றைக் கொண்டு நம்மை வைஷ்ணவரெனப் பிறர் அறிய வேண்டுமென்கிற ஊற்ற மற்றது காரணமாய் ஸ்வ வேஷம் கொள்ளா திருப்பதும் பொருந்தும். ஆகையால் ருத்ரன் வேஷமிழந்தது குற்றமாகாது.". "வைஷ்ணவாநாம் யதா ஶம்ஹு:" [வைஷ்ணவர்க்குள் ருத்ரன் எப்படிச் சிறந்தவனே] என்று ரிஷிகளும் பேசிப் போந்தனர். இந்த ருத்ரனுக்கு அடிமை பூண்ட சில பெரியோர், ருத்ரன் தரித்த வேஷத்தைத் தரித்தாலும், அவர்களும் வைஷ்ணவர்கள் என்று சொல்லத் தட்டில்லை. வைஷ்ணவர்களுக்குள் முடிந்த நிலம் ஆசார்யனைப்பற்றியதேயாகும். ஆகையால் ஆசார்யன் விரும்பியதே சிஷ்யன் கைக்கொள்வது தக்கது. "யாந்யஸ்மாகம் ஸுசரிதாநி, தாநி த்வயோ பாஸ்யாநி; நோ இதராணி" என்று ஆசார்யன் சிஷ்யனை நோக்கி உபதேசித்த முறையை உபநிஷத்தும் காட்டிக் கொடுத்தது. அபிமதார்த்தே ஷஷ்டியாகையால் ஆசார்யன் விரும்பியதையே சிஷ்யன் செய்யக்கடவன். ஆகையால், அவர்கள் ருத்ரனை ஆசார்யனுகக் கொண்டவர்கள். ஆகையால் அவன் விரும்பிய வேஷத்தைக் கைக்கொள்வது, அப்பெரியோர்க்கு வைஷ்ணவ தர்மத்தில் உள்ள ஊற்றத்தைத் தெரிவிப்பதாகும். இதனுலும் வைஷ்ணவ மதம் அநாதியானது என்று ஏற்படுகிறது.

இன்னும்: நமனும் தன் தூதுவரைக் கூவிச் செவிக்குச் சொன்னதொரு செய்தியைச் சோதித்தாலும் இம்மதத்தின் அநாதித்வம் விளங்கும். நமன் தூதுவரைக் கூவி அவரது செவிகளில் "மதுவை வதித்தவனது திருவடிகளில் பரந்யாஸம் செய்திருக்குமவர்கள்பால் செல்வீரேல், நான் மது பட்டது படவேண்டி வரும். நான் அவர்களுக்கு நியாமகனல்லேன். பாபிகளுக்கு அமையப் பெற்றேன்" என்று சொல்ல, அவர்களும் வைஷ்ணவர்களை எவ்வாறு அறிவது என்று கேட்க, "யெ கண்டமூலந்த்ருஷஹீநபி நாக்ஷாமூலா" என்று தொடங்கி வைஷ்ணவ லக்ஷணத்தை நன்கு விளக்கிக் காட்டினுன். அறிவிலார்க்கு உணர்த்த வேண்டியே அவ்வடையாளங்கள் ஆதரிக்கப்படும். ஆகவே அதில் ஊற்ற மில்லாமை ருத்ரனுக்குக் குற்றமாகாது.

ஆகையால், உலகைப் படைக்குமவனும் அழிக்குமவனும் வைஷ்ணவனுய், நடுவில் காக்கப் புகுந்தவன் விஷ்ணுவாயுமிருக்க, இம்மதம் நேற்று இன்று உண்டானதென்று சொல்வது எங்ஙனம் அடுக்கும்? உலகம் உண்டானது முதல் இம்மதம் உண்டாயிருக்கிறது என்று சொல்வதே சாலப் பொருத்த முடையது. (தொடரும்.)

ஸ்ரீ:।

ஸ்ரீ உதே ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய பரப்ரஹ்மணே நம:

தர்ம சாஸ்த்ரங்களும் தத்கால நிலைமையும்.

[ஸ்ரீ. உப. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சி.]

அலௌகிகமாகவும் ச்ரேயஸ் ஸாதகமாகவுமிருப்பது தர்மம் என்று சொல்லப்படுகிறது. த்ரிவர்க்கங்களுக்குள் இந்தத் தர்மபுருஷார்த்தமொன்றே சிறந்தது. புருஷர்களால் வேண்டப் படுகிறவைகளாக இருப்பதால் புருஷார்த்தங்களென்று தர்மார்த்த காம மோக்ஷங்கள் சொல்லப்படுகின்றன. தர்மத்திற்கு ஸாதகங்களாக இருந்தா லொழிய அர்த்த காமங்கள் புருஷார்த்தங்களாகா. உலகத்தைத் தரிப்பதாலும் உலகத்தோரால் தரிக்கப்படுவதாலும் தர்மம் என்று சொல்லப்படுகிறது. இது 'த்ரு' என்கிற தாதுவை மூலமாகக் கொண்டு ஏற்பட்ட சப்தம். 'தாரதி, த்ரியதே' என்று இருவிதமாக அறிஞர்கள் இந்தச் சொல்லுக்கு அவயவார்த்தம் கூறுகின்றனர். இப்படிப்பட்ட மஹிமை வாய்ந்துள்ள தர்மத்தை ப்ரதிபாதிக்கிற சாஸ்த்ரம் தர்ம சாஸ்த்ரமென்று கூறப்படுகிறது. இந்தத் தர்ம சாஸ்த்ரங்களை இயற்றினவர் மஹர்ஷிகள். மந்த்ரங்களைத் தபோபலத்தால் யோக தசையில் கண்டறிகிறவர்கள் ரிஷிகளென்று எண்ணப் படுகிறுர்கள். 'தஷாக்ஷூரஷிணா' என்பதிலும், இன்னும் இதுபோன்ற வாக்யங்களிலும் உள்ள 'ரிஷி' சப்தம் வேத பரமென்று அபிஜ்ஞர்கள் சொல்லி இருப்பதால், இந்த சப்தம் வேதத்தையும் சொல்லும். இந்தத் தர்ம சாஸ்த்ரங்கள் வேதத்திற்கு உபப்ருமஹணங்கள். எல்லா வேதங்களையும் அவைகளின் அர்த்தங்களையும் அறிந்தவர்களும், தமது யோக மஹிமையினல் நேரில் கண்டறியப் பட்டிருக்கிற வேதங்களின் தத்வார்த்தத்துடன் கூடியவர்களுமான மஹான்களுடைய வாக்யங்களால், தன்னுல் அறியப்பட்டிருக்கிற ஸந்திக்த வேத வாக்யார்த்

தங்களை விசதமாகச் செய்துகொள்ளுதல் 'உபப்ரும்ஹணம்' என்று சொல்லப்படுகிறது. கர்ம காண்டம் ப்ருஹ்ம காண்டமென இருவிதமாகப் பகுக்கப் பட்டிருக்கிற வேதத்தின் முந்தின பாகமாகிய கர்ம காண்டத்திற்குத் தர்ம சாஸ்த்ரங்கள் உபப்ரும்ஹணங்கள். ச்ருதி மூலங்களாக இருப்பதால் இவைகள் ப்ரமாணங்களாக ப்ரகாசிக்கின்றன. அத்யயந மார்க்கத்தில் நிலைபெறுமல் படந பாடநங்களினின்று நழுவி ஒளிந்திருக்கிற வேத மந்த்ராநுபூர்வியைத் தத்தம் தபோபலத்தால் உண்டான ஜ்ஞாநக் கண்ணுல் கண்டறிந்து, தாங்கள் கண்டவண்ணமே அந்த ச்ருதிகளின் அர்த்தங்களை உலகத்திலுள்ளோர் உஜ்ஜீவிப்பதற்காக ரிஷிகள் பரம கருணையால் ஸ்ம்ருதி ரூபமாக வெளியிட்டார்கள். வேத மூலங்களாக இருப்பதனுலேயே இவைகள் ப்ரமாணங்கள். இந்த விஷயத்தில்

'வெஷொபவிஜெொயஃ–உஃஅரூ ஸாதிஸீஜெ ஆ தவிஷாம் ।
ஞூஆர்ஜெவ ஸாயஃநாஜாதஹ்ஷிரெவ அ ॥'

என்கிற அபியுக்தீ வசநம் ப்ரமாணம். ஸ்பர்த்தை; விப்லவம், விப்ரலம்பம், என்னும் இவைகளை அடியாகக்கொண்டு எழுதப்பட்டிராமையால் தர்ம சாஸ்த்ரங்கள் முற்றிலும் ப்ரமாணங்களே. தர்ம சாஸ்த்ரகாரர்களுக்குள் மிக்க மேன்மை வாய்ந்தவர் மநு ஒருவரே. 'யஜெ்கிஞ உநுஃவடிசி தலெஷஜம்' என்று சொல்லுகிற ச்ருதியானது இந்த விஷயத்தில் முக்ய ப்ரமாணம். இவ்விதமே நிகரற்ற தபோபல முள்ளவர்களான பராசரர், வ்யாஸர், வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளும் வேதபுருஷனுல் ப்ரசம்ஸிக்கப் பட்டிருக்கிறுர்கள். ஸ்ம்ருதிகளென்று சொல்லப்படுகிற தர்ம சாஸ்த்ரங்கள் வேதங்கள் போல வித்யைகளுக்கும் தர்ம ஜ்ஞாநங்களுக்கும் ஸ்தாநங்கள்; (அதாவது ப்ரமாணங்கள்). திவ்ய சக்ஷுஸ்ஸுள்ளவர்களான மஹாபுருஷர்களாதலால் இந்த மஹர்ஷிகளை ஸாமாந்ய புருஷர்களென்று எண்ணுவது அஜ்ஞாந க்ருத்யமாகும். மாநவ தர்மங்கள் க்ருதயுகத்திலும், கௌதம தர்மங்கள் த்ரேதா யுகத்திலும், சங்கலிகிதர்களால் சொல்லப்பட்டிருக்கிற தர்மங்கள் த்வாபர யுகத்திலும் ப்ரமாணங்களாக ஆதரிக்கப்பட்டு வந்தனவென்று தெரியவருகிறது. இக்கலியுகத்திலோ பராசர ஸ்ம்ருதி வசநங்கள் ப்ரமாணங்களென்று அறிஞர்கள் கூறுகின்றனர். ப்ராயச்சித்த விஷயத்தில் பராசர ஸ்ம்ருதியும், தாய பாக விஷயத்தில் யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியும், மற்ற விஷயங்களில் மநு ஸ்ம்ருதியும் ஆதரிக்கத்தக்கவை என்றும் அபியுக்தர்கள் பகர்கின்றனர்.

அப்படிப்பட்ட தைவத் தன்மை வாய்ந்தவர்களான மஹர்ஷிகள் எங்கே? அல்பஜ்ஞர்களாகவும் அசுத்தர்களாகவும் அஜ்ஞாநாந்த

காரத்தால் கவரப்பட் டிருக்கிற உள்ளத்துடன் கூடியவர்களான நாம் எங்கே? தேஜஸ் ஸம்பந்த மிருப்பதனுலும் 'பதங்க' சப்தத்தால் சொல்லப்படத்தக்க தன்மை இருப்பதாலும் ஸூர்யனும் மின்மினிப் பூச்சியு மொன்றே என்று சொல்லுகிறவனுடைய வசநமெவ்வாறு பரிஹஸிக்கத் தக்கதோ, அவ்வாறே மநுஷ்யர்களாக இருப்பதாலும் படித்துப் புத்திமான்களாக இருப்பதலும், நமக்கு இருப்பது போல அவர்களுக்கும் கோத்ர ஸூத்ர ப்ரவர குலாசாரங்கள் இருந்தனவாகத் தெரியவருவதாலும், நாமும் முந்தி இருந்த ரிஷிகளும் ஸமாநர்களே என்று சொல்லுகிற இக்காலத்திய நவீந மேதாவிகளின் வசநம் நகைப்பதற்கு இடமுள்ளதாக இருக்கிறது. மாதங்க மெங்கே? மசகமெங்கே? இவ்விரண்டையும் உணர்த்துகிற சப்தங்கள், மகாரத்தால் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாலும் இவ்விரண்டு வஸ்துக்களுக்கும் நிறம் கருப்பாக இப்பதாலும் இரண்டையும் ஸமமென்று எண்ணலாமோ? சிகையையும் யஜ்ஞோபவீதத்தையும் ப்ராஹ்மண சிந்ஹங்களாகப் பெரியோர்கள் சொல்வார்கள். இவற்றுள் முதன்மை வாய்ந்த சிகையானது பெரும்பான்மையாக ஸ்வரூப ஹாநியை அடைந்து விட்டது. அப்ராஹ்மண ஜாதியிலிருக்கிற சைவ சூத்ரர்கள் எவ்வளவோ ஒழுங்காக இருக்கிருர்கள். அவர்கள் ஸ்நாநம் செய்வது, பஸ்ம தாரணம் செய்வது, சிகையைச் சரியாக வைத்துக் கொள்வது, முகத்தை மாத்ரம் முண்டநம் செய்து கொள்ளாமல் கழுத்துக்கு மேல் ஸமக்ரமாக க்ஷௌரம் செய்து கொள்வது, இவ்விதமான நல்ல ஆசாரங்களை ச்ரத்தையுடன் பாதுகாத்து வருகிருர்கள். அவர்கள் ப்ராஹ்மண ஜாதிக்காரர்களுக்கு உரிய தர்மங்களையும் ஆசாரங்களையும் அநுஷ்டிக்கவும், ப்ராம்ஹணர்கள் ப்ராதஸ்நாநம் ஸந்த்யாவந்தநம் வேதாத்யயநம் ஔபாஸநம் சௌசாசாரம் முதலியவைகளை இழந்து பாமரர்கள் போல் இருக்கவும் காண்கிறோம். இதெல்லாம் கலிமஹா புருஷனுடைய மஹிமை தங்கிய ஆட்சியின் வைபவமே.

இக்காலத்திய ப்ராஹ்மணர்களுக்குத் தம் மதம் தம் ஆசாரம் தமது தர்மம் ஒன்றுமே தெரியாது. இதற்குக் காரணம் அர்த்தார்ஜநமே ப்ரதாநமென்கிற எண்ணமும் அதற்கு ஸாதநமென்று எண்ணப்பட்டிருக்கிற தேசாந்தர பாஷாபரிசயமுமே. திமிங்கல ந்யாயத்தால் பலமுள்ள போலி பாஷையினுல் உத்தமமான பலஹீந பாஷையும் இந்தப் பலஹீநமான பாஷையைச் சார்ந்த தர்மாசரணமும் ஸதாசாரமும் ஆஸ்திகதையும் முற்றிலும் கவர்ந்து கொள்ளப்பட்டு விட்டன. ரிஷிகளின் வம்சத்தில் தோன்றினவர்களாகவும் தொன்று தொட்டுத் தொடர்ந்து வருகின்ற ஆர்ஷ ஸந்ததி, ரக்த ஸம்பந்த முள்ளவர்களாகவும் அமாநுஷ சக்தியுள்ள மஹர்ஷிகளின் திவ்ய சக்ஷுஸ்ஸை மந்த்ர பலத்

தாலும் ஆசாரத்தாலும் சீலத்தாலும் அடைவதற்குத் தகுதியுள்ளவர்களாகவும் இருந்தும், ஸ்வதர்ம மின்னதென்று அறியாமல் பேதைகளாகப் பிறரிடத்தில் கைகட்டி ஸேவகம் செய்து, அதனுல் கிடைக்கும் ஸ்வல்ப தநத்தைப் பரம புருஷார்த்தமென்று நினைத்து உதர பூரணம் செய்து வருகிற ப்ராஹ்மணர்களின் துர்த்தசையை அந்தோ! நான் என்னென்று சொல்வேன்! இவர்கள் இப்படி ஸ்வதர்மத்தை விட்டதால் தான் எல்லா அநர்த்தங்களும் விளைகின்றன. உயிர் போகிறதாக இருந்தபோதிலும் ஸ்வதர்மத்தையும் ஸ்வமதத்தையும் ஸ்வாசாரத்தையும் கைவிடாமல் உறுதியுடன் இவர்கள் தழுவி வருவார்களேயாகில் இவர்களுக்கு ஒரு பொழுதும் ஒரு விதமான அவ்த்யமும் வாராது; இது திண்ணம். இக்காலத்திலுள்ள ப்ராஹ்மணர்களுக்குக் காலதோஷத்தால் தங்கள் தேசத்திய நடை உடை பாவனைகளிலும் தேசாசாரத்திலும் குலாசாரத்திலும் ஸ்வாசாரத்திலும் அருவருப்பும், ஜ்ஞாந நிதிகளாக இருந்த முன்னோர்களிடங்களில் அலக்ஷ்ய புத்தியும், தங்களிடத்தில் ஸர்வஜ்ஞதா புத்தியும், பரதேசஸ்தர்களிடத்தில் தேவதா புத்தியும், பரிஹஸிக்கத்தக்கதான அவர்களுடைய நடை உடைபாவனைகளில் கௌரவபுத்தியும் நாகரீக புத்தியுமுண்டாய் இருக்கிறது. அதனுல் ராஜாங்கத்தில் உயர்ந்த ஸ்தாநத்தைப் பெற்றும் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்க சொற் சாதுர்யத்தைப் பெற்றும், பொது ஜனங்களால் புகழத்தக்கவர்களாக இருக்கிற ப்ராஹ்மணர்கள் அநேகமாக ப்ராஹ்மண தர்மத்தை வெறுத்தும், பரதேசஸ்தர்களுடைய தர்மத்தையும் ஆசரணத்தையும் கைப்பற்றியும், ஸ்வஜாதீயர்களேயும் தன் முன்னோர்களுடைய நல்ல கொள்கைகளையும் இகழ்ந்து பேசியும், ஆஹார வ்யவஹாரங்களில் ச்வேத த்வீபத்தில் பிறந்தவர்கள் போலவே ஆய்விட்டார்கள்.

இப்படிப்பட்ட அநர்த்தத்தினுல் ப்ராஹ்மண்யமே அழிந்து போகக் கூடிய காலம் வந்து விட்டது. ஸர்வஜ்ஞர்களான மஹர்ஷிகள் உலகத்திற்குச் சாச்வத ச்ரேயஸ்ஸை நிலைநாட்ட எண்ணம் கொண்டு, மஹநீயங்களான தர்ம சாஸ்த்ரங்களைச் செய்து, ஹிதாஹிதங்களையும் தர்மாதர்மங்களையும் புண்ய பாபங்களையும் விதி நிஷேதங்களால் நன்கு எல்லோரும் அறியுமாறு துலக்கிக் காட்டி இருக்கிறுர்கள். இந்த உலகம் ஸ்திரமாக இருப்பதற்குத் தர்மம் ஒன்றே ஆதாரம். உலகம் எப்படிப் போனுலும் தர்மத்தை மாத்ரம் ஒருவரும் கைவிடக்கூடாது. 'धर्मो रक्षति रक्षितः।' என்கிறவசநப்படி தர்மம் ரக்ஷிக்கப்பட்டால் அது உலகத்தோர் அனைவரையும் பாதுகாக்கும்; இந்தத் தர்மத்தை அவமதித்தால் உலகம் அழிந்துவிடும். இப்படி இருக்க, தர்ம நிர்ணயகங்களான சாஸ்த்ரங்கள் அப்ரமாணங்களாகப் போகும் ஸம

யம் வந்துவிட்டதே என்று ஸாதுக்கள் வ்யஸநமடைகிறார்கள். தர்ம ஸ்தா பகமான ராஜாங்கமே தர்மத்தை வெறுக்குமேயாகில் யார் இந்த அநர்த்தத்தை நீக்கத் திறமையுள்ளவர்? இந்த விஷயத்தில் நம்மவர்களே ராஜாங்கத்துக்கு ஸாதகர்களாக இருக்கிறார்கள். ராஜ ஸபையில் ஸ்தாநம் பெற்றிருக்கிற மஹா ஜந ப்ரதிநிதிகளான மஹான்கள், 'ஆதி காலங்களில் அந்தந்த ஸமயத்திற்குத் தக்கபடி ரிஷிகள் தர்ம சாஸ்த்ரங்களை எழுதின மாதிரியாக நாமும் இக் காலத்திற்கு ஏற்றவாறு ஒரு தர்மசாஸ்த்ரத்தை ஏற்படுத்த வேண்டும். பொது ஜநங்களுக்கு எது பெரும்பான்மையாக ஸம்மதமாக இருக்குமோ, எது ப்ரஜைகளுக்கு க்ஷேமகரமோ, எதை அநுஷ்டித்தால் தேசத்தில் ஆரோக்யமும் ஸௌக்யமும் பெருகுமோ, அதுதான் சிறந்த தர்மமாகும். ஆதலால் பால்ய விவாஹம் அக்காலத்தில் எழுதப்பட்ட தர்மசாஸ்த்ரங்களால் புகழப்பட்டிருந்தாலும் அது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. ப்ரௌடா விவாஹமே இக்காலத்திற்கு உரியது. தம்பதிகளுடைய சேர்க்கை வயதும் அவ்யவஸ்திதமாக இருக்கக்கூடாது. பெண்களுக்கும் ஆண்களுக்கும் முறையே பதினாறு இருபது வயதுகளுக்கு மேற்பட்டே இருக்க வேண்டும்' என்று சொல்லுகிறார்கள். உலகத்திற்கு நன்மையை விளைவிக்கக்கூடிய எவ்வளவோ விஷயங்கள் ஆஸ்திக்யம் முதலிய சிறந்த குணங்களை உடைய மஹா ஸபாஸ்த்தர்களால் மஹா ஸபையில் பேசிச் சட்டமாகக் கொண்டுவர வேண்டியிருக்க, அவைகள் அனைத்தையும் புறக்கணித்து, பால்ய விவாஹ விஷயமான மசோதாவை விரைவாக லௌகிகர்கள் கூடிய ஒரு ஸபைக்குக் கொண்டுவந்து விசாரத்திற்கு நீண்ட அவகாசத்தைக் கொடாமல் இதைச் சட்டமாகவு மாக்கி, ராஜப்ரதிநிதி ஸம்மதத்தையும் பெற்றுவிட்டார்கள். தர்ம ஸ்தாபக ஸபையிலுள்ள ஸப்யர்கள் எவ்வித யோக்யதை யுள்ளவர்களென்று ராஜாங்கத்தார் கவனம் செலுத்தவில்லையே! வேத சாஸ்த்ரங்களையும் தர்ம சாஸ்த்ரங்களையும் அறிந்திருப்பதுடன், தேசத்திலுள்ள ஜநங்களின் ஆசாரங்களையும் தேசாசார குலாசார ஜாத்யாசாரங்களையும் அவர்கள் அறிந்திருக்க வேண்டும். அன்னோர் ஆஸ்திகர்களாகவும், தார்மிகர்களாகவும், சாந்தர்களாகவும், காம க்ரோத லோபங்களுக்கு வெகுதூர தேசஸ்தர்களாகவும் ஆக்ரஹமற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட மஹான்கள் மூன்று அல்லது நான்கு பேர்களோ அல்லது அத்யாத்ம சாஸ்த்ர பாரங்கதன் ஒருவனோ இருந்தாலும் அது ஸபையாகும். அந்த ஸபையின் தீர்மாநத்திற்குக் கௌரவமுண்டு. அந்தத் தீர்மாநம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக ஆகும். அப்படிக்கின்றி, தர்மங்களை அறியாதவர்களாகவும், ஆசாரத்திற்கு வைதேசிகர்களாகவும் இருக்கிற தேஹபாரம் சிரோபாரமுள்ள ஆயிரம் மனிதர்களிருந்தாலும், அது ஸபையாகாது. அந்த ஸபையில் ஏற்படும் தீர்

மாநம் தர்ம சாஸநமுமாகாது. அதைஅநுஷ்டிக்காத காரணத்தால் ஒரு ப்ரத்ய வாயமும் உண்டாகாது. ராஜகீய நிர்ப்பந்தத்தால் ஏதாவது ப்ரஜைகளுக்கு ஹிம்ஸை ஏற்பட்டாலும் அது பரமாநந்தமாகவே பாவிக்கத் தக்கது. '𑌵𑍇𑌦𑍇 𑌸𑌂𑌜𑌾𑌤𑌖𑍇𑌦𑍇 𑌮𑍁𑌨𑌿𑌜𑌨𑌵𑌚𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌵𑌮𑌾𑌨𑍇 𑌸𑌙𑍍𑌕𑍀𑌰𑍍𑌣𑍇 𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑍇 𑌸𑌤𑌿 𑌤𑌦𑌨𑍁𑌗𑍁𑌣𑍇 𑌨𑌿𑌷𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇 𑌪𑍁𑌰𑌾𑌣𑍇 । 𑌮𑌾𑌯𑌾𑌵𑌾𑌦𑍇 𑌸𑌮𑍋𑌦𑍇 𑌕𑌲𑌿𑌕𑌲𑍁𑌷𑌵𑌶𑌾𑌚𑍍𑌛𑍂𑌨𑍍𑌯𑌵𑌾𑌦𑍇 𑌵𑌿𑌵𑌾𑌦𑍇 𑌧𑌰𑍍𑌮𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌯𑍋𑌽𑌭𑍂𑌤𑍍 𑌸 𑌜𑌯𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌾𑌵𑌤𑌾𑌰𑌃' என்கிற ச்லோகார்த்தத்தின்படி அதர்மம் மேலிட்டுத் தர்மம் குன்றி ஸாதுக்கள் வாட்டமுற்றிருக்கிற இத்தருணத்தில் தர்ம ஸம்ஸ்தாபநத்திற்காகப் பகவதவதாரத்தை எல்லோரும் வேண்டவேண்டும். இந்த விஷயத்தில் அசக்தர்களான நாம் அநுசோசநத்தை மாத்ரம் செய்யத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம். செய்கையினுல் இதற்கு ஒருவித பரிஹாரத்தையும் செய்வதற்கு நாம் தகுதியுள்ளவர்கள் அல்லோம். இதம்பரமாகத் தர்ம ஸம்ஸ்தாபநார்த்தமாக ஆசார்ய பீடத்தில் நிலைபெற்றுத் தர்ம ப்ரவசநங்களைச் செய்தும், அத்யாத்ம சாஸ்த்ரார்த்தங்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் பக்தர்களுக்கு உள்ளத்தில் ஊன்றும்படி பரம க்ருபையினுல் உபதேசித்தும், தன் அநுஷ்டாநங்களால் சிஷ்டர்களைக்கொண்டு ஸத்தர்மங்களை அநுஷ்டிக்கச்செய்தும், அவர்கள் முகமாக மற்றவர்களையும் நல்வழிப்படுத்தியும், லோகோத்தாரணார்த்தமாகவே ஜ்ஞாந பீடத்தில் நிலை பெற்றிருக்கிற மடாதிபதிகளும் தார்மிகர்களான ப்ராஹ்மணப்ரபுக்களும் ஸ்வதேச நன்மையையும் ஜந ஸமூஹத்தின் நோக்கத்தையும் பரோபகாரத்தையும் எதிர்பாராநின்ற ஸ்வதேச ராஜாக்களும் ஜமீன்தாரர்களும் பாளயதாரர்களும், '𑌜𑌨𑌨𑍀 𑌜𑌨𑍍𑌮𑌭𑍂𑌮𑌿𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌾𑌦𑌪𑌿 𑌗𑌰𑍀𑌯𑌸𑍀' என்கிற வசநத்தின்படி இந்திய நாட்டுக்கு இந்தப் பால்ய விவாஹ கண்டந சட்டத்தால் ஏற்பட்டிருக்கிற தர்ம லோப ரூபமான ஆபத்தினின்று ஜநங்களைக் காப்பாற்றுவதற்காகத் தக்க முயற்சியைச் செய்து, இந்தியா சக்ரவர்த்தியினிடத்திலோ, ந்யாய மஹா ஸபையிலோ தக்கபடி தர்ம லோப பரிஹாரத்திற்காக வ்யவஹாரத்தைத் தொடர்ந்து, விடா முயற்சியினுல் பல ஸித்திவரையில் ஊக்கத்தைக் கைவிடாமல் உழைத்து, இந்தியா சக்ரவர்த்தியின் மனத்தில் இந்த நூதநமான சட்டம் அந்யாய்யமானதென்று படும்படி செய்து, இதை ரத்து செய்யும்படி செய்வித்து, ஸநாதந தர்மத்தை நிலைநாட்ட வேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறுர்கள். சாந்திக பௌஷ்டிக கர்மங்களும் இந்த அநிஷ்ட நிவ்ருத்திக்காகச் செய்யப்படவேண்டும். ஜபம், தபஸ், அநுஷ்டாநம் முதலியவைகளால் ப்ராஹ்மணர்கள் தமது திவ்ய சக்தியை ப்ரகாசிக்கச் செய்து, உலகத்

திற்கு நன்மையைப் பயப்பதற்கு இதுவே நல்ல ஸமயம். இதற்கேற்ற வாறு, தற்காலம் பாலக்காடு 'நூரணி' க்ராமத்தில் ஏராளமான வைதிக ப்ராஹ்மணர்கள் ஒன்று சேர்ந்து, 1331 ருத்விக்குக்களால் நிறைவேற்றப் படத்தக்க "அதிருத்ர மஹாயஜ்ஞம்" என்கிற மஹாயஜ்ஞத்தைச் சென்ற மாஸத்தில் நடத்தினதாக அறிகிறோம். இவ்வாறாகப் பல இடங்களி லும் வைதிக ஸமாஜங்கள் ஏற்பட்டு, கர்த்தவ்ய விஷயங்களை நன் றாக ஆராய்ந்து நிச்சயம் செய்து, தர்மம் நிலைநாட்டப்பட வேண்டு மென்று ஆஸ்திகாக்ரேஸரர்கள் தார்மிகர்களால் வேண்டப்படுகிறார்கள். அத்யுத்கடமாக அதர்மம் ஏற்பட்டால் தர்மத்தைத் தழைக்கச் செய்வதற் காகப் பகவான் அவதரிக்கிறாரென்கிற வசநம் ப்ரமாண சரணர்க ளின் மனத்தில் த்ருடமாக ஊன்றி இருப்பதால் இந்த அதர்மமான கொடிய சட்டமானது கூடிய சீக்ரத்தில் க்ருபா நிதியான பகவானை இம்மண்ணுலகில் விளம்பமின்றி அவதரிக்கச் செய்து, இந்தப் பாப யுகத்தை க்ருத யுகமாக்கி விடுமென்று ஆஸ்திகர்கள் மனக்களிப்படைந்து, இந்த அதர்மச் சட்டத்தை ஆமோதிக்கின்றனர்.

வைராக்ய பஞ்சகம்

[ஸ்ரீ. உப. வித்வான் ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சி.]

[ஸஞ்சிகை 1 பக்கம் 18 தொடர்ச்சி]

---

5. ஶரீர பதநாவதி ப்ரபு நிஷேவணாபாதநாத்
அபிந்தந தநஞ்ஜய ப்ரஶமதம் தநம் தந்தநம் ।
தநஞ்ஜய விவர்தநம் தநமுதூட கோவர்தநம்
ஸுஸாதநமபாதநம் ஸுமநஸாம் ஸமாராதநம் ॥

ஸேவையால் கிடைக்கக்கூடிய தநத்தையும் வாஸுதேவன் என்னும் தநத் தையும் சீர் தூக்கிப் பார்ப்போம். '**பவதி வரஷா அபி ஶ்வபசவத் தநநிதயநீ**' என்று தயா சதகத்தில் திருவேங்கடமுடையானுடைய திருவடியில் அதிக்ருபணன் கூட நித்யதனியாகிறான் என்கிறார். '**தநம் மதீயம் தவ பாத பங்கஜம்**' என்று ஸ்தோத்ர ரத்நத்தில் பெரியபெருமாளை **குலதநம்** என்கி றார் வால்மீகி பகவான். இந்த ச்லோகம் செய்கையில் வித்யாரண்யர் ஸம்ப்ர

தாயத்திற்கு ஆதி குருவான ஸ்ரீ சங்கராசார்யர் லௌகிக தநத்தை விசித்ரமான ப்ராஸங்களோடு வெகு அழகாக நிந்தித்திருக்கும் ச்லோகம் ஒன்று ஸ்வாமி திருவுள்ளத்திலிருந்தது என்று நாம் எண்ணுகிறோம். அந்தச்லோகமாவது—**'யதநம் ஹயநிஸ்யதநம் ஸதத துஃக ஸம்வயதநம் வ்ருஅஜ்ஞதாககதநம் ஸ்ப்ருஷிதஸ்ய ஸம்வயதநம் । விஶிஷ்மணபாயதநம் கூரவணயீஸஶாராயதநம் ந உத்க்ஷிமதிஶாயதநம் ஹவதி நாவிஹரத்வ்யாயதநம்'.** இரண்டு ச்லோகங்களுக்கும் உள்ள ஸாத்ருச்யம் ரஸிக மநோவேத்யம். ஸத்ருசமான ச்லோகத்தை தந விஷயத்தில் செய்வதால் அவருடைய பூர்வாசார்யரின் ச்லோகத்தை அவருக்கு ஸ்மரிப்பிப்பதில் நோக்கு. இங்கே முன்பாதியில் லௌகிக தநத்தை நிரர்த்தகமென்று தூஷித்துவிட்டுப் பின்பாதியில் வாஸுதேவன் என்னும் தநத்தின் வைஜாத்யத்தை ப்ராஸங்களால் அது அநேக ப்ரகாரமான தநமாகு மென்று காட்டுகிறார். **'ஸ்ரீமதாநவத நாவயி வ்ருத்திஷேவணாவாநிநாகீ'**—தநத்தை ஸம்பாதிக்க ப்ரபுக்களிடத்திலோ ராஜாங்கத்திலோ ஒரு உத்யோகத்தில் அமர்ந்தால் ப்ராண வியோக பர்யந்தம் அந்த உத்யோகத்தை விடமாட்டார்கள். சரீரம் விட்டால்தான் ஸேவை விடும். உயிரிருக்கையில் ஸேவா வ்ருத்தியை விடமாட்டார்கள். (**'வயஶாத்ஸௌஸிவஸிதெ வாநம்ஸ்ரு விம்ஶெ'**) என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் கஞ்சுகி தன்னையே பார்த்துச் சிரிக்கிறான். ஸேவையினால் தநம் கிடைப்பதால் அந்த தந லாபத்தையிட்டு யாவதாயுஷமும் ஊழியம் செய்யும்படிக்கு நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதைக் காட்ட **'ஞவாதந'** சப்ததை ப்ரயோகிக்கிறார். இந்த ஆபத்தி அபரிஹார்யை. நாம் தநாசையினால் ப்ரபு ஸேவையை அங்கிகரித்தால் அதிலிருந்து புநராவ்ருத்தி துர்லபம். ஈச்வர ஸேவை யாவத் சாரீரபாவி; ப்ரபு ஸேவை யாவத் சரீர பாவி. சரீர பதநத்துக்கு மேல் ஈச்வரனுடைய நித்ய ஸேவை உபக்ரமிக்கும். ப்ரபு ஸேவை சரீர பதநத்தோடு முடியும்.

'ஜஸிம்யதநயநஜய வ்ருஶஉமயதநம்'—ப்ரபு ஸேவை தநஞ்ஜயன் என்னும் ஜாடராக்நியை ப்ரசமநம் செய்யும் என்று ப்ரசம்ஸை செய்வார்கள். வாஸுதேவன் என்னும் தநம், தநஞ்ஜயனாகிய அர்ஜுநனை விசேஷமாய் வர்த்தநம் செய்வது என்று வைஜாத்யம். ஜாடராக்நிக்கு ஜலம் இந்தன மென்கிற எரிக்கும் விறகாகும். ஜலமில்லாமல் ஆஹாரம் ஜீர்ணமாகாது. ஜலம் இந்த அக்நிக்கு இந்தநமாகும் என்று சொன்னதற்கு என்ன ப்ரயோஜந மென்றால்: 'இதற்கு த்ருஷ்டாந்தமாக மூன்றாவது ச்லோகத்தில் உதாஹரித்த படபா முகாக்நிக்கு ஜலம் இந்தநமாகி ஜலத்தையே அது கொளுத்தும் ஸ்வபாவமுடையது. அதைப்போல் ஜாடராக்நிக்கு ஜலம் இந்தநமென்று காட்டினால் த்ருஷ்டாந்தத்திற்குப் பூர்ண ஸாமஞ்ஜஸ்யம் ஏற்படும்' என்பது தான். **'ஶயநம்'** என்றால் வீணென்று

அர்த்தம். லௌகிக தநம் 'த்ரவ்யம்' தான் என்று வேடிக்கையில் நோக்கு. உத்தரார்த்தத்தில் 'எமது ஸ்வாமி ஒரு விதத்தில் அல்ல; பல ப்ரகாரங்களாக ஸர்வோத்தமமான தநமாவார்' என்கிறார். ' **யத்ர யோகேச்வர: க்ருஷ்ண:** '-அர்ஜுநன் தநஞ்ஜயனானது இந்த தநத்தின் க்ருபையால். இந்த தநத்தை அடைந்ததினால் அவனுக்கு அந்தப் பெயர் அந்வர்த்தமாக ஒட்டிற்று. வேறு தநத்தை விபுதர்கள் தநமென்று அங்கிகரிக்கமாட்டார்கள். இந்த உண்மையான தநம் அவன் வசப் படாவிட்டால் அவனுக்கு தநஞ்ஜய ஸம்ஜ்ஞை விததமென்பர் கற்றோர். **'கோவர்த்தநம்'**-கோக்களேயும் கோப கோபிகளேயும், கோவர்த்தனகிரி, மழையையும் புல் முதலியவற்றையும் கொடுத்து உதவி செய்தது மன்றியில் இந்த்ரனுடைய சிலாவர்ஷத்தினின்றும் குடையாயிருந்து காப்பாற்றிற்று. அதற்குக் கோவர்த்தநம் என்று பெயரிட்டது உசிதம். ஏழுவயது குழந்தையாக இருக்கையில் மழைக் காலத்தில் கிளம்பும் நாய்க் குடையை அநாயாஸமாய்ப் பாலகர்கள் தூக்குவது போல, இந்தக் கோவர்த்தநத்தைத் தூக்கிக் குடையாக ஏழு திநம் பிடித்த தநம் இது. தநம் கிடைப்பதற்கு எத்தனேயோ ச்ரமப்படவேணும். இந்த தநத்தை ஸுலபமாய் ஸாதிக்கலாம். இதை ஸாதிப்பது அத்யந்த ஸுலபமானாலும் இதை ஒருகாலும் பாதிக்க முடியாது. லௌகிக தநத்துக்கு ஒரு க்ஷணத்தில் பாதம் வரும். ப்ரபஞ்சம் முழுவதும் பாதம் வந்தாலும் இது ஒன்று மட்டும் ஒருகாலும் பாதிக்கப்படுகிறதில்லை என்று நீங்கள் சொல்வது. ஸுமநஸ்ஸுகள்—வித்வான்களும் தேவர்களும். லௌகிக தநத்தை துச்சமென்றும் அம்ருதத்வத்துக்கு அநுபயோகி என்றும் விரோதி என்றும் ஜ்ஞாநிகள் நிந்திப்பர். இந்த ஒரு தநம்தான் அவர்கள் விமலமான மநஸ்ஸை நன்ருய் ஆராதிக்கும். லௌகிக தநத்தைத்துரந்து நிஷ்கிஞ்சநத்வத்தை அவலம்பிப்பவர்களுக்கு இந்த அநந்தமான தநம் கைகூடும். **'அநந்தம் பத மே வித்தம் யஸ்ய மே நாஸ்தி கிஞ்சந'** என்றார் ஜநக மஹாராஜர். அவருக்கு வாஸ்தவத்தில் அநந்தமான லௌகிகமான தநமிருந்தது. இருந்த த்ரவ்யத்தை மமதாபிமாந த்யாகத்தினால் விடவேண்டிய ச்ரமம் இருந்தது. நாம் வாஸ்தமாகவே நிர்த்தநரானபடியால் விடுகிறதென்கிற ச்ரமமில்லை. கௌணமான வ்ருத்திகளில் இறங்கி ஸம்பாதிக்க யத்நப்படாமலிருந்தால் மட்டும் போதும் நிஷ்கிஞ்சநத்வத்தை வஹித்த மாத்ரத்தால் நாம் அநந்த வித்தர்களாவோம். **'க்ருபணாதீநஸாராயநம்'**—என்று லௌகிக தநத்தை நிந்தித்தற்கு ப்ரதியாய் **'ஸுதேவானாம் ஸாராயநம்'** என்று வாஸுதேவன் என்னும் தநத்தை இங்கே ப்ரசம்ஸை செய்யப்படுகிற தென்பதைப்பற்றி ஸம்சய மில்லையெனத் தோன்றுகிறது. இது லௌகிக தநத்தைப்போலல்லாது ஹ்ருதய சோதநமாகும்.

6. 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌨𑍍 𑌨 𑌮𑌯𑌾 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 ।
𑌅𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌹𑌸𑍍𑌤𑌿𑌶𑍈𑌲𑌾𑌗𑍍𑌰𑍇 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌪𑌐𑌤𑌾𑌮𑌹𑌂 𑌧𑌨𑌂 ॥

"உம்முடைய தநம் ஸாஸாதந மென்றீர். அதை யார் ஸாதித்தார்; நீரா? உம்முடைய பெரியோர்களா? உங்கள் குலத்தில் எவ்வளவு தலைமுறையாக யிருக்கிறது? தநஞ்ஜயன் தேர்தட்டில் இருக்கிறது என் தநம். கோவர்த்தநத்தை தூக்கிக் கொண்டிருக்கிறது என்னுடைய தநம் என்று சொல்லுகிறீரே. இது உம்முடைய மாநஸ கல்பநமாகத்தானே முடியும். ஆற்று ப்ரவாஹம் போலே விபவாவதாரம் ஓடிப் போய் விட்டதே. நீர் சொல்லும் அஞ்சநாபமான நீரோட்டம் இப்போது எங்கேயாவது தேங்கி நிற்கிறதா? ராமனுக்குப் பதிலாக விபீஷணனும் ஹநுமானும் ரங்க தநத்தை நிஷ்க்ரயமாகப் பெற்று மோக்ஷத்தையு முபேக்ஷித்து இப்பொழுதும் பூமியில் இருந்து அநுபவிக்கிறார்க ளென்று உங்களுக்கு அபியுக்தரான பட்டர் சொல்லுகிறார். இப்படி இந்த க்ரமத்தில் உமக்கு ஏதாவது தநமென்று சொல்லக்கூடிய திவ்ய விக்ரஹம் ஸித்தமாக இருக்கிறதா? நீர் திருப்பித் திருப்பி உம்முடைய தேவனை தநமென்கிறீரே. அது தந ஸாதந மாகலாம். அதுவே எப்படி தநமாகும்? தநதத்வ மென்கிற வித்தேசதையை உமது தேவன் கொடுப்பானென்று முதலில் சொன்னீர். இப்பொழுது உங்கள் தேவனே தநமென்பதற்கு என்ன ப்ரமாணம்?" இந்தக் கேள்விகளுக்கு உத்தரம் கூறுகிறார். '𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌨𑍍'—நாங்கள் கர்ப்ப ச்ரீமாங்கள். நாங்கள் பரம்பரையாக அகிஞ்சநராக இருந்தாலும் பரம்பரையாக எங்கள் வித்தம் அநந்தம். இங்கே பித்ரார்ஜிதம் என்பதில் பித்ரு சப்தம் ப்ரம்ஹ குலத்துக்கு ஆதி கூடஸ்தரான பிதாமஹரென்கிற ப்ரம்ஹாவைத் தவிர மற்ற பித்ரு ஸமூஹம் முழுவதையும் சொல்லலாம். கடைசி பாதத்தில் சொல்லியிருப்பதை அநுஸரித்து அவர் ஒருவரைமட்டும் வ்யாவ்ருத்தி செய்துகொள்ளவேணும். என் தகப்பனாரும் நான் சொல்லப்போகும் என்னுடைய தநத்தை ஸம்பாதித்தவரல்லர். அவர் தகப்பனார் முதலிய பூர்வீகரும் ஸம்பாதித்ததல்ல.

'𑌨 𑌮𑌯𑌾 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂' என் தகப்பனார் முதலிய பூர்வீகர் எப்படி நிஷ்கிஞ்சநர்களோ, அவர்கள் எப்படி ஒன்றையும் ஸம்பாதிக்கவில்லையோ அப்படியே நானும் நிஷ்கிஞ்சநன், நானுமொன்றும் ஸம்பாதிக்கவில்லை. '𑌅𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌹𑌸𑍍𑌤𑌿𑌶𑍈𑌲𑌾𑌗𑍍𑌰𑍇'—என் பித்ருக்களும் ஒன்றும் ஸம்பாதிக்கவில்லை. நானும் ஒன்றும் ஸம்பாதிக்கவில்லை. ஆயினும் நான் ஏழையல்ல. எனக்குத் தநமிருக்கிறது. எங்கள் வம்சத்தில் ஒருவரும் ச்ரமப் படாமலே அயத்நமாக அநந்தமான குல தநம் எங்களுக்கு ஸ்வதஸ்ஸித்தமாக இருக்கிறதென்பதை '𑌅𑌸𑍍𑌤𑌿' என்கிற சப்தம் ஸூசிக்கிறது. ஆர்ஜிதமன்றியிலே அக்லேச

மாய் அதுவாகவே யிருக்கிறது. **'நாஸ்தி கிஞ்சந'** என்று அநுஸந்தித்த பொழுதே **'அநந்தம் பத மே வித்தம் அஸ்தி'** என்று அநந்த தநிகரானது போல **'ந மயா கிஞ்சிதார்ஜிதம்'** என்று நான் நிஷ்கிஞ்சநத்வத்தை அநுஸந்தாநம் செய்து கூறும்பொழுதே நான் சொல்லப்போகிற அநந்த தநம் எனக்கு ஸித்தமாகிறது. தேவனை ஹிரண்ய நிதிக்கு ஒப்பிடுகிறது ச்ருதி; அவனுடைய விக்ரஹம் முழுவதும் ஹிரண்மயம் என்றும் சொல்லுகிறது. ஸ்வரூபம் ஹிரண்யநிதி; விக்ரஹம் ஹிரண்மயம். லக்ஷ்மீ அவனுக்கு அநந்யை; அவள் அவனிடம் நித்ய வாஸம் செய்பவள். அவனைத் தநமென்று சொல்லத் தட்டென்ன? அவன் ஸர்வதநத்திற்கும் மூலமான மூலதநம். ச்ருதி சொன்ன ஹிரண்யநிதி உள்ளேபுதைந்து கூடமாய் இருக்கிறதென்றும் அதன் பேரில் ஸஞ்சரித்துக்கொண்டே இருக்கையிலும் ஸஞ்சரிப்பவர்கள் ஒருவரும் அறிவதில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்வர்ண நிதிகள் பூமிக்குள் ஆயிரக் கணக்கான ஜனங்களுக்குக் கீழேயிருக்கும். இந்த நிதி மலையின் உச்சியிலிருந்துகொண்டு எப்பொழுதும் எல்லோரையும் கடாக்ஷித்துக்கொண்டும் எல்லோர் கண்ணுக்கும் விஷயமாகவு மிருக்கும். ஸிலமென்கிற அக்ரமான (அதாவது உயர்ந்த) வ்ருத்தியால் எங்களால் ஆராதிக்கப்படுகிறார். ஸிலாக்ரத்தால் ஆராதிக்கும் எமக்கு சைலாக்ரத்தில் தாமே தநமாக நிற்கிறார். இந்த தநம், தநம் முதலிய சதுர்வித புருஷார்த்தங்களையும் அளிக்கும் பேரருளாளரான வரத மென்கிற பெயர் பெற்ற தனம். தநத்தை துச்சமென்று விரக்தர்களான நாமெல்லோரும் நினைப்போம். இந்தத்தநம் லௌகிக தநத்தைப்போல் துச்சமல்ல. இது ஒன்றே வஸ்து வென்றும் பரமார்த்தமென்றும் க்ருபாதிகமாகச் சொல்லக்கூடியது. இந்த தநத்தின் காமத்தினால் தான் வித்தம் முதலியவை மநுஷ்யர்களுக்கு ப்ரியமாவது. லௌகிக தநம் ஸ்வத: ப்ரியமாகாது. **'வித்தாத் ப்ரேய: புத்ராத் ப்ரேய:'** என்று வித்தம் முதலிய எல்லாவற்றைக் காட்டிலும் இதுவே நிரதிசய ப்ரியமானது. ப்ரியத்துக்காகத் தானே தநத்தைத் தேடுவது. எது தானாகவே நிரதிசயப்பிரியமோ அதைத் தான் முக்கியதநமென்று சொல்வது உசிதம். **'தத்வஸ்த்வ-ந்யத் கிம்'** என்று கேட்கப்பட்ட வஸ்துவு மது.

'வேதாஹரம் தநம்'--இந்தத் தநத்தை யார் ஆர்ஜநம் செய்தார்? யாரை உத்தேசித்து இந்தத் தநம் முதலில் த்ருஷ்டிபத மாயிற்று? இது உங்கள் குல தநமானால் இது உஙகள் குலத்தில் யாரிடத்திலிருந்து வந்தது? எங்கள் குலம் ப்ரஹ்ம குலம். எங்கள் குலத்துக்கு மூலபுருஷன் ப்ரஹ்மா. அவரிடத்திலிருந்து ஆகதம் இந்த தநம். புத்ரனாகிய அவருடைய அச்வமேதத்தில் ப்ரும்மமாய் ஆவிர்ப் பவித்த தநம் இது. ஹஸ்திகள் தவஞ் செய்து வ்யக்தமானது இந்த தநம் என்றும் **'ஹஸ்திநாதப்ரபோதிநீம்'** என்

பதால் ஸூசிக்கப்படுகிறது. வேடிக்கையாக இங்கே பிதாமஹர் என்பதற்கு 'பாட்டனர் ஸம்பரதித்தது' என்று சொன்னாலும் வாஸ்தவத்தை அவலம்பித்து பிதாமஹ சப்தத்தினாலே ஸர்வலோகப் பிதா மஹரான சதுர்முகரைக் கொள்ளாமல் தீராது. நிரபேக்ஷரான பிதாமஹர் அவர். வித்யாரண்ய ஸ்வாமி பால்யத்தில் காஞ்சீநகரத்தில் வஸித்து வரத கடாக்ஷங்களைப் பெற்றவரானபடியால் உமக்கும் எமக்கும் எல்லாருக்கும் பிதாமஹரான ப்ரஹ்மாவினிடமிருந்து கிடைத்த தநமிது என்று ஜ்ஞாபகப் படுகிறது. இந்த தநம் கையிலிருக்கையில் நாம் ஒருவரும் ராஜகுலம் போக வேண்டியதில்லை. அத்தி கிரி சிகரத்தில் ஸ்தாயியான கல்ப வ்ருக்ஷமிது. 'தேவராஜஉயிர்ாஜராஜயெ' என்கிறபடி இந்த தநம் தேவராஜன் அதிராஜன் தேவாதிராஜன். உத்தமராஜ குலத்திலிருந்துகொண்டு, நாம் ஏன் வேறு ராஜகுலம் போகவேண்டும்? உத்தமமும் பரமார்த்தமுமான தநம் நமதாக ஸர்வ ஸுலபமாகக் கையிலிருக்கையில் ஏன் துச்சமான தநத்தை அபேக்ஷித்து ராஜகுலம் போகவேணும்? நம் ராஜாவே தநம். அவர் நமது ஆத்மா. 'கிமிஹாஜ கஸ்யகாமாய ஶரீர மநுஸஞ்ஜ்வரேத்' என்று உபநிஷத்து கேட்ட கேள்வி நம் மநஸ்ஸில் இருக்கவேணும். 'ஸஹாஹமஜம்மீஞு வரிஹரதி ராஜயாநீ கஃமஹீவாக ஞு மஹாத்ர ராஹாத்மஃ' என்று ஸபையையும் ராஜதானியையும் நினைத்து நடுங்கி ஒதுங்கியிருப்பவர் நாம். இருக்கும் மாஹாத்ம்யத்தைக் குப்தமாய் மறைவாய் அநாவிஷ்க்ருதமாக வைத்திருந்தால்தான் அது குப்தம் ரக்ஷிதமாக ஆகும். அதை ப்ரகாசப்படுத்தினால் குப்தமாகாது.

வைராக்ய பஞ்சகத்தை ஸிலத்தில் ஆரம்பித்து தநத்தில் முடித்தார். பிக்ஷையில் ஆரம்பித்து வரதனோடு முடித்தார். ராஜ ஸபைக்குப் போய் அதை அலங்கரிப்பவர்களைத் தந்யர் என்று நாம் நினையோம் என்று சொன்னோம். அவர்கள் தந்யர்கள் இல்லை என்றால் பின்னே யார் தந்யர்கள்? 'யஜ்ஞோஃ தேவிவரஃ ஷவதஃ ஸஹஷ ஹஷயஞஃ!' என்று வரதனகிய தேவராஜனுடைய ஸபையை அலங்கரிப்பவரே தந்யர்கள். எமக்குப் பரம மித்ரரும் அந்வர்த்தமாக வித்யாரண்யமானவரும் வைதிக ஸார்வ பௌமருமான நீரே நமது ராஜன் ஸபைக்கு வந்து அலங்கரித்துத் தந்யராக வேணும். அத்யதந்த தந்யனாக இருக்கும் எனது தநத்தை எனது நிதியை இழந்து என்னை அதந்யனாகச் செய்வது என்னுடைய பரம மித்ரனுக்கு அழகல்ல. வஸ்துவான தநத்தைவிட்டு துச்சமான தநத்தை எனக்கு அடைவிக்கவேண்டாம். த்ருப்திதானே வேண்டியது. பஞ்சதசியில் த்ருப்தியென்னும் நிலமையைப்பற்றியும் குணத்தைப்பற்றியும் வெகு அழகாக விஸ்தாரமாக எழுதப்

பட்டிருக்கிறது. அத்ருப்தி யிருந்தாலல்லவோ நாம் கௌண கல்பங்களையும் கௌண வ்ருத்திகளையும் அவலம்பிக்கவேணும். எமக்கு க்ருதார்த்ததா புத்தியும் த்ருப்தியும் ஸம்பூர்ணமாக உளது. எம்மை நீங்கள் அழைப்பது பொக, உங்களை இங்கே இந்த தந லாபத்திற்காக தேவராஜன் ஸபைக்கு அழைப்பதே உசிதம். 'யம் ஶ்ரீஸாமாவஷ ஸ்ரீஹம் உதஜீதெ ஸாயிகஷ ததஃ' என்பதுபோல் இந்த தநம் இது நமக்கெல்லாம் பொதுவான குல தநம். இது யதிகளுக்கும் விரக்தர்களுக்கும் பரமோபாதேயமான பரம தநம். நீருமிங்கே எழுந்தருளி நாமெல்லோரும் இந்த நமது பொது தநத்தைக் கலந்து அனுபவிப்போம். இந்த தநம் உங்கள் ராஜாவுக்கும் தநம். வாத ராஜனுத்ஸவத்திற்கு விஜயநகரத்தரசர்கள் அடிக்கடி வருவார்கள். ராஜாவும் இங்கே வந்து இந்த தநத்தை அடைந்து ஸ்ரீமானாகட்டும். இந்த தநம் முக்தி கதி ஸாதநம். இது ஹ்ருதய சோதநம். இந்த தநத்தினால் நாம் தந்யரே.

ஸ்ரீ:

இரண்டாந் திருவந்தாதி.

(உரையாசிரியர்:—ஸ்ரீ. உப. வித்வான் வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர்)

(ஸம்புடம் 20, ஸஞ்சிகை 1, பக்கம் 24 தொடர்ச்சி)

87. இன்று வறிகின்றே னல்லே னிருநிலத்தைச்
சென்றங் களந்த திருவடியை—யன்று
கருக்கோட்டி யுட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருக்கோட்டி யெந்தை திறம்.

(இ—ள்) அன்று-(ஸாதநாநுஷ்டாநஞ் செய்வதற்கு யோக்யதையில்லாத) அன்றைக்கு, கரு கோட்டியுள்-கர்ப்பஸ்தாநத்திற்குள்ளே, கிடந்து-இருந்தபடியே, திருக்கோட்டி எந்தை-திருக்கோட்டியில் அர்ச்சா ரூபியாய் ஸந்நிஹிதனான என் ஸ்வாமியினுடைய, திறம்-குணசேஷ்டிதங்களின் ப்ரகாரத்தை, கண்டேன்-கண்டநுபவிக்கப்பெற்று, கைதொழுதேன்-(அநுபவத்துக்குப் போக்குவீடாகக்) கைதொழுகை முதலான அடிமைத்தொழிலிலும் அந்வயிக்கப்பெற்றேன்; (ஆனபின்பு), இரு நிலத்தை-பரவிய பூமியை, ஆங்கு சென்று-பூமியுள்ள அவ்விடத்தே

தானே சென்று, அளந்த-அளந்துகொண்ட, திருவடியை (எம்பெருமானது) ஸ்ரீபாதத்தை, இன்று ஆ-இன்ருக, அறிகின்றேன் அல்லேன்-அறிபவனல்லேன்; (எ—று.)

கீழ்ப்பாசுரத்தில் 'ஸாதநாநுஷ்டாநம் செய்யப்பெற்றவர் தமக்கு நிகராகார்' எனப் பேசிய ஆழ்வார் ஸாதநாநுஷ்டாநமும் அதற்கு உரிய யோக்யதையும் கூட இல்லாமல் கர்ப்பத்திலே யிருந்த காலமே தொடங்கி அடிமைச் சுவட்டோடு அவன் படிகளை யநுபவிக்கப் பெற்ற ஏற்றமுடையவன் நான் என்று தம்முடைய ஏற்றத்தைப் பேசுகிருர் இதில். ஆழ்வார் கர்ப்பத்திலிருந்த பொழுதே, அப்பெருமாளுல் தம்முடைய தயநீய தசையைக் கண்டு நிர்ஹேதுகமாகக் கடாக்ஷிக்கப் பட்டவ ரென்பது மூன்ருமடியிற் போதரும். அவ்வண்ணம் விஷயீகரித்தமை அவனுக்கும் தமக்குமுள்ள ஸம்பந்தத்தினலென்பதை, "திருக்கோட்டி யெந்தை" என்பதனல் விளக்கினர். தானே சென்று கடாக்ஷிப்பவன் எம்பெருமான் என்பதை "இருநிலத்தைச் சென்ருங் களந்த திருவடி" என்பதனுலும் காட்டுகிருர்.

88. திறம்பிற் றினியறிந்தேன் றென்னரங்கத் தேந்தை
திறம்பா வழிசென்ருர்க் கல்லால்—திறம்பாச்
செடிநரகை நீக்கித்தாஞ் செல்வதன்முன் வானோர்
கடிநகர வாசற் கதவு.

(இ—ள்.) தென் அரங்கத்து-அழகிய ஸ்ரீரங்கத்திலே, எந்தை-(அர்ச்சையிலே ஸுலபனுய்ப் பள்ளிகொண்டிருக்கும்) என் ஸ்வாமியினுடைய, திறம்பா வழி-மற்றென்ருற் சலிப்பிக்க முடியாத (நிரபேட்ச உபாயமாகிற) மஹா மார்க்கத்தைப் பற்றி, சென்ருர்க்கு-நடக்குமவர்களுக்கு, அல்லால்-அல்லாமல்,—தாம் மற்றையோரான ஸாதநாநுஷ்டாநம் பண்ணுமவர்கள், திறம்பா-சலியாத [அநுபவித்துக் கழிக்கமுடியாத], செடி-காடாய்க் கிடக்கிற [எல்லையற்ற], நரகை-ஸம்ஸாரமாகிற நரகத்தை, நீக்கி-(தங்களுடைய ஸாதநாநுஷ்டாநத்தாலே) போக்கி, செல்வதன்முன்-போய் (ஸர்வேச்வரனைச்) சேருவதற்கு முன்னமே, வானோர்-நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணிக்கொண்டு வஸிக்கிற, கடி நகரம்-அரணையுடையத்தான கலங்காப் பெருநகரான பரமபதத்தின், வாசல்-வாசலினுடைய, கதவு-கதவானது, திறம்பிற்று-தவறிவிட்டது; (இதனை), இனி-(அப்பரமனுல் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற இப்போது, அறிந்தேன்-நிரூபித்துத் தெரிந்துகொண்டேன்; (எ—று.)

ஸர்வேச்வரன் தானே விஷயீகரித்தார்க்கு அவனைப் பெறலாமேயன்றி ஸாதநாநுஷ்டாநத்தாலே யவனைப் பெறப் பார்ப்பார்க்கு அவனைப்பெற

முடியாதென்பதைத் தெளிந்தே னென்கிறார். "நாய மாத்மா ப்ரவசநேந லப்யோ நமேதயா நபஹுநா ச்ருதேந—யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:, தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" என்றது காண்க. பரமபதம் பகவத் ப்ரீதி ஸாத்யமே யன்றி, ஸ்வயத்ந ஸாத்ய மன்றென்க. துயரம் மிக்கிருக்கையாலே ஸம்ஸாரத்தை நரக மென்கிறது. பாபம் பண்ணின காலம் அநாதியாகையாலே அந்தப் பாபத்தின் பயனாக நேர்ந்த ஸம்ஸாரத்தைப் போக்கிக்கொள்ள இவனுக்குக் காலம் போதாவாயின. கதவு திறம்பிற்று-பரமபதத்தின் வாசற்கதவு உட்புகமுடியாதபடி ஆய்விடு மென்றவாறு. திருத் தேர்த்தட்டிலே அர்ஜுநனொருவனுக்கு ஒருகால் "மாமேகம்" என்று அருளிச்செய்த தம்முடைய நிரபேக்ஷ உபாய பாவத்தை ஸர்வ காலத்திலும் ஸர்வர்க்கும் ப்ரகாசிப்பிப்பவ னென்பது, 'தென்னரங்கத்தெந்தை' என்பதனாற் பெறப்படும்.

89. கதவிக் கதஞ்சிறந்த கஞ்சனைமுற் காய்ந்து
அதவிப்போர் யானை யொசித்ததுப்—பதவியாய்ப்
பாணியா னீரேற்றுப் பண்டொருகான் மாவலியை
மாணியாய்க் கொண்டிலையே மண்.

(இ—ள்.) கதம் சிறந்த கஞ்சனை-கோபம் விஞ்சின கஞ்சனை, கதவி-சீறி, காய்ந்து-கொன்று, போர் யானை-போர் செய்யவல்ல (குவலயாபீடமென்ற) யானையை, அதவி-அடர்த்து, ஒசித்து-அநாயாஸேந (முறித்து விழவிட்டு, பதவிஆய்-நீர்மையை யுடையயையாய், பாணியால் நீர் ஏற்று-(கொடுத்து வளர்ந்த) கையாலே உதக ஜலத்தை ஏற்றுப் பெற்று, பண்டு ஒரு கால்-முன்பு ஒருகாலத்தில், மாணி ஆய்-பிரமசாரியாய்க் கொண்டு, மண் கொண்டிலையே-(அந்த மகாபலியினிடத்தினின்றும்) பூமியை வாங்கிக் கொண்டில்லையோ? (எ—று.)

இதனால், அவ்வெம்பெருமான் தானே வ்யாபரித்து ஆச்ரிதரின் விரோதியைப் போக்கி விரகாலே ஆச்ரிதர் கார்யஞ் செய்யும்படியை நிரூபித்துக் காட்டுகிறார். வஸுதேவர் தேவகிப் பிராட்டியார் இந்த்ரன் இவர்கட்கு விரோதியைப் போக்கிக் கார்யஞ் செய்து கொடுத்திலையோ யென்கிறார். அவ்வாறு கார்யஞ் செய்யுமிடத்தில் வலியராயிருப்பாரை வலிமையினால் வென்றும், வலிமைகொண்டு வ்யாபரிக்க வொண்ணாதபடி ஔதார்யத்தை யுடைமையால் மஹாபலியை ஐச்வர்யந்தோன்ற நில்லாமல் அர்த்தித்வம் தோன்ற நின்றும் வென்ற விரகுகளைப் பாராட்டியவாறு. பதவியாய்—நேர்கொடு நேரான வழியே யென்றுமாம். 'சிறந்து' என்றும் பாடமுண்டு

90. மண்ணுலக மாளேனே வானவர்க்கும் வானவனய்
விண்ணுலகந் தன்னகத்து மேவேனே—நண்ணித்
திருமாலேச் செங்க ணடியானை யெங்கள்
பெருமானைக் கை தொழுத பின்.

(இ—ள்.) திருமாலே-ச்ரிய:பதியும், செம் கண் நெடியானைக் (உள்ளேயிருக்கிற வாத்ஸல்ய குணம் வெளித்தோன்றுமாறு) செந்நிறத் திருக் கண்களைப் படைத்த உதாரகுணமுள்ளவனும், எங்கள் பெருமானை-எமது ஸ்வாமியுமானவனைக் கிட்டி, கைதொழுத பின்-கைகூப்பி ஆச்ரயித்தபின்பு, மண் உலகம்-இந்த லீலாவிபூதியை, ஆளேனே- (நான் இட்டது வழக்கா யிருக்கும்படி) ஆட்சி புரியேனே? வானவர்க்கும் வானவன் ஆய்-நித்யசூரிக ளினும் மேம்பட்ட பெருமையை யுடையவனாய், விண் உலகம் தன்னகத்து-பரமபதத்தில், மேவேனே-பொருந்தியிரேனே? (எ—று.)

"நாம் ஆச்ரிதர்க்குச் செய்த காரியங்களை வகையிட்டுச் சொல்வது ஏன்? நுமக்கு வேண்டியதைச் சொல்லிக் காணீர்" என்று பகவானுக்கு அபிப் ராயமாக, ஆழ்வார் 'தேவரீரை யாச்ரயித்தபோதே அடியேன் எல்லாப் புருஷார்த்தங்களையும் பெற்றேனன்றோ' என்கிறார். நெடியான்-ஆச்ரித விஷயத்தில் எல்லாஞ் செய்தாலும், ஒன்றுஞ் செய்யப் பெற்றிலோமே என் றிருக்குமவன். 'கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்। ருணம் ப்ரவ்ருத்தமிவமே ஹ்ருதயாந் நாபஸர்ப்பதி' என்று ஸ்ரீக்ருஷ்ண பகவான் த்ரௌபதியைக் கிட்டி யுதவாமைக்காக நெஞ்சாறல் பட்டது காண்க. மண்-லீலாவிபூதிக்கு உபலக்ஷணம்.

அகில இந்திய ஸநாதந தர்ம மகாநாடு.

சென்னையில் நடந்த விவரம்.

அகில இந்திய ஸநாதந தர்ம மகாநாடு சென்ற நவம்பர் மாஸம் 31-ந் தேதி பிற்பகல் இரண்டு மணிக்குச் சென்னை ஒற்றைவாடையிலுள்ள வால் டாக்ஸ் நாடகக் கொட்டகையில் ஆரம்பமாகி மறு இரண்டு தினங்களும் விம ரிசையாக நடைபெற்றது. காலையில் புண்யாவாசநம் சண்டியாகம் முதலியன பண்டிதர்களால் பக்தி சிரத்தையுடன் நடத்தப்பட்டன. இம்மகாநாட்டுக்கு வங்காளம், அஸ்ஸாம், பஞ்சாப், காசி, ஆந்திர தேசம், தென் ஜில்லாக்கள் முதலிய விடங்களிலிருந்து பிரதிநிதிகள் ஏராளமாக வந்திருந்தனர். தென்

ஞட்டிலிருந்தும் வடநாட்டிலிருந்தும் பிரபல பண்டிதர்கள் பலரும் வந்திருந் தனர். திவான் பகதூர் டி. ஆர். ராமசந்திர ஐயர் ஸ்ரீமான்கள் ஸி. வி. வேங்கடரமண ஐயங்கார், ராவ்பகதூர் ஏ. எஸ். கிருஷ்ணராவ் வி.வி. ஸ்ரீனி வாஸ ஐயங்கார், ராஜா பகதூர் ஜி. கிருஷ்ணமாச்சாரியர், கண்டி லக்ஷ் மண்ணு, பி. சோமசுந்தரம், எம். ஏ. அனந்தாழ்வார் திவான்பகதூர் வெங் கடாசலம் பந்துலு, ராய்பகதூர் காளிசரண் ஸென்காசி கிருஷ்ணுமாசார்யர், ஸ்ரீமான் கே. பாலஸுப்ரமண்ய ஐயர், ஸ்ரீமான் டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஸ்ரீமான் எம். கே. ஆசார்யார், ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் மதுரை நடேச ஐயர் கும்பகோணம் மஹாலிங்க ஐயர், வைத்தியநாத ஐயர், என். எல். துரை முதலிய பிரபலஸ்தர்களும் கும்பகோணம் ஸ்ரீ சங்கராச்சாரியார் மடம், ஸ்ரீ அஹோபில மடம், புஷ்பகிரி மடம், சிருங்கேரி மடம், பிரதிவாதி பயங்கரம் மடம் ஆகிய மடங்களிலிருந்து பிரதிநிதிகளும் விஜயஞ் செய்திருந்தனர். துவ்வூரி ஸுப்பம்மகாரு முதலிய ஸ்திரீகள் பலர் கூட்டத்தில் காணப்பட்டனர்.

மகாநாட்டுக் கொட்டகையில் 'சாரதா சட்டத்தை ஒழியுங்கள்' 'மதமே நமது பிறப்புரிமை'' என்ற வாக்கியங்களடங்கிய அட்டைகள் ஆங்காங்கு தொங்கவிடப்பட்டிருந்தன. மகாநாட்டுத் தலைவரும் பண்டித பரீக்ஷத் தலை வரும் உள்ளே வந்தவுடன் அவர்கள் புஷ்பஹாரமிடப் பட்டு வரவேற்கப் பட்டனர். மகாநாடு ஆரம்பிக்க மணி இரண்டாகிவிட்டது. பிரதமத்தில் பிரம்மஸ்ரீ பண்டித சோமதேவ சர்மா முதலியவர்களால் பகவத் த்யாநம் செய்யப்பட்டது. விவாக வயது சட்டத்தைக் கண்டித்துத் தமிழில் இயற்றி யிருந்த பாட்டுகள் சில பிறகு பாடப்பட்டன. அதன் பின் மடாதிபதிகளிட மிருந்து வந்த ஸ்ரீ முகங்கள் வாசிக்கப்பட்டன.

பிறகு ஸ்ரீ ஜகத்குரு பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்யா ஸ்ரீ விரு பாக்ஷ மடம் ஸ்ரீசங்கராச்சார்ய ஸ்வாமி மகா நாட்டை உபக்ரமித்து ஒரு உபந்யாஸஞ் செய்தார்.

ஸ்வாமி வர்ணுச்ரம தர்மத்தை யொட்டி முதல் முதலாக இம் மகாநாடு கூடப்பட்டிருப்பதாகவும் வர்ணுச்ரம தர்மத்தின் மூலமே இந்நாட் டிற்குப் புனருத்தாரணம் ஏற்படுமென்றும் இந்தத் தர்மத்தின் மேன்மையால் தான் புராதன கால முதல் நமது நாடு பெருமை யுற்றிருந்ததென்றும் பிறகு ஆர்யஸமாஜம், பிரம்மஞான ஸங்கம், ஆசார சீர்திருத்த இயக்கம் முதலிய வற் ருல் அப்பெருமை குறைந்து விட்டதென்றும் கடைசியாகக் காங்கிரஸாலும் அந்தப் பெருமை குறைய ஆரம்பித்து விட்டதென்றும் வர்ணுச்ரம தர்மத்தை அநுஷ்டிப்பதாகச் சொல்லிக் கொண்டு நடிப்பவர்களா

லும் அந்தத் தர்மத்துக்குக் கேடு வருவதாகவும், இப்போது ஸ்ரீமான் சாரதா முதலியோர் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியதால் வர்ணாச்ரம தர்மம் மறுபடியும் மேன்மையடைய இடமேற்பட்டிருக்கிறதென்றும், ஆகவே ஸ்ரீமான் சாரதா முதலியோருக்கு ஒரு விதத்தில் க்ருதஜ்ஞதை நாம் செலுத்தவேண்டுமென்றும் கார்த்திகை அமாவாஸை திநமாகிய இன்று மகாநாடு கூடியது மிக்கப் பொருத்தமாக விருக்கிறதென்றும் கிருஷ்ண பரமாத்வும் மகா பாரதப் போருக்கு இந்த தினத்தையே குறிப்பிட்டாரென்றும் ஆகவே இந்த போராட்டத்தின் பயனாக முடிவில் தர்மம் நிலை நிறுத்தப்படுமென்பதில் ஆக்ஷேபமில்லையென்றும் கூறினர்.

ஸ்வாமிகள் பால்ய விவாகத்தைப் பற்றிப் பேசுகையில் வர்ணாச்ரம தர்மம் சரிவரப் பலராலும் அநுஷ்டிக்கப்படவில்லையென நாம் வருந்தும் இந்த ஸமயத்தில் பாரதவர்ஷத்தில் உள்ளவர்கள் இன்னும் அந்த தர்மக் கோட்பாடுகளை மறக்கவில்லையென்றதற்குப் பால்ய விவாகமே ஒரு அறிகுறியாக விருக்கிறதென்றும் ருதுவாவதற்கு முன் விவாகம் செய்யவேண்டுமென ச்ருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் விதித்திருப்பதால் அதை நம்மவர் அநுஷ்டிக்கவே விரும்புவதாகவும் இதனால் தான் மற்ற நாட்டார் நம்மைக் கண்டு சற்று மதிப்புவைக்க ஆரம்பிக்கின்றனரென்றும் நமது நாட்டின் மதிப்பே வர்ணாச்ரம தர்மத்தால் தான் அதிகப்படுவதாகவும் சாரதாசட்டம் ஒரு துரிதமான சட்டமென்றும் நாம் அதை எதிர்த்துநின்று போராடுவதா அன்றி அவமானத்துடன் அதை ஏற்றுக்கொள்ளுவதா என்பதை இன்று மஹாஸங்கத் முடிவு செய்து விடவேண்டுமென்றும் இன்று கூடியுள்ள சபையினரின் உத்ஸாகத்தைக் கவனிக்கையில் யாவரும் அது சம்பந்தமாக அஹிம்ஸா முறையில் போராடி வெற்றி பெறவே முடிவு செய்து கொண்டிருப்பதாகத் தெரிவதாகவும் நமக்கு வெற்றியளிக்க பகவான் நுக்ரஹிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டுப் பாபு ச்யாமஸுந்தர சக்ரவர்த்தியை அக்கிராஸனம் வகிக்கும்படி பிரார்த்தித்தார். ஸ்ரீ பரம ஹம்ஸ பரிவ் ராஜகாசார்ய அயோத்யா ராமாநுஜ ஜீயர் அவர் சமஸ்கிருதத்தில் அவரை ஆதரித்துப் பேசினர்.

ஆஹ்வான நிவேதநம்

அதன் பின்னர் ஸத்கார கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் சங்கர நாராயண செட்டியார் பிரதிநிதிகளை வரவேற்று ஆங்கிலத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். அதன் ஸாரம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது:—

அதர்மிகளை எதிர்த்து அர்ஜுனன் தர்மயுத்தம் செய்யப்புகுந்த காலையில் குருக்ஷேத்திரத்தில் ஸ்ரீமான் கிருஷ்ண பகவான் ஸாரதியாக நின்று அனுமத்துவஜத்தைத் தாங்கி நின்றதாகக் கூறப்படுவதற்கொப்ப நம் தற்கால நிலையைக் கூறலாம். நாமும் ஹனுமத்வஜத்தை ஸ்ரீ பார்த்தசாரதி ஸன்னதியில் ஆரோஹணஞ்செய்து தர்மத்தைப்பாதுகாக்கப் புறப்பட்டிருக்கிறோம். அர்ஜுனனுக்கேற்பட்டதைப்போல் நமக்கும் வெற்றி ஸம்பவிக்கும் என்பது நிச்சயம்.

சநாதநமான தர்மக் கொள்கைகள் சத்துருக்களால் எதிர்க்கப்பட்டு நம்மதத்திற்கே ஆபத்தேற்படும் போலிருக்கும் சமயத்தில்

நாம் இவ்விடத்தில் கூடி யிருக்கிறோம். ராஜீயத்துறையில் பலனடைவதற்காக நம்மதக்கொள்கைகள் பரிஹாஸ செய்யப்படுகின்றன. ஏதோ சமரஸ மேற்ப டப்போவதாக மனதில் எண்ணிக்கொண்டு மேல்நாட்டு வழக்க ஆசையினால் நம் வேதங்களின் மகத்தான போதனைகள் அலட்சியம் செய்யப் படுகின் றன. இந்தஸமயத்தில் ஹிந்து தர்மத்திற்கு ஆபத்து வராமல் பாதுகாத்து இதை நம் சந்ததியாருக்குபதேசிக்க வேண்டியது நமது கடமையாகும்.

ஸமீபத்தில் நடந்து முடிந்த மகா யுத்தத்தின் பலனாக ஜனங்களின் உயர் லக்ஷ்யம் மாறி நன்னடக்கைகளில் நம்பிக்கை குறைந்து வருகிறது. ஒழுக்கம் பொறுப்பு என்பன அளவுகடந்து போகின்றன. இதனால் நாம் கவலையுறாது வேதத்தில் உபதேசிக்கப்பட்டுள்ள நம் மதத்தைப் பின்பற்றி நல்வழியில் செல்ல வேண்டியது நமது கடமையாகும். நம் கடமையை நாம் செய்தால் என்ன ஆபத்துவந்தாலும், ஹிந்து தர்மம் எக்காலமும் அழி யாது என்பதை நாம் நம்பி மேற் செல்லவேண்டும்.

ஆனால் இப்பொழுது ஒரு புது ஸம்பவம் நேர்ந்திருப்பதன் பலனை நாம் கவனிக்கவேண்டும், 1858-ம் வர்ஷத்தில் விக் டோரியா மகா ராணியாரின் அறிக்கையில் தாமும் தமது ஸந்ததியாரும் இந்தியப் பிர ஜைகளின் மதாசாரம் முதலியவற்றில் தலையிடுவதில்லை யென்று வாக் களித்தார். இதுவரையில் அவ்வாக்குறுதியை அவர்கள் மீறவில்லை. ஆனால் ஹிந்து மதாசாரங்களை த்யாஜித்த ஒருவர் யோசனையைக் கேட்டு, சாஸ்திரங் களின்படி அனுஷ்டிக்கப்படும் பால்ய விவாகம் மிகக் கொடிய வழக்கம் என்று எண்ண முற்பட்டுவிட்டார்கள். ராஜியப் போரில் விசித்திரமான ஸம்பந்தங்களும் ஸ்னேகங்களும் ஏற்படுவதுண்டு. ராஜீயத்துறையில் மிக வும் தீவ்ர லக்ஷ்சியம் கொண்டிருப்பவர்களைப் ப்ரீதிப்படுத்த கவர்ன்மெண் டார் தங்களுடைய உயர்ந்த லட்சியத்தைக் கை விட்டு பால்ய விவாகத் தடை சட்டத்திற்காதரவளிக்க முன் வந்து விட்டனர். அச்சட்டத்தின் ஆபாஸமான பிரிவுகள் ஹிந்துக்களின் புனிதமான நல்வாழ்க்கைக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியனவாயிருக்கின்றன. வைதீக ஹிந்துக்களுடைய கோரிக் கையை எதிர்க்கும் ஒருதலைப் பட்சமான கமிட்டியின் யோஜனையை ஆதா வாகக் கொண்டு தம் மகிமையையும் உணராது இப்பெரிய கவர்ன்மெண் டார் உயர்ந்த கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டு இந்த ஆபாஸ சட் டத்தை ஆதரிக்கப் பணிந்திருக்கின்றனர். இதன் மூலம் ஹிந்து தர்மம் சீர் குலையாது பாதுகாக்கவேண்டிய கடமை இங்கு கூடியிருக்கும் ஸநாதந தர்மிகளின் பொறுப்பாகும்.

இராஜப் பிரதிநிதியின் அறிக்கையின் நல்ல நோக்கத்தை நாம் பாராட்டுகிறோம். அவர் கூட்டும் சர்வகட்சி மகாநாட்டிற்கு கோடிக்கணக் கான ஹிந்துக்களின் மதத்தைப் பாதுகாக்கும் புத்தியும் அபிமானமும் உள்ள நம் பிரதிநிதியை அழைக்கவேண்டும். அம் மகாநாட்டைக் கூட்டு முன்னர் இந்தப்பால்ய விவாகத்தடை சட்டத்தை ரத்து செய்யவேண் டும் என்ற நிபந்தனையை நாம் வற்புறுத்தவேண்டும். அப்பால் தயாரிக்கப் படும் அரசியலில் எல்லா மதத்தினருக்கும் பூர்ண சுதந்திரமளித்து அம் மத அனுஷ்டானங்களில் யாரும் தலையிடமுடியாத நிர்ப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

அந்க்யஜர்களின் தேவால்ய ப்ரவேச விஷயமாக நம் தீவ்ர வாதிகள் செய்துவரும் செயற்கைக் கிளர்ச்சி பலமாக விருப்பதாகக் காட்டப்படுகிறது. தேவாலாய ஸேவை வியத்தில் ஒவ்வோர் ஜாதிமதத்தினருக்கும் பிரத்யேக ஸ்வதந்தரமுண்டு. ஐரோப்பிய தேசங்களிலும் கிறிஸ்தவக் கோயில்களில் தாங்கள் விரும்பாதவர்களை விடுவதில்லையென்றிருக்கிறது. இவ்வித மிருக்கையில் ஹிந்துக்கோயிலில் நிர்ப்பந்தமேற்படுத்துவதை நாம் ஆதரிக்கக் கூடாது. ஸைமன் கமிஷனில் இந்தியக் கமிட்டி மெம்பர் ஒருவர் ஹிந்துக் கோயில்கள் யாவருக்கும் பொது என்று விதிக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறாராம். இதை ஆங்கிலேயர் கேட்டு அதன் பிரகாரம் நடப்பதாயிருக்கும் பக்ஷத்தில் நமக்கு பிரிட்டிஷ் சம்பந்த மில்லாமலிருப்பதேமேல். நாம் மன்னர் பிரானிடம் ராஜவிசுவாசம் காட்டும் பிரஜைகளாயிருப்பதனால் முன்னதாகவே எச்சரிக்கை செய்து எந்த அரசியலமைப்பிலும் நம் மத விஷயத்தில் பிறமத ஜாதியினர் தலையிடக்கூடாது என்று நிர்ணயிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்த உபந்யாஸம் முடிந்ததும் ஸ்ரீமான் டி. ஆர். ராமச்சந்திர ஐயர் மகாநாட்டில் தலைமை வகிக்க வந்திருக்கும் ஸ்ரீ சக்ரவர்த்தி வர்ணாச்ரம தர்மம் குன்றாமலிருக்க உயிரையும் கொடுக்க ஸித்தமாக விருக்கிறாரென்றும் அவர் அக்ராஸநம் வகிக்க நேர்ந்தது தங்கள் பாக்யம் என்றும் சொன்னார். மற்றும் சிலர் இவரை ஆதரித்துப் பேசிய பின் பாபு சக்ரவர்த்தி தலைமை வகித்தார். காஞ்சீபுரம் பிரதிவாதி பயங்கர மடத்திலிருந்து வந்த ஸ்ரீமான் சக்கரவர்த்தி ஐயங்கார் அவருக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஒரு உபசாரபபத்திரம் வாசித்துக்கொடுத்தார்.

அக்ராஸநர் உபந்யாஸம்.

பிறகு பண்டித ச்யாம ஸுந்தர சக்ரவர்த்தி அக்ராஸநம் வஹித்து செய்த உபந்யாஸமாவது:—பூர்வ காலங்களில் மத ஸம்பந்தமான ஸங்கடங்கள் நேர்ந்தபொழுது தர்மஜிஜ்ஞாஸையினாலும் கர்ம ஜிஜ்ஞாஸையினாலும் அவரவர்கள் கடமையை நிர்த்தாரணஞ் செய்ய ப்ரவிருத்தித்த ரீதியைக் கவனிக்குமளவில், இப்பொழுது இந்த ஸமயத்தில் உங்களுக்கு வழிகாட்டுபவன் போல் இங்கு அக்ராஸநத்தை வஹிக்க நான் ஏற்றுக்கொண்டது துணிகரமான பாபச் செயலேயாகும். ஆனால் தேசம் இப்பொழுது அடைந்துள்ள கேவலஸ்திதியை ஊன்றிப் பார்க்கும்பொழுதும், பகவத் ஸாக்ஷாத்கார்ம் பெறுவதற்காக மஹான்களாகிய நமது முன்னோர்கள் விதித்துள்ள தர்மங்களை யநுஷ்டிப்பதனால் தண்டனை யென்று ஏற்பட்டிருக்கும் கால வைபரீத்யத்தை நினைக்குமளவிலும், மனஸ்ஸில் ஒரு கேதம் யேற்படுவது மாத்திரம் இங்கு அக்ராஸநம் வகிக்க ஒரு யோக்கிதையாக விருக்கும் பக்ஷத்தில் பிறகு நான்கூட இந்தப் பொறுப்பை வஹிக்கலாமென்று தோன்றுகிறது. அத்துடன் ஸநாதந தர்மம் மீண்டும் தனது பூர்வ கவுரவத்தையடைந்து அதன் மஹிமையை ப்ரஸரிக்கச் செய்யவேண்டிய காலம் வந்து விட்டதென நான் வெகுகாலமாக உணர்ந்து வந்திருக்கிறேன். தேசம் இப்பொழுது சின்ன பின்னப்பட்டு ஒரே குழப்பமாக விருக்கிறது. அதை இனி அதற்கு ஸ்வாபாவிகமான ஸ்திதியில் மறுபடியும் ஸ்தாபித்து அதனுடைய நிஜ மஹிமை எங்கும் பிரதிபலிக்குமாறு செய்ய வேண்டியதாக விருக்கிறது. புராதனமான ஸநாதன தர்மத்திற்கு ஸ்வபாவமாகவுள்ள பலத்தை

நாம் புதுப்பித்து அந்தப் பலத்தை அதன் விரோதிகளை நிரஸனஞ்செய்ய உபயோகிக்கா விட்டால் நமக்குப் புராதனமாகப் பரம் பராகதமாகவிருக்கும் சிறந்த தர்ம வாழ்க்கையை நாம் இழந்தவர்களாகி விடுவோம். வேரைக்களைந்த மரம்போல் இப்பொழுது நாமிருந்து வருகிறோம். சீக்கிரத்தில் நாம் பட்ட மரம்போல் உலர்ந்து போய் விடுவோமென்று சங்கிப்பதில் ஆச்சரிய மொன்று மிருப்பதற்கில்லை. வெளிக்கு ஏதோ சில தோற்றங்கள் இருந்தாலும் தேச முழுவதும் ஆந்தரமாக தர்ம நிலையில் இருப்பது என்பது போய் விட்டது. ஹிந்து வென்பவன் உண்மையில் ஸநாதன தர்மத்தில் பூரண விசுவாச முள்ளவனாக இருக்க வேண்டும். சமயத்திற்கு ஒரு தர்ம மென்றும், மனிக்கு ஒரு தர்ம மென்றும் அவன் இருப்பதற்கில்லை. ஹிந்துக்களுக்கு மதவாழ்க்கை ஸம்பந்தப்பட்ட வரையில் புதிய சர்ச்சையோ மனோபாவங்களோ பரீக்ஷைகளோ ஒன்றும் தேவையில்லை. அவர்களுக்கு வாழ்க்கை வேறு, மதம் வேறு என்று எண்ணவே இடம் கிடையாது. பகவான் ச்ருதி மூலம் ஆக்ஞாபித்தபடி இந்த ஜன்மாவை நாம் உபயோகிக்க வேண்டியதே நமது தர்மமாகும். நமது வாழ்க்கையில் ஐகிகமானதென்றும், ஆமுஷ்மிக மானதென்றும் இரண்டாக ஒன்றுக்கொன்று ஸம்பந்த மில்லை போல் பிரிப்பதற்கில்லை. அநாதிகாலமாக இழந்திருக்கும் ஐச்வரியத்தைப் பெறுவதே இந்த ஜன்மாவின் புருஷார்த்தமாக விருக்கவேண்டும். நமது மற்ற காரியங்களெல்லாம் இந்த ஒரு புருஷார்த்தத்திற்கு ஒத்ததாகவும் அதைப் பெறுவதற்கான ஸாதனங்களாகவுமே யிருக்கவேண்டும். அதாவது நமது விவாகமோ, ருதுசாந்தியோ குழந்தைகளைப் பெறுவதோ, குழந்தைகளை வளர்ப்பதோ, மற்றும் ஜீவனோபாயத்தைச்செய்வதோ, நிர்யாணமோ எல்லாம் இந்த ஒரு பரம புருஷார்த்தத்தை பொருத்தவையாகவே விருக்கவேண்டும். நிஷேகாதிஶ்மஶாநாந்தோ மந்த்ரைர்யஸ்யோதிதோ விதி பிறவி முதல் இறப்பு வரையிலுள்ள ஸமஸ்த கார்யங்களும் பகவான் ஒருவன் இருக்கிறான் என்ற எண்ணத்துடனேயே செய்யப்படவேண்டும். நமது வாழ்க்கையைப்பற்றிய எல்லாக் காரியங்களிலும் நமக்கு வழி காட்டக்கூடியது வேதங்களே யாகும். ஜன ஸமுகத்திற்கு விவேகமும் ஹிதமும் இந்த ஸநாதன தர்மத்தின் மூலமே ஏற்படுமென்பது வேதத்தின் உட் பொருளை நன்கு அறிந்தால் தான் நன்கு புலனாகும். வேதத்திற்கு அப்படிப்பட்ட ச்ரைஷ்டிய மென்ன? பின்னால் தோன்றிய எல்லா வைதிக ஸித்தாந்தங்களும் ஏன் இந்த வேதத்தையே மூலமாகக் கொண்டிருக்கவேண்டும்? ஐரோப்பிய புத்திமான்களெல்லாம் இந்த வேதத்தைக்கண்டு ஏன் ப்ரமிக்க வேண்டும் ? ஏதோ ஒரு சிலருடைய கேவல புத்தியின் கற்பனையால் சூரியன் அக்னி முதலியவற்றைப் பயத்தினால் கொண்டாடத் தலைப்பட்ட நூலென்று 'இந்த வேதங்களை ஆதுநிகர்கள்' பரிகசித்த காலமெல்லாம் இப்பொழுது பறந்து போய்விட்டது. இந்த வேதத்தில் பிரபஞ்ச சம்பந்தமான ஸகல தத்துவங்களும் அடங்கியிருக்கின்றன வென்பதும், இவற்றின் மஹிமையும் காம்பீர்யமும் வேறு எந்த க்ரந்தத்திற்கும் ஏற்படுவதற்கில்லையென்பதும் இப்பொழுது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மநுவை எடுத்துக்கொள்ளுவோம். வேதார்த்தங்களை இவர் ஒரு ஏற்பாடாக ஒரு வழியில் தொகுத்து உபதேசித்திருக்கிறார். அவர் பிரஸ்தாபிக்காத விஷயம் ஒன்றும் கிடையாது. அவர் ஞானத்திற்கு ஒரு அளவிருப்பதாகவே காணப்படவில்லை. மனிதனுக்கு இகத்திலும் பரத்திலும் ஹிதத்தை யுண்டுபண்ணக்கூடிய தென்னவென்பதை அஸாதாரணமான ஞான த்ருஷ்டியைக் கொண்டு அவர் எடுத்துச் சொல்லி யிருக்கிறார். சில்லரை விஷயங்கள் முதற்கொண்டு எல்லா விஷயங்களைப்பற்றியும் ஒரு சிறந்த

தர்மத்தைப் போதிப்பதென்ருல் மஹா ஸர்வக்ஞனக விருந்தாலல்லது ஸாத்திய மில்லை. மறு சொல்லாததென புதிதாக யாராகிலும் ஒரு விஷயத்தை இப்பொழுது பிரஸ்தாபிக்க முடியுமா வென நான் கேட்கிறேன். மநு விதிக்கும் ப்ரகாரம் ஒரு ராஜா ராஜ்யபாரம் செய்து, லோகத்தின் சாந்தியையே கெடுப்பதான ஆபாஸமான நவீன மனேபாவங்களுக் கெல்லாம் இடம் கொடுக்காமல் இருந் தால் பிறகு பூலோகத்தையே ஸ்வர்க்கமாகச் செய்து விடலா மென்பதில் ஸந் தேக மில்லை. இப்பொழுது இந்த ஸநாதந தர்மம் பல வழிகளிலும் எதிர்க் கப்பட்டுவருவது குறித்து ஒரு விஷயத்தில் நான் ஸந்தோஷிக்கிறேன். இவற் றின் காரணமாக மீண்டும் ஸரியானபடி ஸநாதந தர்மத்தையும் வேதமார்க்கத்தையும் நிலை நிறுத்த நமக்குச் சந்தர்ப்பமேற்பட்டிருக்கிறது. நமது ஜன்மாவில் முக்கிய ஸம்ஸ்காரத்தை அடியுடன் கெடுப்பதாகவிருக்கும் சாரதா சட்டம் மூலம் வைதிக ஹிந்துமதமே அழிவதாகவிருக்கும் ஸமயத்தில் அதற்குப் புதுஉயிர் உண்டு பண்ணு வதுபோலவிருக்கிறது. மறுபடியும் நமக்கு வேதங்களில் நெருங்கிய விசுவாசமும் அதனடியாக ஸத்திய மார்க்கத்தில் ஒரு ப்ரவ்ருத்திடம் ஏற்படும் பக்ஷத்தில் நம் முன்னேர் களாகிய மஹான்கள் அடைந்த நிலைமையை நாமும் அடையக் கூடுமென்பதில் ஆக்ஷே பமில்லை. ஏன் வேதங்களுக்கு இவ்வளவு கவ்ரவ மளிக்கவேண்டும்? இவைஅபௌஷே யங்களாக பகவத் ஆஜ்ஞையாய் நமது முன்னேர்களின் ஞானஉதயத்திற்கு மூலகார ணமாக இருந்திருக்கிறது. பிரஹ்மம் ஸத்தியமென்றும், ஞானமென்றும் அனந்தமென் றும் பகவானல் பிரஹ்மாவுக்கும், ப்ரஹ்மாவால் பிரஜாபதிகளுக்கும், உபதேசிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகையால் இந்த உபதேசம் ஸத்தியமென்பதில்லை கொஞ்சமும் ஸந் தேஹம் இருப்பதற்கில்லை. இம்மாதிரி ஸாக்ஷாத் பகவானுக்கும் மநுஷ்யனுக்கும் நேராக ஸம்பந்த மேற்பட்டிருப்பது இந்த ஹிந்துமதம் ஒன்றில் தான். இந்த பகவத் ஸம்பந்த மேற்படாவிடில் மனுஷ்யனுக்குப் பிறகு என்ன யோக்கியதை இருக்கப்போகின்றது? மனுஷ்யனுக்குப் பேசும் திறமையை யுண்டுபண்ணியது பகவான். அவனுக்கு அறிவைக் கொடுத்ததும் பகவான். இதை யெல்லாம் கொடுத்தது போதா தென்று அவன் ஹிரு தயத்திலும் பகவான் வந்து வஸிக்கிருன். இந்தக் கோரமான ஸம்ஸாரத்தில் கேவலம் மனிதனுக்குள்ளும் வஸித்து அந்த மனுஷ்யன் நெறி தவருது இருப்பானு வென்பதைக் கவனித்து வருகிருன். பகவத் ஸங்கல்பத்தின் காரணமாக மனிதனுக்கு எவ்வளவோ அரிய சக்திகளேற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கல்பத்திலும் பகவானே நேரில் நமது ரிஷிகளுக்கு ஆத்ம ஞானத்தை யுண்டுபண்ணுகிருனென்பதை ஸ்ரீ சங்கரர் வெகு அழகாக எடுத்துக் கூறியிருக்கிருர். எல்லா வேத மந்திரங்களுக்கும் அவற்றை அறிந்த ரிஷிகள் இருக்கின்றனர். ஸ பூர்வேஷாமபி குரு: என்று பகவானே நமது முன்னேர்களுக்குக் குருவாயிருப்பதாக யோக ஸூத்ரமே மூறை யிடுகிறது. ஜகத் ஸ்ருஷ்டி காலத்தில் யோகதத்வத்தைத் தாமே விவஸ்வானுக்குத் தெரிவித்திருப்பதாக பகவான் தமது வாக்காலேயே அறிவித்திருக்கிருர். விவஸ்வான் மநுவுக்கும் மநு இக்ஷ்வாகுவுக்கும் இதை உபதேசித்திருக்கிருர். ஆகவே இப்பொழுது நாம் பெற் றிருக்கும் ஆத்மஞானம் இவ்வளவு சிறந்ததான பரம்பரா பிராப்தமாகும். எல்லாக் கஷ்ட ஸமயங்களிலும் நாம் செய்ய வேண்டிய கடமையை சாச்வத தர்மத்தைக் கொண்டே முடிவு செய்ய வேண்டு மென்று மநு விதித்திருக்கிருர். பகவான் எப்பொழுதும் நம்முள் வஸித்து நமது செய்கைகளைக் கவனித்து வருகிருன். ஆகவே நாம் அவன்

ஆக்ஞையை மீறி, இஷ்டப்படி நமது இந்திரியங்களுக்கு வியாபாரத்தைக் கொடுத்து வருவோமாயின் பிறகு அவனை நாம் கிட்டுவதென்பது துர்லபமாகவே போய் விடக்கூடும்; இப்படி பகவான் நமது செய்கை ஒவ்வொன்றுக்கும் ஸாக்ஷியாக யிருக்கிறு னென்பதை அடிப்படையாகக் கொண்டே மநு தமது விதிகளை ஏற்படுத்தி யிருக்கிறுர். உபநிஷத்துக்களும் இதைத் தான் போதிக்கின்றன. ஆகையால் நாம்மனம்போன படியிருப்பதென்பதை விட்டு வேதமார்க்கத்தில் செல்லுவதனுலேயே இகத்தில் சாந்தி யும் முடிவில் மோக்ஷமுமேற்படக்கூடும். **யச்சைவ வேதவிஹிதோ யச்சைவாயதனோக்தவெ ஷஹரரத்விஹித: । தேநசைவ விவாதஸ்து ஸாமஞ்ஜஸ்யம் ஸாகஷரமிஷ்ட மத: ॥** என்பது மநுவின் அத்யவஸாயம். இதிலிருந்தே விதிநிஷேதங்களை மநுசெய் திருக்கிறுர். இப்பொழுது ஆதுநிக தத்துவ சாஸ்திரிகள்கூட சாச்வதமான சில வ்யவஸ்தைகளிருக்கின்றன வென்பதையும், அவை காலத்திற்குக் காலம் மாறுவதில்லை யென்றும் அறிய வாரம்பித்திருக்கின்றனர். லண்டன் ஸர்வ கலாசாலை யில் ஆசிரியாராக விருக்கும் ஆர்தர் டண்டி யென்பவர் ஸமூக ஸம்பந்தமான ஆராய்ச்சி செய்து முடிவில் அநாதி காலமான சில வியவஸ்தைகள் இருக்கின் றனவென்பதைக் கண்டு பிடித்திருக்கிறுர். இந்த சாச்வத வ்யவஸ்தைகளைக் கெடுக்கும் வேலைதான் இப்பொழுது நாகரீகமுள்ளவர்களென்றும் ஆசாரத்திருத் தக்காரர்களென்றும் கூறிக் கொள்பவர்ளால் செய்யப் படுகிறது. இந்த பூர்விக ஆசாரமான சாச்வத தர்மத்தைத் தான் சுத்த ஆபாஸமென நவீன ஆசாரத் திருத்தக்காரர்கள் தள்ளப்பார்த்து தங்கள் சிற்றறிவுக்குத் தோன்றும் சில முறைகளை அநுஷ்டிக்கவேண்டுமென்று ப்ரயத்நப்படுகிறுர்கள். ப்ராஹ்மண்யம் போகவேண்டும், கீழ் ஜாதியினர் ராஜ்யபாரம் நடத்தவேண்டு மென்பது இவர்களுடைய கூக்குர லாக விருக்கிறது. மநுவின் விவாக நியமங்கள் போகவேண்டும், அதற்குப்பதில் சாரதா சட்டம் வரவேண்டு மென்பது இவர்கள் கட்சி. கேவலம் விஷயபரர்களாக விருக்கும் சில ஜனங்கள்செய்யும் தவறுகளை பகவதாஜ்ஞையான சாஸ்த்ரங்களின் தோஷங் களாக இவர்கள் கல்பித்துக்கொண்டு அவர்கள் புத்திக்கெட்டும் அற்ப காரணங்களால் பூர்வாசாரங்களையே ஒழித்து விடப்பார்க்கின்றனர். அகம் பாவத்தினுல் சில முறை களை பரிஹாரங்களென இவர்கள் தேடி வருகின்றனர். இவர்களைக் குறித்துத்தான் உபநிஷத்

அவித்யாயாமந்தரே வர்த்தமாநா: ஸ்வயம் தீரா: பண்டிதம்மந்யமாநா: ।
ஜங்கந்யமாநா: பரியந்தி மூடா: அந்தேநைவ நீயமாநா: யதாந்தா: ॥

என்று கூறியிருக்கிறது. அதாவது முழுவதிலும் அறியாமையில் முழுகி அவ்வித மிருந்தும் தங்களையே புத்திமான்களென நினைத்துக்கொண்டு மோஹ சித்தர்களாய் குருடன் மற்றெரு குருடனுக்கு வழிகாட்டுவது போல் நாசத்தையே இவர்கள் தேடு கின்றனர். பகவானுல் வ்யவஸ்திதமான ஏற்பாட்டை அழித்து மாற்றவேண்டுவது தங்கள் முக்கிய தர்மம்போல் நினைத்து இப்பொழுதுள்ள சில துஷ்டங்களை துஷ்டமான முறை களாலேயே சரிப்படுத்தி உலகத்தையே மேம்பட்டதாகச்செய்து விடலாமென்பது இவர் கள் துணிவு. நாம் என்ன சீர்திருத்தங்களைச் செய்வதாக இருந்தாலும் வேதமார்க்கத்தை யநுசரித்த சநாதந தர்மத்தைக் கொண்டே செய்யவேண்டும். வேதங்களுக்கு ஆரம்ப

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

மில்லை. இந்த ஸநாதநதர்மத்திற்கும் ஆரம்பமில்லை. இதற்கெல்லாம் ஆரம்பம் கண்டுபிடிப்பதாகப் பிரவிருத்திப்பது பௌதிக சாஸ்திரிகளின் அஹம்பாவமேயாகும். ஆனால் இப்படி எல்லாவற்றிற்கும் ஆதியைக் கண்டுபிடிக்க முயற்சிப்பது முட்டாள் தனமென்பதை நான் மேலே குறிப்பிட்ட டண்டி யென்பவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகவே இந்த ஸநாதந தர்மங்களென்ன வென்பதை நன்கறிந்து அவற்றை அனுஷ்டிப்பதனாலேயே நமக்கு இகத்திலும் பரத்திலும் க்ஷேம மேற்படக்கூடும்.

யதோ(அ)ப்யுதய நிஶ்ரேயஸஸித்தி: எல்லா காலங்களுக்கும் உபயோகப்படுமாறே இந்த ஸநாதந தர்ம மேற்பட்டிருக்கிறது. புதிய தர்மங்களைச் சிருஷ்டித்துக்கொள்வதில் நமக்கு நம்பிக்கையில்லை. அவை நமக்கு வேண்டவும் வேண்டாம். இந்தப் புதியப் பரீக்ஷைகள் தான்உலகின் எல்லா பாகங்களிலும் ஜன ஸமூஹத்தைக் கெடுத்துப் பல பல க்லேசங்களுக்குமுள்ளாக்கி வருகின்றன. பழமையென்பதற்காகவோ அலுப்பாக விருப்பதற்காகவோ நமது புராதந தர்மங்களை நாம் விட்டுவிட வேண்டாம். நவீன நாகரீகம் இந்தப் பழமை ஏற்பாட்டைப் போக்கி ஸ்திரீ ஸ்வாதந்த்ரியம் பொதுவுடைமை (போல்ஷிவிக் ஏற்பாடு) பாஸிஸ்டு முறை முதலிய உபாயங்களினால் ஏதோ நன்மை செய்துவிடப் போவதாகக் கூறப்படுகிறது. ஆனால், ஸ்திரீகள் இவ்விதம் கட்டுக்கடங்காமல் ஸ்வாதந்த்ரியம் என்று ஆரம்பித்திருக்கும் கிளர்ச்சியினால் வருஷாவருஷம் பல ஆண்கள் இங்கிலாந்தில் இனி கொல்லப்படப் போகிறார்களென்று ஒரு ஆங்கிலேயர் அங்கு கூறியிருக்கிறார். ஸங்க்யையில் ஸ்திரீகளை விட புருஷர்கள் அதிகமாக விருக்கக் கூடாது, எப்படியாவது புருஷர்களின் ஸங்க்யையைக் குறைக்க வேண்டு மென்பதாகச் சட்டம் மூலம் ஒரு ப்ரவிருத்தி செய்யப்படுமென்றும், வயோதிகர், ஸமூகத்திற்குப் பளுவாக விருப்பவர், ரோகிகள் ஆகியோரைக் கொலை செய்து விடச் சட்டம் ஏற்பட்டுவிடு மென்பது அவருடைய பயம். இன்று சீமையிலுள்ளது நாளை இத்தேசத்திலும் வாராதென்பது என்ன நிச்சயம்? இது எப்படியாவது போகட்டும். உலகில் இப்பொழுது 'முன்னேற்றம் (Progress) என்பதன் பெயரால் பூர்வீக ஏற்பாடுகளைக் குலைத்து ஒரே குழப்பமுண்டு பண்ணவே மேனாட்டினர் ஆரம்பித்திருக்கிறார்கள். இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்படி ஸமயத்திற்கு ஸமயம் தர்மம் மாறுதலடைய வேண்டுமென்று பகவான் ஏற்படுத்தவில்லை. ஆகவே கலிகாலத்தில் இவ்விதம் தான் எல்லோரும் தான்தோன்றிகளாக விருக்க வேண்டுமென்று வைதீக ஹிந்துக்களும் நினைத்திருக்கக் கூடாது. இப்படி நினைப்பது சாஸ்திரங்களின் கருத்துக்கு ஒத்ததல்ல. யுகங்களுக்கான ஒரு மாறுதல் கிடையாதென்பதை ஸ்ரீசங்கரர் தமது பாஷ்யத்தில் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

நாளுக்கு நாள் மாறுதல் வேண்டுமென்பது ஒரு ரோகமேயன்றி அது ஆரோக்கியத்திற்கு ஒத்ததல்ல. இந்த ஸமயத்தில் ஸநாதன தர்மம் ஸரியானபடி ப்ராமாணிக ரீதியில் ஸ்தாபிக்கப்பட்டு எங்கும் பரவினால் தான் எல்லாவித அதிருப்தியும் கஷ்டங்களும் போய் எல்லா ஜனங்களுக்கும் ஸுகமென்பது ஏற்படக்கூடும். ஸநாதந தர்மத்திற்குத் தான்த்ருகால ஸ்திதியும் தெரியும். ஆத்திரப்பட்டு ஆலோசனையின்றி நிலையற்றுச் செய்யப்படும் கெடுதல்கள் விஷயத்தில் எச்சரிக்கை செய்யக்கூடியதும் அது தான்.

ஸநாதந தர்மப்படி லௌகிக விஷயங்களை நிர்வஹிக்கும் அதிகாரத்ததை ப்ராஹ்மணர்களிடம் ஒப்படைப்பதாக விருக்கிறது. ஆனல் இந்த ப்ராஹ்மணர்கள் அத் ரோஹத்துடனும், ஸால்பத்துரோகத்துடனும் மதங்கள் வாழ்க்கையை நடத்துபவர்களாக விருக்க வேண்டும். பிறருக்கு மனவருத்தமோ குரோதமோ ஏற்படாத வழியில் இவர்கள் நடந்து கொள்ள வேண்டும். இந்தப்ராஹ்மண்யம் மீண்டும் ஸ்தாபிக்கப்படுவதிலேயே இந்தப் பாரத வர்ஷத்திற்கு மாத்ரமல்லாது ஸமஸ்தஜநத்துக்கே க்ஷேம மேற்பட வேண்டும். இந்தக்கார்யத்தை முதலில் நாம் அவச்யம் செய்தாக வேண்டும். மற்றக் காரியங்களெல்லாம் பொறுத்திருக்கலாம்.

அதர்மமென்பது என்ன? வேத விருத்தமாக விருப்ப தெல்லாம் அதர்மமாகும். தற்காலத்தில் ஜகத்தில்மிகுந்த கெடுதலையுண்டு பண்ணக் கூடியது மெஷீன்களாலாகும். கைத்தொழில் இயக்கமாகும். (Industrialism) பௌதிக சாஸ்த்திரத்தின லேற்பட்ட இப்பெரிய மாறுதலினல் ஏற்பட்டுள்ள கெடுதல் களைப்பற்றி எவ்வளவோ நூல்கள் எழுதப்பட்டு இருக்கின்றன. மிகுந்த உற்சாகத்துடன் நீராவி என்ஜின் கண்டுபிடிக்கப் பட்டதிலிருந்து இக்கஷ்டமாரம்பமாயிற்று. இதனல் சரக்குகள் உற்பத்தி வெகு சுலபப் பட்டு எல்லோருக்கும் அதிக ஸௌக்யம் ஏற்படப்போவதாக அக்காலத்தில் கூறப் பட்டது. அத்துடன் முதலாளிகள் தொழிலாளி போராட்டமும், யுத்தமும் தொழிலாளர் கூட்டமாகச்சேர்ந்து போராட்டம் நடத்துவது போன்றவஷ்ளங்களும்கூட ஏற்பட்டன. ஆனல் உலகம் வேதக்கட்டளையைக் கவனித்திருக்குமாயின் இந்தக் கைத்தொழில் இயக்கத்திற்கே இடமேற்பட்டிருக்காது.

பெரியயந்திரங்களை உபயோகிப்பதையே மநுகண்டித்திருக்கிருர். (மஹாயந்த்ர ப்ரவர்த்தநம்)இது ஜன ஸமூஹத்திற்கே பெரிய அநீதியாகுமென அவர் அநாதரித்து அத்துடன் மஹாயந்திர ப்ரவர்த்தனஞ்செய்வதற்குத் தண்டனையுமேற்படுத்த வேண்டு மென்று அவர் கூறியிருக்கிருர். அவர் உபதேசப்படி நடந்தால் நாட்டில் பஞ்சமென்பது வெகு தூரம் குறையக்கூடும். தேசத்தில் உள் நாட்டு உபயோகத்திற்கு மிகவும் அவசியமானவைகளை வெளி தேசங்களுக்கு அனுப்பக் கூடாதென அவர் கூறியிருக்கிருர். அதாவது ப்ரக்யாத பந்தனி, ப்ரதி வித்தானி முதலியவைகளை ஏற்றுமதி செய்வதை அவர் தடுத்திருக்கிருர். இது விஷயங்களில் ராஜாங்க உத்தியோகஸ்தர்கள் ஒழுங்குத்தவருகவிருந்தால் அவர்களுக்குத் தேசத்தை விட்டுப்ரஷ்டஞ்செய்வதான கடுமையான தண்டனை விதிக்கவேண்டு மென்பது மநுவின் அபிப்பிராயமாகும். கேவல லோகாயத்ததினலும் லௌகிக போக காமத்தினனும் பல கெடுதல்க ளேற்படக் கூடு மென்பதை மநு வெகுகாலம் முன்னரே கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிருர். அவ்வளவு தீர்க்க தர்சனத்துடன் அவர் ஜ்ஞான திருஷ்டியால் கூறியவற்றைபயனற்ற பழைய ஸமாசாரமென ஒதுக்கி கேவல ஸாமன்யர் புத்திக்கெட்டிய ப்ரகாரம் சட்ட திட்டங்களை யேற்படுத்தி விட்டனர். விவாக விஷயத்தில் மநு கூறியுள்ள விதிகள்தான் ஜன ஸமூகத்திற்கு மிகுந்த நன்மைகளை யுண்டுபண்ணக்கூடியவை. கிரீஸ், ரோம் முதலிய தேசங்கள் இதனல் நன்மையடைந்திருக்கின்றன. பெண்ணுக்கோ பையனுக்கோ அஹம்பாவ மேற்பட்டு ஸ்வேச்சா. ப்ரவிருத்தியேற்படுமுன் அந்யோந்ய பாவத்தையும் கீழ்ப்படிந்து நடக்கும்பான்மையையும் விவாகமாகும் பெண் பிள்ளைகளுக் குண்

டுபெண்ணி விடவேண்டு மென்பது அவரதுகருத்து. இந்த எண்ணம் நிறை வேறுவதற்காக ப்ரஹ்ம புராணத்தில் இன்னும் அதிகப்படியாகக்கூடக் கூறப்பட் டிருக்கிறது. யாவஜ்ஜாதஜாதாதி யாவத்க்ஷௌமாங்கி வாஸஸாஹி: । தாவத் கந்யா ப்ரதாதவ்யா நோசேத் விதாஸ்யோமதி: ॥ அத்துடன் இந்த ஸம்ஸ் காரங்கள் தேஹத்தைப் பரிசுத்தமாக்கவும் இந்திரியங்களை அடக்கவும், பையனையும், பெண்ணையும் மேன்மையான வழியில் செலுத்தவும் ஏற்பட்டவை யென்பதில் சிறிதும் ஸந்தேகமில்லை. பகவானை நாம் அடைய வேண்டுமானல் அதர்மத்தில் ப்ரவர்த்திக்காமல் சித்த சாந்தியை முதலில் பெற முயற்சிக்க வேண்டும். ப்ரீதியைக் கேவலம் காமமாக மாற்ருமலிருக்க எவ்வளவோ ஜாக்கிரதையாக யிருக்கவேண்டும். ஹிந்து மதத்தின் தத்துவமே இந்திரியங்களை இஷ்டப்படி விடாமல் அவற்றை அடக்குவதாகும். இந்த உபதேசம் நிறைவேற வேண்டுமானல் பெண்கள் ஸம்பந்தப்பட்ட வரையில் பால்ய விவாகம் அத்யாவசியமாகும்.

நாஸ்தி புத்திரயுக்தஸ்ய ந சாயுக்தஸ்ய பாவநா ।
ந சாபாவயத: சாந்திரசாந்தஸ்ய குத: ஸுகம் ॥

அக்நிஸாக்ஷிகமாக அக்நியின் முன்னதாக வஸிப்பது மனித ஸ்வாபத்தைச் சீர்மைப்படுத்த எவ்வளவோ உபயோகமானதாகும். ஆகவேதான் நமது மந்த்ரங்களில் அக்நி தேவதை கொண்டாடப்பட்டுக் காமமென்பது வெறுக்கப்படுகிறது. இது ஸம் பந்தமாக ஸோம "அதாத்" என்ற மந்திரத்தின் கருத்தை உதாரணமாகப் பரி சீலனை செய்ய வேண்டுமென நான் கேட்டுக் கொள்ளுகிறேன். யுகத்திற் கநுகுணமாக மநு நமது விவாக வயதை நிர்ணயித்திருப்பது பற்றி இப்பொழுது சண்டையிட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லை. ரிதுரோதம் கூடாதென்பதை அவர் கண்டிப்பாகத் தடுத்திருப்பதையே முக்கியமாகக் கவனிக்கவேண்டும். தவிர தகுந்த வரனைத் தேடிக்கொடுக்கும் விஷயத்தில் பெண்ணின் தகப்பனர் வயதைக் கூடக் கவனிக்கவேண்டுவதில்லையென அவர் சொல்லியிருக்கிருர்.

இதில் ஏராளமாக சாஸ்திர வசனங்களைச் சொல்லிக்கொண்டிருக்கத் தேவை யில்லை எல்லா ஸ்மிருதிகளும் ருதுவாகும் முன்னதாகக் கந்யகைகளுக்கு விவாகஞ் செய்ய வேண்டுமென்றே வற்புறுத்துகின்றன. மிகவும் பழைமையான புராணமான விஷ்ணு புராணமும் பால்ய விவாகமே செய்ய வேண்டுமென்று கூறுகிறது.

விவாக விஷயத்தில் இவ்விதம் நாம் ஒரு நம்பிக்கை வைப்பது மிக்கக் கெடுதலென ஸிம்லாவி லுள்ளவர்கள் கூறினர். இதில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையில் அவர்கள் ஆச்சர்யமும் வெளியிட்டனர். இவர்களுக்கு இதில் பிரமாதமான ஸம்சயமும் ஆக்ஷேப மும் தோன்றி விடுகிறது. இந்திரியங்களுக்குப் புலப்படுவது தவிர வேறு விஷயங்களை அவர்கள் அறிந்தவர்களில்லை. இவர்களைப் பற்றித் தான் பகவான் கூட

அஜ்ஞச்சாச்ரத்ததாநச்ச ஸம்சயாத்மா விநச்யதி ।

என்று சொல்லி யிருக்கிருர். என்ன ஆச்சர்யம்! தற்கால நவீன புருஷர்களின் அறி யாமையையும் க்ருதஜ்ஞதையற்ற தன்மையையும் என்னவென்று கூறுவது? தம் வாழ்

விற்கே முக்கிய ஆதாரமாக விருக்கும் தெய்வத்தை மறுத்து விடுகிறான். தாம் அயர்ந்து கைகால்களுக்கு வ்யாபாரமின்றித் தம்மை யறியாது தூங்கும் பொழுது தம்மைக் காப்பவன் யாரென்பதை அவன் சற்றும் நிதானிப்ப தில்லை. தற்கால மனிதர்கள் இவ்விதம்தான் இருக்கின்றனர். தன்னைத்தான் அறிந்துகொள்ள வேண்டுமாயின் அவன் வைதிக ஸம்ஸ்காரங்களைச் செய்து அந்த விதிகளுக்குட்பட வேண்டுவதுதான். ஆங்கில பாஷாக் கல்வி பெற்ற இந்தியர்கள் இப்பொழுது சாரதா சட்டத்தைப் பிரமாத்மாக ஆதரிக்கிறார்கள். நல்ல பையன் ஒருவன் இருக்கிறான். நல்ல பெண் ஒருவள் இருக்கிறாள். அந்தப் பெண்ணின் தகப்பனின் ஸம்மதியின்பேரில் அந்தப் பையன் அந்தப் பெண்ணை விவாகஞ்செய்து கொள்ளுகிறான். அவ்வளவுதான் உடனே அந்தப்பையன் கெட்டு விடுகிறான். அந்தப் பெண் பால்யத்தில் இறந்துவிடுகிறாள். சிசு மாணம் வந்துவிடுகிறது. பால்ய வைதவ்யம் நேர்ந்து விடுகிறது. சுயராஜ்யமே தடைப்பட்டு விடுகிறது. ஆகவே அந்த பையனும் அந்த விவாகத்தில் ஸம்பந்தப்படுபவர்களும் தண்டனை அடைய வேண்டியதுதான். ஆஹா! என்ன இவர்களுடைய புத்தி ஸூக்ஷ்மம்! ஆனால் ஒரு பெண் தன்னிஷ்டப்படி ஒரு புருஷனுடன் பழகிவிட்டுப் பிறகு இம்மாதிரிக் காரியத்தைச் செய்துவிட்டதாகத் தந்தையிடம் சொல்லி அவள் அந்தப் பையனின் மனம்வருத்தப்படும்படிசெய்து தந்தை நடந்து கொள்ளுமாறு விடுவாளானால் உடனே அவள்ஜகத்தைக் காப்பாற்றி விடுகிறாளாம். தேசத்தில் வீர புருஷர்களை யுண்டுபண்ணி விடுவாளாம். நாகரீகமேற்பட்டு விடுகிறதாம். சுயராஜ்யமும் வந்து விடுகிறதாம். தந்தை ஸம்மதி பெறாமல் தாமே விவாகத்தை யேற்பாடு செய்துகொண்டவுடன் அவளுக்கும் அவள்குழந்தைகளுக்கும் தீர்க்காயுஸ் உண்டுபண்ணிக்கொண்டு விடுகிறார்களாம். ஆஹா! என்ன மௌட்யம்! என்ன வைபரீத்யம்! இம்மாதிரியான கார்யங்களினால் ஹிந்துஸமூஹத்தின் அஸ்திவாரமே சீர்குலைக்கப்படுகிறது. சாருசந்திர மித்ரர் தமது புஸ்தகத்தில் இந்தப்பிதற்றலை அழகாகக் கண்டித்திருக்கிறார். ஆனால் அதையார்கேட்கிறார்கள்? அவர் ஸம்மத வயதுக் கமிட்டிமுன் கொடுத்த இம்மாதிரி ஸாக்ஷ்யம் வெளியிடப்படவேயில்லை. ஸ்வராஜ்யம் தேடிக்கொடுப்பவர்களுடைய மனோபாவம் இவ்விதம் உண்மையை அடக்கப்பார்ப்பதிலிருந்து நன்கு வெளியாகிறது. பாச்சாத்திய ராஜாங்கத்தார்கூட இம்மாதிரி செய்யத் துணிவதில்லை. இப்பொழுது சீர்த்திருத்தகாரர்களென வருவோர் இப் பிரச்னையின் முழுத்தன்மையையும் தீர்க்கமாக ஆலோசித்திருப்பார்களா வென்பது ஸந்தேஹமாகவே யிருக்கிறது. ஆகையால் தான் சாருசந்திரமித்ரா, பண்டித க்ருஷ்ணமாசாரியார், நரேந்திர நாத் சேட் ஆகியோர் கொடுத்த ஸாக்ஷ்யங்களை இந்த விசாரணைக் கமிட்டியார் வெளிக்கே கொண்டு வாரமல் மறைத்து விட்டனர்.

இதற்குப் பரிஹார மென்ன? இது தான் முக்ய விஷயம். ப்ராஹ்மணர்களிடமும் அவர்கள் ஸநாதந தர்மத்தை நிலை நிறுத்துவதிலும் நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். நான் ஸிம்லாவிற்கு இந்திய சட்ட ஸபை நடந்த பொழுது போன ஸமயத்தில் இந்த பால்ய விவாஹத் தடைச் சட்டத்திற்கு ஆதிகர்த்தாவான சாரதா என்னைப்பார்த்து "ப்ராஹ்மணர்களாகிய நீங்கள் வெகுகாலமாக எங்களை அடக்கி ஹிம்ஸித்திருக்கின்றீர்கள். நீங்கள் இப்பொழுது எங்களுடன் வரவேண்டும். அல்லது மறைந்துவிட வேண்டும்" என்று வழக்கமான தூஷணையை என்னிடம் வெளியிட்டார். அவர் இப்படிப் பேசி

யது ஸகஜம்தான். பிரதிதினமும் நமக்கு இவ்விதம் தான் சொல்லப்பட்டு வருகிறது. பிராஹ்மண்யத்தைப் புதுப்பித்து ப்ராஹ்மண ஸமூகத்தை சீர்மைப்படுத்தவேண்டியது தான் இதற்கு நாம் செய்யும் பதிலாகும். தூரதேசத்திலிருந்து மனக்லேசத்துடன் ஸஹாக்களின்றிச் சென்னைக்கு வந்திருக்கிறேன். இன்னும் இத்தேசம் வைதிக மதத்திற்குக் கோட்டையாகவிருந்து வருகிறது. ஸ்ரீ சங்கரரும் ஸ்ரீ ராமாநுஜரும் அவதரித்த இந்த தேசம் இப்பொழுது இதில் தகுந்த மார்க்கத்தைக் காட்டத் தவறுதென்பதே எனது நம்பிக்கை. இப்பொழுது ப்ராஹ்மண ஸமூஹம் மிகவும் கேவல நிலைமையில் சீரழிந்திருக்கிறது. இருந்தாலும் இந்த ஸமூஹம் மீண்டும் தனது உயர் நிலையையடைய முயற்சிக்க முடியாதா? மீண்டும் எங்கும் வேதகோஷமேற்படாதா? நான் சாஸ்த்ரங்களில் த்ருடமான நம்பிக்கை கொண்டிருக்கிறேன். வனபர்வத்தில் மார்க்கண்டேயருடைய பின்வரும் வாக்யம் இன்னும் என் காதில் த்வனித்துக்கொண்டிருக்கிறது.

> ஊ-வெ-ஜ்ஞாவா ஸ-வெஜ்ஞாவா ப்ராக்ருதாः ஸம்ஸ்க்ருதாஸ்ததா ।
> ப்ராஹ்மணா நாவமந்தவ்யா ஹஸ்மச்சந்நா இவாக்நயः ॥
> யதா ஸ்மசாநே தீப்தௌஜாः பாவகோ நைவ துஷ்யதி ।
> ஏவம் வித்வாந் அவித்வாந் வா ப்ராஹ்மணோ தைவதம் மஹத் ॥

ப்ராஹ்மண்ய மதம் இன்னும் ஏராளமான ஜனங்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. இதற்குப் பல வேறு ஸமயங்களிலும் நேர்ந்த ஆபத்தையும் அதுநிவர்த்தித்துக் கொண்டுவந்திருந்தாலும், இது எல்லா ப்ரகாரங்களுக்கும் இடம்கொடுத்திருப்பதால் அது ஒரே மதமாக இல்லாமல் ஒரே ஸங்க்ரமமாகக் காணப்படுகிறது. இதனுல் தான் ஹிந்து மதத்தின்பெயரால் சாரதா சட்டம் போன்றவைகள் செய்யப்படுவது ஸாத்யமாகிறது. ஆகையால் இந்த ஆபாஸங்களை யெல்லாம் நம் ஸமூகத்திலிருந்து அடியுடன் விலக்கவேண்டும். கலப்பில்லாத சுத்த ப்ராஹ்மண்யத்தை நாம் நிலை நிறுத்த இன்று முதல் ப்ரவ்ருத்திக்க வேண்டும். இப்பொழுது தேசத்திலுள்ள எல்லாக் கஷ்டங்களும், அதாவது இந்திய தேசம் அன்னியர் வசப்பட்டிருப்பது முதல் குழந்தைக்குக் கட்டி விழுவது வரையில் எல்லாம் இதனுல் வந்துவிட்டதெனக் கூறப்படுகிறது. சென்னையில் மந்திரி கோளாறு நேர்ந்ததும், பம்பாயில் கடல் தூர்க்கும் திட்டம் மோசடியாகப், போனதும் வங்காளத்தில் காங்கிரஸ் காரர்கள் தங்களுக்குள் யுத்தஞ் செய்து சொல்வதும் எல்லாம் இதனுல் தான் என்று சீர்திருத்தக்காரர்கள் கனவு காண்கின்றனர். பாச்சாத்யர்கள் நம் தேசப் பொருள்களை யெல்லாம் சுரண்டிக்கொண்டு போவதனுலேயே தேசத்தில் கஷ்டங்கள் மிகுந்திருக்கின்றன வென்று தாதாயாய் என்ற பேரியவர் கூறிய தெல்லாம்|பொய் "மிகக் கெடுதலும் க்ரூரமான துமான" ஸநாதந தர்மத்தினுலேயே இந்திய ஸ்திரிகள் கெட்டு விடுகின்றனரென்று இப்பொழுது கூறப்படுகிறது. காங்கிரஸ் ஸபையின் தலைவர் அபிப்பிராயத்தில் ஸநாதந தர்ம மென்பது "மிகக்கெடுதலாகவும் க்ரூரமாகவு" மிருக்கிறது. ஸநாதந தர்மத்தை நம்தேசத்தவர்களும் அந்ய தேசத்தவரும் எவ்வளவோ விதமாகத் தூஷித்து வருகின்றனர். தூஷணைகளுக் கொன்றும் அளவில்லை. ஆனுல் அதற்காக நான் வருத்தப் பட வில்லை. ஸஜ்ஜநாநாம் தவோ வ்ருத்திः இவர்கள் தூஷணங்களின் பயனுக நமது ப்ருவிருத்தி மஹத்தானதாக விருக்க வேண்டும். தர்ம ஸ்தாபநத்திற்காக நாம்

மஹத்தான தியாகத்தைச்செய்ய வேண்டும், எனக்கு நவீன பாவனைகள் ஒன்றும் பிடிக்கவில்லை. ஆகவேதான் காங்கிரஸ் கோஷ்டியில் கூட என்னை கட்டுப் பொட்டியாக நினைப்பது வழக்கம். அவர்கள் கோஷ்டியில் எனக்கும் இருப்பு ஸௌகர்யமாக விருப்பதில்லை. இப்பொழுது நாம் இந்தியா மந்திரிக்கும் பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்கும் பிரார்த்தனைகள் செய்துகொண்டிருப்பதில் பயனில்லை. அது ஸநாதந தர்மத்திற்கு அநுகுணமானதல்ல. நமது சாஸ்திரங்கள் இதில் தெளிவாக விருக்கின்றன. நமது பிரார்த்தனைகளெல்லாம் பகவானுக்கும், நமது ரிஷிகளுக்கும் ஆசார்யர்களுக்குமே செய்யப்படவேண்டும். அவர்கள் தான் நம்மை இப்பொழுது ரக்ஷிக்கக்கூடும். ப்ராஹ்மணர்கள் தங்களுக்கான உயர்ந்த பதவியைப் பெறுமாறு ஸத் யோக்தியைப் பிரார்த்திப்போம். பயமுறுத்தல்களையும் ஸமரஸப் பேச்சுகளையும் செய்வதென்பது நவீந தந்த்ரமாகவிருக்கலாம். ஆனால் அதில் எனக்கு நம்பிக்கையில்லை. தர்ம ஜிஜ்ஞாஸை யேற்படட்டும். இந்த ஸதஸ்ஸை பழைய காலத்தில் நைமிசாரணயத்தில் கூடும் ரிஷிகள் கூட்டம்போல் நான் பாவிக்கிறேன். நீங்கள் ஸரியான வழிகாட்டும் படியாகப் பிரார்த்திக்கிறேன்.

ஸஹாகம் நக்ஷவ—ழீநாம் வரித்ராணம் கஷம் ஹ்வெகஹ என்பதே என்னுடைய ப்ரார்த்தனை யாகும்.

தீர்மாநங்களின் விவரம்.

டிஸம்பர் 1-ந் தேதி சநாதந தர்மிகளின் மகாநாடு மறுபடியும் ஒற்றைவாடை நாடகக் கொட்டகையில் கூடிற்று.

ஸநாதந தர்மத்திற்காக பரிச்ரமப்பட்ட தர்பங்க மகாராஜா, காஸிம் பஜார் மகாராஜாதி ராஜா, நேபாளத்தின் பிரதம மந்திரி இவர்களுடைய நிர்யாணம நேர்ந்தது துக்கிப்பதாக ஒரு தீர்மானம் அக்கிராசனரால் பிரேரிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

சாரதாச் சட்ட கண்டநம்.

பிறகு பின் வரும் தீர்மானம் மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீனிவாஸய்யங்காரால் பிரேரிக்கப்பட்டது:—

ஸமீபத்தில் நிறைவேறிய பால்ய விவாகத்தடைச் சட்டத்தை இம் மகாநாடு அழுத்தமாகக் கண்டிக்கிறது. மத விஷயமாகத் தலையிடுவதில்லையென்று கவர்ன்மெண்டு அளித்த வாக்குறுதியை அச்சட்டம் மீறியதாயிருக்கிறது. ருதுவான பிறகு விவாகம் செய்தால் பரிகாரமே யில்லாத மகத்தான தோஷம்நேரும் என்று நம்பும் ஹிந்துக்கள் அந்தபாபத்தைச் செய்யுமாறு இச்சட்டம் பலவந்தப் படுத்துகிறபடியால், மத அநுஷ்டானத்தைச் சிக்ஷிக்கும் அடக்கு முறையாக இதுகாணப்படுகிறது. அச்சட்டத்தை ரத்து செய்வதற்கோ அல்லது ருதுவான பிறகு விவாகம் செய்யக்கூடாது என்று நம்புபவர்களை பாதிக்காமல் அச்சட்டத்தில் விலக்கு செய்யும் வரையிலோ எல்லா வழியிலும் பலத்தகிளர்ச்சி செய்யவேண்டுமென்று இம்மகாநாடு வற்புறுத்துகிறது. இச்சட்ட மிருப்பதைப் பொருட்படுத்தாமலே எப்பொழுதும்போல் விவாகத்தை நடத்தி வரவேண்டுமென்று ஹிந்துக்களை இம்மகாநாடு கேட்டுக்

கொள்ளுகிறது. இச்சட்டத்தை ரத்து செய்வதாகவும், சட்ட சபையோ கவர்ன்மெண்டோ மத ஸம்பரதாய விஷயங்களில் தலையிடுவதை எதிர்த்து நிற்பதாகவும் வாக்களிக்கும் அபேட்சகர்களை இனி சட்ட சபைகளுக்கு நிறுத்தவேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.''

இதை ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸய்யங்கார் பிரேரித்துப் பேசியதாவது:— ஹிந்து மதத்தைச் சேர்ந்த பல ஸமூகத்தாரிடையே ருதுவாவதற்கு முன்னால் கந்யைகைகளுக்கு விவாகம் செய்துவைக்கும் வழக்கம் வெகுகாலமாக இருந்துவருகிறது. இதைத்தடுக்க இப்பொழுது சட்டமியற்றியிருப்பது நம்மால் ஸகித்துக்கொண்டிருக்கக் கூடியதல்ல. இவ்விஷயமாக இரண்டு முக்கிய ஆக்ஷேபங்களை நான் இச்சமயம் எடுத்துக்கூற விரும்புகிறேன். உலக முழுவதும் ஜனநாயக ஆட்சி நிலவிவருகிறது. இந்த ஆட்சியில் எந்த மனிதரும் தங்களிஷ்டப்பிரகாரமே நடந்துகொள்ள பூர்ண ஸ்வதந்தரமளிக்கப்பட்டிருக்கிறது. ஹிந்துக்கள் தங்கள் பெண்களை ருதுவாகுமுன்னர் விவாகம் செய்து வைக்கும் ஸ்வதந்தரம் பெற்றிருக்கின்றனர். இவ்விவாகம் நம்முடைய மத விதிகளில் ஒன்றாகும். இவ்விதிகளில் நம்பிக்கையுள்ளவர் ஒருவர் மாத்திர இருப்பினும் அவரை தடைப்படுத்த எந்த ஜனநாயகக் கவர்ன்மெண்டிற்கும் அதிகாரம் கிடையாது. ஆனால் நம்நாட்டில் கோடிக்கணக்கான ஜனங்கள் இவ்விதிகளில் நம்பிக்கையுடையவர்களா யிருக்கிறார்கள். அதைத் தடுக்க ஒரு சட்ட மியற்றப்பட்டு அடுத்த ஏப்ரல் மாதம் முதல்தேதி அது அமுலுக்கு வருகிறது. அந்ததினம் கிறிஸ்தவர்களால் "முட்டாள்கள் தினம்" என்று கொண்டாடப்படுவது வழக்கம் என்பதையும் இந்தஸமயம் ஞாபகப்படுத்துகிறேன். இச்சட்டம் அமுலுக்கு வருமாறு விட்டுவிடும் பக்ஷத்தில் ஏற்படக்கூடிய விபரீதங்களை நாம் முன்னெச்சரிக்கையாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்பொழுது இந்த விவாக ஸம்ஸ்காரத்தில் தலையிடும் இச்சட்ட சபையும் கவர்ன்மெண்டும் இதை ஆதாரமாகக் கொண்டு நாளைக்கு நமது பூஜையோ பிரார்த்தனைகளோ எவ்விதம் நடத்தப்பட வேண்டும் என்று விதிக்கத் தலைப்பட்டுவிடுவார்கள். இதை யறிந்துதான் முஸ்லீம்களும் பலத்தக் கிளர்ச்சி செய்கிறார்கள் என்பதையறியவேண்டும். முஸ்லீம்களுக்குள் ருதுவாகு முன்னர் விவாகம் நடக்கவேண்டும் என்ற மத நிர்ப்பந்தம் கிடையாது. ஆனாலும் இச்சட்டம் மதத்தில் தலையிடுவதற்கு இடம் கொடுக்கிற என்பதை யறிந்தே அவர்கள் தற்சமயம் கிளர்ச்சி செய்கிறார்கள். இவ்விதம் நம் மதத்தைப் பாதுகாக்கக்கூடிய ஊக்கம் நம்முள் எழுவதற்கு ஸ்ரீமான் சார்தா காரணமாயிருந்திருப்பதை நாம் பாராட்டவேண்டும். அவர் கொண்டி வந்து இயற்றியுள்ள சட்டம் நம் ராஜீய ஸ்வதந்தரம், மத ஸ்வதந்தரம் யாவற்றையும் பறிமுதல் செய்வதாயிருக்கிறது. ஜனங்களுடைய மதாசாரங்களில் எந்த சட்ட சபைக்கும் தலையிட அதிகாரம் கிடையாது. இச்சமயம் நாம் பலத்த கிளர்ச்சி செய்து ஆங்கிலேயரை நம் கோரிக்கைக்கு இணங்குமாறு செய்ய வேண்டும். பலத்த கிளர்ச்சி செய்தால் அவர்களுக்கு உணர்ச்சி ஏற்படும். நாம் இதுவரை அயர்ந்திருந்ததனால் ஏமாந்துபோனோம். அதற்குப் பரிஹாரம் தேடுவதற்காக நாம் இப்பொழுது முதல் ஸங்கல்பம் செய்துகொண்டு, சநாதந தர்மத்தை நிலைநாட்ட முன்வரவேண்டும். சட்டசபையில் சநாதந தர்ம விதிகளுக்குப் புறம்பாகப் போக இடமளிக்காதவர்களையே நாம் இனிச் சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்கவேண்டும். சாரதா சட்டம்

மத அநுஷ்டானத்தில் தலையிடுகிறபடியால் அதை நாம் லக்ஷ்யம் செய்யா மல் தர்ம மார்க்கத்தைப் பின்பற்றி நமது பெண்களை ருதுவாகுமுன்னர் விவாகம் செய்து வைக்கவேண்டும்.

ஸ்ரீமான் எம். கே. ஆச்சார்யார். பிரேரணையை ஆதரித்துப் பேசிய தாவது.—காந்தி—மகாத்மா என்ற பெருமையை இழந்துவிட்டார். ஸ்ரீமத் ராமாயணத்தை ஆதாரமாகக் கொண்டு இந்த காந்தி தர்மோபதேசம் செய்து வருகிறார். உலகஸம்ரக்ஷகராக அவதரித்த ஸ்ரீ ராகவனுக்கு விவாகம் ஆன பொழுது அவர் வயதென்னவென்பதை அவர் கவனித்தாரா என்று நான் கேட்கிறேன். விச்வாமித்ர மகரிஷி ஸ்ரீ ராமனை ஸீதாப்பிராட்டிக்கு விவாகம் செய்விக்க அழைத்துச் சென்றபொழுது அவருக்கு வயது 16 என்று வால்மீகி கூறியிருக்கிறார். இவ்விதம் புனிதமான கன்னிகா விவாகத்தைத் தடுக்கக்கூடிய சட்டமியற்றப் பட்டிருப்பதானது ராக்ஷஸத்தனமாயிருக்கிறது. அதைவிட அநாகரீகம்கிடையாது. சட்டசபையில் இம்மசோதாவைப்பற்றிப் பேசியவர்கள் ஸ்திரீகளை ஒருதனிப் பிரிவினராகப் பாவித்துப் பேசினார்கள். நம் மத ரீதியாகக் கணவனும் மனைவியும் இணைபிரியா ஒருமை வாய்ந்த தம்பதிகள் என்று ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய பிரியக்கூடாத ஸம்பந்தத்தை விலக்கி விடும் வழியில் நம் மாகாண ஸ்திரீகள் சிலர் பேசியிருப்பது மிகக் கேவலமாக விருக்கிறது. இங்கிருந்து 2 அல்லது3 ஸ்திரீகள் இங்கிலாந்து சென்று இந்திய ஸ்திரீகளின் லட்சியத்தைப்பற்றி அவதூறாகப் பேசியிருப்பதும் வெறுக்கத்தக்க தாயிருக்கிறது. இவர்கள் இந்திய ஸ்திரீகளின் பிரதிநிதிகளல்லவென்பதை நாம் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

இந்த சாரதா சட்டவிஷயமாகக் கவர்ன்மெண்டு ஆரம்பத்தில் நடுநிலைமை வகிப்பதாக வாக்களித்தார்கள். அப்பால் ஸ்ரீமான் சாரதாவின் காரணங்களைக் கேட்டுக் கவர்ன்மெண்டு அவரை ஆதரிக்க முற்பட்டனர். இம் மசோதாவை ஆதரித்த ஐரோப்பியர்களுக்கோ, கவர்ன்மெண்டிற்கோ நம் மதத்தைப் பற்றி என்ன தெரியும்? ஸ்ரீமான் சாரதாவிற்குத்தான் விவாகத்தைப்பற்றி என்ன தெரியும். மநுவிலிருந்து ச்லோகங்களைக் கூடச் சரியாகக் வாசிக்க சக்தியில்லாத அவர் மத ஆசாரத்தைமாற்ற முன் வந்து விட்டார். ஜனநாயக ஆட்சியென்ற இக்காலத்தில் யார் பக்கம் அதிக வோட்டுகளிருக்கின்றனவோ அவரிஷ்டப்படி நடக்கிறது. நீங்கள் யாவரும் சேர்ந்து பெரும்பாலோராகக்கூடி இச்சட்டத்தை ரத்து செய்ய முன்வர வேண்டும். இதற்கு எதிராக ஸத்யாக்கிரகம் செய்யவும் தயாராயிருங்கள். அப்பொழுது சட்டத்தை நிஷ்பலமாகச் செய்து விடலாம்.

ஸ்ரீமான் யாவலராமமூர்த்தி. பிரேரணையைமேலும் ஆதரித்துப்பேசியதில் சாரதா சட்டம் சுத்த ஆபாஸ சட்டமென்றும், ஹிந்து மதத்தைக் காப்பதா அல்லது அழியவிடுவதா வென்பதே சநாதநிகளின் கேள்வியென்றும், ஸ்வராஜ்யம் சாச்வதமில்லையென்றும் மதமே சாச்வதமென்றும், சாரதா சட்டத்தை ரௌலட் சட்டத்தைப் போல் செய்து விடவேண்டும் என்றும், பால்ய விவாகமே உத்கிருஷ்டமான விவாகமென்று மேல் நாட்டாரும்கூட இப்பொழுது ஒப்புக் கொண்டிருப்பதாகவும், பதிவிருத்யமே ஒரு தேசத்

திற்கு உயர்ந்த அலங்காரமென்றும் அதை பால்ய விவாகம்தான் உண்டுபண்ணுகிறதென்றும், ராஜப்பிரதிநிதியிடம் ஜனங்கள் சென்று அச்சட்டம் அமுலுக்கு வந்தால் ராஜ விசுவாசத்தை இழக்க நேரும் என்று தெரிவிக்கவேண்டும் என்றும் சொன்னார்.

ஸ்ரீமான் சோமதேவ சர்மா. பேசியதில் ஆசார சீர்திருத்தக்காரர்கள் மதத்தின் விசேஷமும், ஆத்மாவின் பெருமையும் என்னவென்பதேயறியாதவர்கள் என்றும், அவர்கள் கேவலம் சிற்றின்பத்தையே பெரிதாகக் கருதுகிறார்கள் என்றும் வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி புராணம் முதலியவற்றைப் பற்றிப் பேச அருகதையற்றவர்கள் என்றும், இவர்களுடைய துஷ்ட ப்ரவிருத்திகளுக்கு மதாபிமானிகள் இடம் கொடுக்கக்கூடாது என்றும், மதத்திற்குத் தடையாக அவர்களியற்றும் சட்டங்களையும் முக்கியமாகச் சாரதா சட்டத்தையும் எதிர்க்க வேண்டுமென்றும் சொன்னார்.

ஸ்ரீமதி தூவூரி ஸுப்பம்மகாரு (ஆந்த்ர தேச ஸ்தீரீ பிரதிநிதி) மேலும் பிரேரணையை ஆதரித்துப் பேசியதில், புராதந காலம் தொடங்கி நீடித்து வரும் உயர்ந்த வழக்கங்களைப் பாதுகாக்கவென்று சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அநாகரீகத்திற்குத் தடையாகச் சட்டமியற்றச் சம்மதிதத்து வருந்தத் தக்கதென்றும், பெஜவாடா ஸ்திரீகள் இச்சட்டத்தை விரும்பவில்லையென்று தாமறிவதாகவும், மதஸ்வதந்தர பரிபாலனம் செய்வதாக விக்டோரியா மகாராணியளித்த வாக்குறுதியைத் தழுவிக் கவர்ன்மெண்டு இச்சாரதா சட்டத்தை ரத்து செய்ய உடனே முற்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தீர்மானம் பிறகு வோட்டுக்கு விடப்பட்டு யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஏப்ரலில் விவாகங்கள்.

சாஸ்திரோக்தமாக ருதுவாகு முன்னர் விவாகம் செய்ய விருக்கும் பெற்றோர்கள் அவ்விவாகங்களை ஏப்ரலுக்கப்பால் சாரதா சட்டம் அமுலுக்கு வந்த பிறகே செய்துவைக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் ஸ்ரீமான் ஜயராமய்யரால் பிரேரிக்கப்பட்டு ஸ்ரீமான் யூ. பி. கிருஷ்ணமாச்சாரியாரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

மத ஸ்வாதந்த்ரியம்

ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி அய்யர் பின்வரும் தீர்மானத்தைப் பிரேரித்தார் :—இந்தியாவின் அரசியல் விஷயமாக ஏற்படும் எந்தச் சட்டத்திலும், எம்மதத்தவருடைய கொள்கையோ சம்பிரதாய அனுஷ்டானங்களோ கொஞ்சங்கூடப் பாதிக்கப்படமாட்டாது என்ற சாச்வதமான பாது காப்பு விதியொன்று ஏற்படுத்த வேண்டும். பொது ஜன நன்மையையோ அமைதியையோ பாதிக்காமலிருக்கும் வழியில் மாத்ரம் விலக்குகள் ஏற்படுத்தலாம். எந்தஜாதியினருடையவும் மதம், மதாசாரங்கள், ஸம்பிரதாய

அனுஷ்டானங்கள், ஒன்றையும் பாதிக்குமாறு எச்சட்ட சபையிலும் சட்ட மியற்றப்படமாட்டாது என்ற உறுதி தரக்கூடிய விதி ஒன்று தெளிவாக ஏற்படவேண்டும். தவிரவும் மத ஸம்பந்தமில்லாத பிரஜா உரிமையையோ, ஒரு ஜாதியினரின் புராதன வழக்கங்களையோ மாற்றக்கூடிய சட்டமியற்ற வேண்டியிருந்தால், அதனால்பாதிக்கப்படும் ஜாதியினரில் ஐந்தில் நாலு பங்கு சாதகமாயிருந்தாலல்லது அத்தகைய சட்டமியற்றக்கூடாது என்றும் சாச்வதமாக சட்ட மூலம் பாதுகாப்பளிக்க வேண்டும்.

இந்த தீர்மானத்தைப் பிரேரித்து ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி ஐயர் பேசியதாவது:—சிறு பான்மையோருடைய உயர் நாகரீகத்தைப் பாதுகாக்கவே இவ்விதப்பாதுகாப்பு நம்மால் கோரப்படுகிறது. ஒவ்வொருவருடைய மதஸ்வதந்தரமும் விலைபெறு மாணிக்கம் எனலாம். அந்த ஸ்வதந்திரத்தில் தலையிடுவதற்கு ஒருவருக்கும் அதிகாரமிருக்கக்கூடாது. சாரதா சட்டம் நம்மதத்தவருடைய சொந்த ஸ்வதந்தரங்களில் தலையிடுகிறது. அதை நாம் ஸகிக்க முடியாது. மத விஷயங்களில் தலையிடுவதில்லையென்று விக்டோரியா மகாராணி வாக்களித்திருக்க பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு இதற்கு இடம் கொடுத்தது ஸரியில்லை. காலஞ்சென்ற மகாராணியார், ஒருவரையும் அவருடைய மதக் கொள்கைக்காகத் தண்டிப்பதில்லையென்று தம் சார்பாகவும் தம் ஸந்ததியார் சார்பாகவும் வாக்களித்தார் அவ்வாக்குறுதியை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் இந்தியப் பிரதிநிதிகள் மீறி ராஜ விசுவாசந்தவறி நடந்திருக்கிறார்கள். சாரதா சட்டமானது மதத்தை நம்பி மனச்சாட்சிப் பிரகாரம் நடப்பவர்களைத் தண்டிப்பதாக இருக்கிறது. பெண்ணை ருதுவாவதற்கு முன்னால் விவாகம் செய்துவைப்பதனால் சமூகத்தில் யாருக்குக் கஷ்டமோ நஷ்டமோ விளைவித்துவிடாது. அப்படி விவாகம் செய்தால் எதற்காக நம்மைத் தண்டிக்கவேண்டும். ஸதிக மந சட்டம் விதவா விவாகச் சட்டம் ஆகியவை ஒருவரையும் கட்டாயப்படுத்தவில்லை. ஆகையினால் நாம் அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் சாரதாசட்டம் விதியாவிருப்பதுடன் தண்டிக்கவும் முற்பட்டுவிட்டது.

லோகத்தில் விவாக ஸம்பந்தமாக ஓரிடத்திலும் திருப்திகரமான முறை யனுஷ்டானத்திலில்லை. விவாக விஷயமே இன்னும் பூர்த்தியாக நிர்ணயிக்கப்பட்ட பாடில்லை. ஹிந்துக்களால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் விவாகத்தில் தான் பெரும் பாலோர் சந்தோஷமாக வாழ முடிகிறது. இவ்விதமிருக்கையில் மேல்நாட்டுக் கன்கையாகிய மேயோ கூறியதை எதற்காக வேதவாக்காக நாம் கொள்ளவேண்டும்? நம் விவாகத்தில் என்ன அதிருப்தியிருந்தாலும், மேயோவைப்போன்ற ஒரு ஆபாஸஸ ஸ்திரீ நம் ஸமூஹத்தில் ஏற்பட இடமில்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்ளுவேன். ருதுவாவதற்குமுன் விவாகம் செய்யும் நாம், ருதுவானபிறகு விவாகம் செய்துகொள்வோரைத் தண்டிக்கிறோமா? ருதுகாலத்திற்கப்பால் தான் விவாகம் செய்யவேண்டும் என்று பிரசாரம் செய்வதைத் தடுக்கிறோமா? அப்படிக்கிருக்க அவர்கள் இஷ்டப்படி நடக்காததற்காக அவர்கள் நம்மை தண்டிக்க முற்படுவது மிகவும் கொடுமை. இத்தகைய கொடுமைக்கு இட

மில்லாதவாறு அரசியலமைப்புச் சட்டத்தில் விதிகள் சாச்வதமாக ஏற்படுத்தவேண்டியது அவசியம்.

இப்பொழுது காங்கிரஸில் இத்தகைய விதியொன்றிருக்கிறது. என் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலவிதக் கஷ்டம் கொடுமைகளுக்கு முட்பட்டும், சோத்திற்குத் திண்டாட நேரினும், காங்கிரஸ் மூலம் தேசசேவை செய்வதையே பெருமையாகக் கொண்டு வேலை செய்துவருவதைப் பெருமையாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸில் தைரியமாகப் போராடி, நம் கட்சியின் நலத்தை எடுத்துக்கூறி நம் கொள்கையை அதில் ஸ்தாபிப்பது மேலே யொழிய, காங்கிரஸை விட்டகலுவது சரியில்லை. காங்கிரஸிலிருப்பவர்கள் நம் கட்சியின் நியாயத்தை உணருமாறு நாம் செய்யவேண்டும். பிரதிநிதியாட்சி பூர்த்தியான ஆட்சியில்லை யாகையால் எந்த சமூகத்தைப் பாதிக்கும் சட்டமும், அச் சமூகத்தாரின் வோட்டு பலம் பெற்றிருக்கவேண்டுமென்று நாம் கோருகிறோம்.

சாரதா சட்ட விஷயமாக நாம் முன் ஜாக்ரதையாக வில்லாமலிருந்துவிட்டோம். தகுந்த கிளர்ச்சி செய்து அதை ரத்துசெய்ய வேண்டும். சட்டத்தை மீறி ஜெயிலுக்குச் செல்வதா அல்லது ருதுவான பிறகு விவாகம் செய்து நரகத்திற்குச் செல்லுவதா என்பதையே யோசிக்க வேண்டும். ராஜப்பிரதிநிதியிடம் நம் ஆட்சேபங்களை எடுத்துக்கூறி அச் சட்டத்தில் நம் மதஸ்தர்களை விலக்கு செய்யுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். சாரதா சட்டம் சாட்சிச் சட்டத்தையே மீறி யிருப்பதையும் ஞாபகப்படுத்தவேண்டும்.

வேறு பலர் ஆதரித்துப் பேசியதும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

ஸம்மத வயதுச் சட்டம் கூடாது.

வங்காளத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் நரேந்திரனுத் பின் வரும் தீர்மானத்தைப் பிரேரேபித்தார்.

டாக்டர் கவுரின் ஸம்மதவயது மசோதா விவாக ஸம்பந்தத்தை பாதிக்கிறபடியால், அதை இம்மகாநாடு அழுத்தமாகக் கண்டிக்கிறது. அம் மசோதா நிறைவேறினால் ஜனங்கள் கெட்ட கார்யத்தில் துணிந்து குடும்ப வாழ்க்கையின் ஸாமரஸ்யத்தைக் கெடுத்துவிட இடம் ஏற்படுமாகையால், அச்சட்டம் அனுவச்யம் என்றும், ஒருவரும் விரும்பவில்லை யென்றும் அபிப்பிராயப்படுகிறோம். ஸம்மத வயது விசாரணைக் கமிட்டி மெம்பர்கள் ஏற்கனவே அம்சோதாவை ஆதரிப்பதாகக் கங்கணம் கட்டிக் கொண்டவர்கு

ளாகையால் அக்கமிட்டியின் யாதாஸ்திற்கு மதிப்பில்லை. தவிரவும் அம்மெம்பர்கள் எதைப்பற்றி விசாரித்தறியப் பொதுப் பணச்செலவில் நியமிக்கப் பட்டனரோ அவ்வேலையைச் செய்யாமல் தங்கள் சமுகச் சீர்திருத்த அபிப்பிராயங்களைப் பிரசாரம் செய்திருப்பதை இம்மகாநாடு எடுத்துக் காட்டுகிறது. அக்கமிட்டி ரிபோர்ட்டு ஒருதலைப் பக்ஷமானதாயிருக்கிறது. தங்கள் ஜோலியில்லாத விஷயமாகிய பால்ய விவாக மசோதாவைச் சட்டமாக்க அக்கமிட்டி சொல்லியுள்ள யோஜனைகள் கவர்ன்மெண்டையும் சட்டசபையையும் ஏமாற்றி யிருக்கிறது என்பது இம்மகாநாட்டின் அபிப்பிராயம்.

இதைப் பற்றி அவர் பேசியதில் இக்கமிட்டி ரிபோர்ட்டில் ஸ்ரீமான் ஆதிசேஷய்யாவின் ஸாக்ஷ்யம் கல்பனை செய்யப்பட்ட தகவல்களடங்கியிருக்கிறபடியால் அது விவரமாகப் பிரசுரிக்கப் பட்டிருப்பதாகவும், உண்மையான புள்ளி விவரங்களை எடுத்துக் கூறியுள்ள ஸ்ரீமான் சாருசந்திர மித்ராவின் சாட்சியம் பிரசுரிக்கப்படாமல் ஒளிக்கப்பட்டிருக்கிற தென்றும், சாரு பாபுவின் சாட்சியத்திலிருந்து பால்ய விவாகத்தில் தீமையில்லை யென்பது விளங்குமென்றும், 10 வயதுக்கு முன் விவாகமான பெண்கள் ஒன்றுகூடிச் ஸம்போக மேற்பட்டுக் கர்ப்பந்தரிக்காம லிருந்திருக்கையில், 10 வயதுக்குட் பட்ட பெண்கள் கர்ப்பமாயிருப்பதாகக் கமிட்டி கூறுவது அபத்தமென்றும், பால்ய மரணம் அதிகமாயுள்ள சமூகத்தில் தான் பால்ய விதவைகள் ஜாஸ்தி யென்றும், இத்தொகை 100-க்கு 10-க்கு மேலில்லை யென்றும், மேல் நாடுகளில் பால்ய விதவைகள் 100-க்கு 16 வீத மிருப்பதாகவும், சாருபாபு கூறியிருப்பதாக இவர்சொல்லிக் கர்ப்பந்தரித்தவர்கள் பிரஸவ வேதனைப்படுவது எல்லா ஸ்திரீகளுக்கும் ஸகஜமென்றும், பால்ய வயதில் கர்ப்பந்தரித்தால் மாத்திரம் பிரஸவ வேதனை ஏற்படுவதாகக் கூறுவது சரியில்லை யென்றும் சொன்னார்.

இத்தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறி மகா நாடு ஸந்த்யாகால அனுஷ்டானத்திற்காகக் கலைந்தது.

மூன்றாம் தினமாகிய 2-ந் தேதி காலை ஒற்றைவாடை தியேட்டரில் தலைவர் பண்டித சியாமசுந்தர சக்ரவர்த்தியின் தலைமையின் கீழ் மறுபடியும் ஸபை கூடிற்று.

ஜகத்குரு பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அனந்தாசார்ய ஸ்வாமி அனுப்பியிருந்த ஸ்ரீ முகத்தை அந்த ஸ்வாமியின் ஏஜண்டான ஸ்ரீமான் சக்ரவர்த்தி சபையில் படித்தார். ராஜப்பிரதிநிதி, இந்தியா மந்திரி முதலியோரைத் தூது காண ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், ஸநாதந தர்மிகள் இனி

வரும் பொதுத் தேர்தல்களில் ஹிந்து தர்மத்தை ரக்ஷிப்பதாக உறுதி கூறு வோர்களுக்கே ஓட் செய்யுமாறு தீர்மானிக்கவேண்டு மென்றும், இவ் வழிகளில் தங்கள் லக்ஷயம் நிறைவேருவிடின் சட்டத்தை எல்லோரும் மீறி நடக்கவேண்டுமென்றும் அந்த ஸ்வாமி தமது ஸ்ரீமுகத்தில் அறிவித்திருந்தார். மற்ற மடங்களிலிருந்து வந்த ஸ்ரீமுகங்களும் படிக்கப்பட்டன.

சென்னையில் நடைபெற்ற ஸ்திரீகள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட விவாஹ ரத்து சட்டப் பிரேரேபணையை இம் மகாநாடு பலமாகக்கண்டிப்பதாகவும், இதனல் சாஸ்திரங்களால் ஸ்திரீகளுக் கேற்பட்டிருக்கும் உந்நத லக்ஷயங்கள் அடியுடன் அழிந்துபோகக் கூடுமென்று அபிப்பிராயப்படுவதாகவும் பங்களூர் நாகரத்தினம்மாள் ஒரு பிரேரேபணை கொண்டு வந்தார்.

இப்போது ஹிந்து ஸ்திரிகளுக்குப் பலவிதமாக வேற்பட விருக்கும் அனர்த்தங்களை அவர்கள் நன்குணர்ந்து அவர்களுடைய புராதன லக்ஷயங்களை நிலைநிறுத்த வெளிவந்து போராட வேண்டுமென்று நாகரத்தினம்மாள் கேட்டுக்கொண்டார். இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று.

விவாஹ வயது சட்டத்தை ரத்து செய்யவும் அல்லது ருதுவாகுமுன் விவாகஞ் செய்யவேண்டுமென்ற ஸநாதந தர்மக் கொள்கைகளை யனுஸரிக்கும் வகுப்பினரையாவது இச்சட்டத்தினின்று விலக்கவும் முயற்சிக்க வேண்டுமென்றும் ராஜப்பிரதிநிதியிடம் வற்புறுத்த அவருக்கு ஒரு தூது அநுப்புவதாக ஸ்ரீமான் என். சுப்ரமணிய அய்யர் ஒரு பிரேரேபணை கொண்டுவந்தார். ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தியும், கே. சூரியநாராயணராவும் இதை ஆதரித்துப் பேசியபின் இத்தீர்மானம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

ஸர்வகக்ஷி மஹாநாட்டில் பிரதிநிதித்துவம்.

ராஜா பகதூர் ஜி. கிருஷ்ணமாச்சாரியார் பின்வரும் தீர்மானத்தைப் பிரேரித்தார்.

ஹிந்து வகுப்பினரில் மிகப் பெரும்பாலோர் தங்கள் மதத்தில் நம்பிக்கைக்கொண்டு தங்கள் வாழ்க்கையைப் புராதன ஆசாரவிதிகளுக்கொத்து நடத்தவேண்டுவது அவசியமெனக் கருதுவதனல் ஹிந்து வகுப்பினர் தர்மத்திலோ லக்ஷயங்களிலோ விச்வாஸமோ அல்லது அநுதாபமோ இல்லாத அரசியல் வாதிகளால் ஹிந்து தர்மம் ரக்ஷிக்கப்படுவதில்லை. ஆகவே இனி நடைபெற விருக்கும் ஸர்வகக்ஷி மகாநாட்டில் வைதிக ஹிந்துக்களுக்குப் போதிய பிரதிநிதித்வமிருக்குமாறு கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

ஸ்ரீமான் கிருஷ்ணமாச்சாரியார் பேசுகையில், சீர்திருத்தச் சட்டம் அமுலுக்கு வரும் வரையில், கவர்ன்மெண்டார் மதவிஷயங்களில் தலையிடுவதில்லை யென்றிருந்ததென்றும், ஆனால் சட்ட சபையினர் இப்பொழுது மத ஸமூக விஷயங்களில் தலையிட ஆரம்பித்துவிட்டனரென்றும், இப்பொழுதுள்ள சட்டசபை விவாஹத் தடைச் சட்டம்போன்ற மிக ஆக்ஷேபகரமான சட்டத்தைச் செய்யச் சிறிதும் அதிகாரமில்லையென்றும் கூறினார். தீர்மானம் நிறைவேறியது.

மதத்திற்கு விரோதமாகச் செய்யப்படும் ப்ரயத்நங்கள் பலமாகவிருக்கிறபடியால் அதை எதிர்த்து ப்ரசாரஞ் செய்ய ஒரு மத்யஸபை அவச்யமாகிறது. இதற்காக இம்மகாநாட்டிலேற்படுத்தப்படும் அகில இந்தியக் கமிட்டியுடன் சென்னை ராஜதானி வர்ணாச்ரம தர்ம ஸபையைச் சேர்க்கிறது.

காங்கிரஸும் விவாகச் சட்டமும்.

ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் பிறகு பின்வரும் தீர்மானத்தைப் பிரேரேபித்தார்.

இந்திய காங்கிரஸ் மஹாஸபை பலமதத்தின ரடங்கியதாக அரசியல் விஷயங்களையே கவனிக்க ஏற்பட்ட ஸபையானபடியால், காங்கிரஸோ அதன் காரியக்கமிட்டியோ ஒரு வகுப்பின் மத விஷயங்களையோ அல்லது மத ஸமூக விஷயங்களையோ பாதிக்குமாறு தீர்மானஞ் செய்ய அவற்றிற்குச் சிறிதும் அதிகாரம் கிடையாது. காங்கிரஸ் காரியக்கமிட்டி தனது டில்லிக் கூட்டத்தில் சாரதா சட்டத்தை ஆதரிப்பதாகத் தீர்மானம் செய்ததை இம்மகாநாடு பலமாஹக் கண்டிக்கிறது. நேருயாதாஸ்தில் மத ஸமூக விஷயங்களில் சட்டஞ் செய்வது ஸம்பந்தமாகவுள்ள பாகத்தையும் வயதானவர் ஓட்டுரிமையைப் பற்றிய பாகத்தையும் இக்கூட்டம் பலமாக ஆக்ஷேபிக்கிறது. ஆகவே லாகூர் காங்கிரஸ் எல்லா ஸமூகத்தினருடைய மத ஸமூக நாகரீக விஷயங்களில் தலையிடுவதில்லையென்றும் அவற்றிற்கு அதில் ஸ்வதந்திரமளிப்பதாகவும் அறிவித்துவிட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது. ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் இதைப் பிரேரித்துப் பேசுகையில் இந்தியாவின் புராதன நாகரீகத்தைக் காங்கிரஸ் ஆதரிக்காமற் போனது வருந்தத் தக்கதென்றும், ஹிந்துக்களும் முஸ்லீம்களும் தங்கள் மதக்கோட்பாடுகளைப்பற்றி மிகுந்த அக்கரை கொண்டிருக்கின்றனரென்றும், காங்கிரஸ் இந்திய சுதேச விஷயங்களை மதிக்க வேண்டுமென்பதைத் தற்காலக் காங்கிரஸ் தலைவர்கள் உணராமற்போனது வருந்தத்தக்கதென்றும், காங்கிரஸ் தனது பிசகை இப்பொழுது திருத்திக்கொள்ள வேண்டுமென்றே இத்தீர்மானம் மூலம் எச்சரிக்கை செய்வதாகவும் கூறினார்.

பண்டித கனலா ராமமூர்த்தி தீர்மானத்தை ஆமோதித்தார். பிரேரேபணை நிறைவேறிற்று: ஸநாதந தர்ம முறையில் சிறுவர்களையும் பள்ளிக்கூட மாணுக்கர்களையும் பயிலுவிக்க ஒவ்வொரு இடத்திலும் ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டுமென்று, ஸ்ரீமான் தேசிகதாதாசாரியார் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது.

பிறகு ராஜா பகதூர் ஜி. க்ருஷ்ணமாச்சார்யார் தலைமையில் ஒரு அகில பாரதவர்ஷ வர்ணாச்ரம தர்ம நிர்வாஹ கமிட்டி நியமிக்கப்பட்டது.

யுக்தாயுக்தமில்லாத ஆலயப் பிரவேசம் பகவத் ஸாந்நித்யத்தை நாசம்செய்து விடுமாகையால் அதை எதிர்க்கவேண்டுமென்று ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமாச்சாரியார் பிரேரித்தார். தீண்டாமையை விலக்கக் காங்கிரஸ் செய்துவரும் பிரசாரத்தை இம் மகாநாடு ஒப்புக்கொள்ள வில்லையென்று தீர்மானத்தில் சேர்க்கும்படி ஸ்ரீமான் என். ஸ்ரீனிவாஸாசாரியார் பிரேரித்தார். காங்கிரஸ் என்ற பெயரைத் திருத்தத்திலிருந்து எடுத்த பின் திருத்த முள்படத் தீர்மானம் நிறைவேறியது. ஸநாதந தர்ம ப்ரசார ஸம்ரக்ஷணத்திற்காகப் பத்திரிகைகள் வெளியிடப் பிரதி மாகாணத்திலும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஸ்ரீமான் குருஸ்வாமி ஐயர் கொண்டுவந்த தீர்மானமும் நிறைவேறியது. அகில இந்திய ஸநாதந தர்மக் கமிட்டி ஒன்று அமைக்கவும், மாகாணத்திற்கு 10பேர்விகிதம் மத்தியக்கமிட்டியில் ஸ்தானம் வகிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. சாரதா சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முனிஸிபாலிட்டிகள் ஒன்றும் உதவி செய்யக்கூடாதென்றும் அம்மாதிரி செய்தால் ஜனங்கள் வரி செலுத்தக் கூடாதென்றும், ஸநாதந தர்ம சபைகள் பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்றும், ஆடம்பரமில்லாமல் வரதட்சிணை வாங்காமல் விவாஹங்களை இனி நடத்தவேண்டுமென்றும், ஸநாதந தர்ம ரக்ஷண விஷயமாக மடாதிபதிகளிடம் தூது சென்று வேண்டுவன செய்வதென்றும் சாரதா சட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யப் பிரசாரகர்கள் தயாரிப்பதென்றும், தீர்மானங்கள் நிறைவேறிய பின், அக்கிராசனர் முடிவுரையில், தீர்மானங்களை நிறைவேற்ற அவசியமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும், இனி ஸநாதந தர்மம் தக்கபடிப் பாதுகாக்கப்படு மென்று தாம் நம்புவதாகவும், சொன்னார். ராஜா பகதூர் கிருஷ்ணமாசாரியர் க்ருதஜ்ஞதாவிஷ்கரணம் செய்த பின் ஸபை கலைந்தது.

ஸ்ரீ:

புஸ்தக விமர்சம்.

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை.

இப்பெயர் பூண்ட புஸ்தகமொன்றை அடையாறு புஸ்தகசாலையிலிருந்து நாம் இப்பொழுது வரப்பெற்றோம். இது அந்தப் புத்தகசாலையில் பூர்வம் அத்யக்ஷ பதவியை வஹித்து வந்த ஆட்டோ ஷ்ராடர் என்னும் ஜர்மனி தேசத்திய வித்வானுடைய பரிச்ரமத்தால் சற்றேறக்குறைய பன்னிரண்டு வர்ஷங்களுக்கு முன் வெளிவந்த க்ரந்தம். அக்காலத்தில் அப்புஸ்தக சாலையின் முக்ய பண்டிதராயிருந்த ஸ்ரீ. உப. தேவசிகாமணி ராமாநுஜாசார்ய ஸ்வாமி என்னும் வித்வாந் இதைப் பரிசோதித்திருக்கிறார். பெரிய நாகர லிபியில் உத்தமமான காகிதத்தில் எவ்வித அசுத்தமுமின்றிக்கே, பாஷாந்தரத்தில் பெரிய க்ரந்தங்கள் அச்சுப் பதிப்பிக்கப்படும் மாதிரி, இது பதிப்பிக்கப்பட்டிருப்பதைப் பார்க்க நாம் மிகவும் ஆநந்திக்கிறோம்.

இந்த க்ரந்தம், பூர்வார்த்தம் உத்தரார்த்தம் என்று இரண்டு பாகங்கள் அடங்கி உள்ளது. ஒவ்வொரு பாகத்திலும் முப்பது அத்யாயங்கள் இருக்கின்றன. இதில் தத்வ விசாரமும் மந்த்ர சாஸ்த்ரமும் யோகமும் பஹுளமாகவும், ஸம்ஸ்காரங்களும் ஆஹ்நிகமும், வர்ணாச்ரம தர்மங்களும் மந்திர நிர்மாணமும் ப்ரதிஷ்டா விதிகளும் கொஞ்சம் ஸங்க்ரஹமாகவும் விவரிக்கப்படுகின்றன. க்ரந்தம் ஆரம்பிக்கையில் பரத்வாஜர் துர்வாஸஸ்ஸைப் பார்த்து, “அநேக விடங்களில் ஸுதர்சநத்தின் மஹிமை பஹுவாகக் கூறப்பட்டிருப்பதை நான் கேட்டிருக்கிறேன். அவ்வளவு மஹிமை அதற்கு வாய்ந்தது என்? அந்தச் சப்தத்தின் அர்த்தம் யாது? விஷ்ணுவுக்கும் அதற்கும் என்ன ஸம்பந்தம்? அதைப்பற்றிய ப்ரபாவம் முழுவதையும் எனக்கு உபதேசிக்கவேணும்” என்று கேட்க, துர்வாஸஸ், பூர்வம் நாரத மஹர்ஷிக்கும் அஹிர்புத்ந்யருக்கும் இதைப்பற்றி நடந்த ஸம்வாதத்தை ஸங்க்ரஹமாக உபதேசிக்கிறார். ஆகையால், இந்த க்ரந்தத்தில் ஸுதர்சநத்தின் மஹிமையே ப்ராயேண வர்ணிக்கப்படுகின்றது என்று நாம் அறியவேண்டும். ஆனால், அந்த ஸுதர்சநத்தைப் பகவானுடைய க்ரியா சக்தி ரூபமாகவே சொல்லுகிறபடியால், லோகத்தின் ஸ்ருஷ்டி முதலானவைகளைப் பற்றியும் கர்ம பந்தத்தைப் பற்றியும் அதிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உபாயத்தைப் பற்றியும் விஸ்தாரமாகப் பேசுவதற்கு அவகாசம் ஸம்பவிக்கின்றது ப்ரஸக்தாநுப்ரஸக்தமாகப் பலவித ரக்ஷைகள் யந்த்ரங்கள் அஸ்த்ரங்கள் இவைகளின் ஸ்வரூபங்களும் விதாநங்களும் நன்கு விசாரிக்கப்படுகின்றன. முடிவில் மந்த்ர விசாரத்தைச் செய்யுமிடத்தில், தாரக மந்த்ரத்தின் ஸ்வரூபம் முதலியவையும், ‘நமஸ்’ என்னும் சப்தத்தின் அர்த்தமும், நாரஸிம்ஹ மந்தரத்தின் மஹிமையும், புருஷஸூக்தத்தின் அர்த்தமும் இவை முதலிய பல பெரிய விஷயங்கள் வெளியிடப்படுகின்றன. நடுவில் எழு எட்டு

அத்யாயங்களால், சிற்சில மந்த்ரங்கள் யந்த்ரங்கள் இவைகளின் சக்தியைக் காண்பிக்கக் கூடிய ஒன்பது புராவ்ருத்தங்கள் விஸ்தாரமாகச் சொல்லப்படுகின்றன. நமது ஆசார்யர்களால் 'ரஹஸ்யங்கள்' என்று நமக்கு உபதேசிக்கப்படும் மந்த்ரார்த்தங்களுக் கெல்லாம் இந்த ஸம்ஹிதையில் பூர்ணமாக ஆதாரம் காணப்படுகின்றது.

இந்த க்ரந்தத்தின் பூர்வ பாகம் முழுவதும் 290 பக்கங்கள் அடங்கிய ஒரு ஸம்புடமாகவும், உத்தர பாகம் 370 பக்கங்கள் உள்ள மற்றொரு ஸம்புடமாகவும், ஆக இரண்டு ஸம்புடங்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்த க்ரந்தத்தைப் பரி சோதித்த ஸ்ரீ. ராமாநுஜாசார்ய ஸ்வாமியால் ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதப்பட்டுள்ள ஒரு உபோத்காதமும், ஸ்ரீ. உ.வே. கவிபூஷணம் அத்தங்கி குமார தாதாசார்ய ஸ்வாமி யால் எழுதப்பட்டுள்ள மற்றொரு உபோத்காதமும் முதல் ஸம்புடத்தில் ப்ரசுரிக்கப்பட் டிருக்கின்றன. இவை இரண்டும் நீங்கலாக, ஆட்டோ ஷ்ராடர் இங்க்லீஷ் பாஷையில், பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளுக்கெல்லாம் ஸாதாரணமாகவும், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதைக்கு விசேஷமாகவும், 170 பக்கங்கள் அடங்கியுள்ள பெரியதொரு உபோத்காதம் எழுதி, அதைத் தனி ஸம்புடமாக வெளியிட்டிருக்கிறார். ஸம்ஹிதை அடங்கியுள்ள முதல் இரண்டு ஸம்புடங்களும் பூர்வம் ரூ. 15—0—0-க்கு விற்கப்பட்டு வந்தன; இப்பொ ழுது அவைகளின் விலை ரூ. 10—0—0 என்றும், இங்க்லீஷ் உபோத்காதத்தின் விலை ரூ. 3—0—0 என்றும் அந்தப் புஸ்தக சாலையின் அதிகாரிகள் விளம்பரம் செய்திருக் கிறார்கள். அந்தப் புஸ்தகங்களுக்கு அந்த விலையும் தகும்; அதற்கு மேல் பட்டும் தகும் என்பது நமது அபிப்ராயம்.

ஸ்ரீ வைஷ்ணவர்களாக இருக்கும் நமக்குப் பாஞ்சராத்ர க்ரந்தங்கள் மிகவும் முக்யமானவை. நமது ஸித்தாந்தம், அவைகளையே முக்ய ஆதாரமாகக் கொண்டு நிற் கின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். நமது ஆசார்யர்களுடைய க்ருதி களில் அவை பஹுவாக உதாஹரிக்கப்படுகின்றன. ஸ்ரீ யாமுநாசார்யருடைய 'ஆகம ப்ராமாண்யம்' என்னும் க்ரந்தத்தில், ஈச்வர பரம சாண்டில்ய ஸநத்குமார இந்த்ராத்ர பத்மோத்பவ ஸம்ஹிதைகளாகிற ஆறு ஸம்ஹிதைகளிலிருந்தும் ப்ரமாண வாக்யங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ பாஷ்யகாரர், பரம ஸம்ஹிதையிலிருந்து வாக்யங்கள் எடுத்திருப்பதுடன், பௌஷ்கர ஸாத்வத ஸம்ஹிதைகளிலிருந்தும் வாக்யங்களை உதா ஹரித்திருக்கிறார். ஸ்வாமி தேசிகனும், தமது பாஞ்சராத்ர ரக்ஷையில் அநேக ஸம் ஹிதைகளைப் பற்றி ப்ரஸ்தாவித்திருக்கிறார். இப்படி முக்ய ஆசார்யர்களெல்லாரும் இந்த ஸம்ஹிதைகளை ஆப்த ப்ரமாணங்களாகக் கொண்டாடி இருப்பதாலேயே அவை ஸ்ரீ வைஷ்ணவர்களுக் கெல்லாம் மிகவும் உபாதேயங்கள் என்பது நன்கு வெளிப்படும். அவைகளுக்கு ஏற்படும் ஏற்றம் முழுவதும், அவ்வை, ஸ்ம்ருதி இதிஹாஸங்கள் போலன்றிக்கே, ஸாக்ஷாத் பகவானால் அத்வாரகமாக வெளியிடப்பட்டவை என்பதனாலேயே. தவிரவும், "வம்அாாத்ரூவலபம்,தஞூம் ஸொமைக்ஷகவமுமுக்ஷ்ணழ" என்கிறபடி அவை பரம புருஷார்த்தமான மோக்ஷத் தையே ப்ரதிபாதிக்கின்றன. இவ்வளவு பெருமை வாய்ந்துள்ள இந்த க்ரந்தங்களுள் முக்யமான அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையை முத்ரணம் செய்த இந்த வித்வான் ஷ்ராடர் விஷயத்தில் நாம் எல்லாரும் மிக்க க்ருதஜ்ஞதை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இந்த க்ரந்தத்துக்கு, ஷ்ராடரால் எழுதப்பட்டுள்ள உபோத்காதத்தை அநர்க்கமான ஒரு அங்கமென்றே நாம் சொல்லத் துணிவோம். அதன் பெருமை அளவற்றதாகவே இருக்கிறது. இப்பொழுது ப்ரசாரத்திலிருக்கும் பாஞ்சராத்ர க்ரந்தங்கள் எல்லாவற்றையும் ஸமக்ரமாகப் படித்து அவைகளின் ஸாரபூதமான அம்சத்தை அந்த உபோத்காதத்தில் அவர் வெளியிட்டிருக்கிறார். அதி துரூஹமான தத்வ விஷயங்களும் எளிதாக ஒன்று சேர்க்கப்பட்டு, குண தோஷ விசார பூர்வகமாக அதில் விசாரிக்கப்பட்டிருக்கின்றன. பாஞ்சராத்ரங்களைப் பற்றி நமது ஆசார்யர்களால் அநுக்ரஹிக்கப் பட்டுள்ள க்ரந்தங்களில் காணப்படும் ஸூக்ஷ்ம விஷயங்களும் இந்த விசாரத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டு, அவைகளின் ஸ்வாரஸ்யமும் பஹுவாகக் கொண்டாடப்பட்டிருக்கின்றன. இவை மாத்ர மின்றிக்கே, பாஞ்சராத்ர க்ரந்தங்களுக்குள் பரஸ்பரம் இருக்கும் வாசியும், அவைகளுள் எவை எந்த அம்சத்தில் பூர்ணங்களாக இருக்கின்றன வென்பதும், எந்த எந்த விஷயங்கள் எவை எவைகளில் எந்த எந்த ப்ரகாரம் உபபாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதும் நன்கு இவ்விடத்தில் கூறப்பட்டுள்ளன. எவ்வித தோஷ த்ருஷ்டியுமின்றிக்கே மிகுந்த ச்ரத்தையுடனும் உத்ஸாஹத்துடனும் நிஷ்பக்ஷபாதமாக இவர் இம்மாதிரி விஷய விசாரம் செய்திருப்பதெல்லாம், தத்வ புபுத்ஸுக்களாக இருக்கு மெல்லாருக்கும் அதிமாத்ரம் உபகாரகமாக இருக்கும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஸம்ஸ்க்ருதம் நடையாடாமல் இருக்கும் தேசத்தில் பிறந்து, குரு முகமாக விஷயங்களை அறிந்து கொள்ள எவ்வித ஸௌகர்யங்களையும் பெறாமலே, இந்த விதேசி, நமது ஸித்தாந்த விஷயங்களைச் சரிவரத் தெரிந்து கொண்டு அவைகளில் குண க்ரஹணம் செய்கிறாரென்றால், அது அளவற்ற வியப்புக்குக் காரணமாக மாட்டாதோ?

இந்த உபோத்காதத்திலிருந்து நாம் சில புதிய விஷயங்களையும் அறிகின்றோம். இதுவரையில் நாம், பாஞ்சராத்ர ஸம்ஹிதைக ளென்று நூற்றெட்டு க்ரந்தங்களே இருந்தன வென்றும், அவைகளுள் சில ஸம்ஹிதைகளைத் தவிர்த்து மற்றவையெல்லாம் இப்பொழுது லுப்தங்களாகி விட்டன வென்றும் எண்ணி இருந்தோம். இவர் எழுதி யிருப்பதிலிருந்து, இருநூறுக்கு மேற்பட்ட ஸம்ஹிதைகள் ஒரு காலத்தில் இருந்திருப்பதாக ஏற்படுகின்றது. அந்த ஸம்ஹிதைகளின் பெயர் இன்னவென்றும், எந்த எந்த க்ரந்தங்களில் அவை ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றன வென்றும், இவர் ப்ரமாண புரஸ்ஸரமாக எழுதி இருக்கிறபடியால், அவர் சொல்வதன் உண்மையைப் பற்றி நாம் ஸந்தேஹிக்கக் காரணமில்லை. ஆனால் அவைகளுள் சில ப்ரக்ஷிப்தங்களாக இருக்கலாமென்றும் அவர் சொல்வதிலிருந்து ஏற்படும். தவிரவும், லுப்தங்களாகிவிட்டனவென்று நாம் எண்ணியிருந்த சில ஸம்ஹிதைகள், இவர் சொல்வதிலிருந்து, இப்பொழுது ப்ரசாரத்தில் இருப்பனவாக நாம் அறிகிறோம். அடையாறு புஸ்தகசாலையில் இருபத்திரண்டு ஸம்ஹிதைகள் சேகரிக்கப் பட்டிருக்கின்றனவாம். இவை யெல்லாவற்றையும் பார்த்து இந்த உபோத்காதம் எழுதப்பட்டிருக்கிறபடியால் அநேக நூதந அம்சங்கள் இதிலிருந்து வெளி வருகின்றன.

தவிரவும் இந்த உபோத்காதத்துக்கு அகாதியாக ஆறு விஷய ஸூசிகைகளையும் எழுதி, அவை க்ரந்தத்தில் எவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்படுகின்றன வென்பதையும், அந்தந்தப் பக்கங்களைக் குறிப்பிட்டு ஸூசிப்பித்திருக்கிறார். இது இக்காலத்திய

அத்யேதாக்களுக்கு மிகவும் ப்ரயோஜநவத்தாக இருக்குமாதலால், இதுவும் அதன் ஏற்றத்திக்கு ஒரு காரணமாகின்றது. விஷய வைலக்ஷண்யத்தை அறியக்கூடிய சக்த ரஸிகர்களெல்லாரும் இந்த க்ரந்தத்தை வாங்குவார்களென்று நாம் நம்புகிறோம்.

2. ஸ்ரீஸ்துதி.

ஸ்வாமி ஸ்ரீதேசிகன் அநுக்ரஹித்துள்ள ஸ்ரீஸ்துதி, ஸ்ரீ. உப. அன்பில் வெங்கடகோபாலாசார்யரால் எழுதப்பட்டிருக்கும் அந்யாத்ருசமான ஒரு வ்யாக்யாநத்துடன் வெளி வந்திருப்பதை நாம் கண்ணுற்றோம். இதற்கு முன் வெளி வந்திருக்கும் ஸ்தோத்ராந்தர வ்யாக்யாநங்களைப் போலவே, இதுவும் மிக ரஸவத்தாக இருக்கின்றது. ஏற்கெனவே ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளுக்குப் பல வித்வான்கள் பல வ்யாக்யாநங்கள் செய்திருக்கிறார்கள். அவைகளின் ரீதி வேறு, இந்த வ்யாக்யாநத்தின் ரீதி வேறு. நவம் நவமான அவதாரிகைகளும், ரஸிக மநோ ரஞ்ஜகங்களான பாவ விவரணங்களும், மற்றை எவருக்கும் ஸ்புரிக்காத க்ருத்யந்தர ஸம்வாதங்களும் இதற்கு ஒரு பெரிய ஏற்றத்தைக் கொடுக்கின்றன. ஒவ்வொரு ச்லோகத்திலும் இவை காணப்படுகிற படியால் எவ்வித விசாரமும் செய்யாமலே ஏதாவது ஒரு ச்லோகத்தை இதற்கு நிதர்சநமாக எடுத்துக் கொள்ளக்கூடும்.

> "𑌯𑌤𑍍𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌕𑌮𑌲𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌦𑍇𑌹𑌿𑌨𑍍𑌯𑌮𑍀𑌷𑌾𑌂
> 𑌜𑌨𑍍𑌮𑌸𑍍𑌥𑍇𑌮𑌵𑍍𑌯𑌯𑌰𑌚𑌨𑌾 𑌜𑌂𑌗𑌮𑌾𑌜𑌂𑌗𑌮𑌾𑌨𑌾𑌮𑍍 ।
> 𑌤𑌤𑍍𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌂 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌯𑌮𑌿𑌨𑌾𑌮𑍇𑌕𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌧𑍌
> 𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌤𑍇𑌜𑌃 𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑌿 𑌭𑌗𑌵𑌤𑍀𑌪𑌾𑌦𑌲𑌾𑌕𑍍𑌷𑌾𑌰𑌸𑌾𑌂𑌕𑌮𑍍 ॥"

என்னும் ச்லோக வ்யாக்யாநத்தைப் பார்ப்போம். "𑌸𑍇𑌵𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌾 𑌤𑌵 𑌚𑌰𑌣𑌯𑍋𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍇 𑌕𑌸𑍍𑌯 𑌨 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌤𑌿𑌵𑌿𑌷𑌯𑍇𑌽𑌪𑍀𑌦𑌂 𑌸𑌮𑍇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑌮𑌿𑌤𑍇 𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌤𑍇𑌜𑌃 𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑌿 𑌭𑌗𑌵𑌤𑍀𑌪𑌾𑌦𑌲𑌾𑌕𑍍𑌷𑌾𑌰𑌸𑌾𑌂𑌕𑌮𑌿𑌤𑌿" [கீழ் ச்லோகத்தில், 'உன் திருவடிகளில் கைங்கர்யம் செய்ய வேண்டும் என்னும் அபேக்ஷயானது யாருக்குத் தான் ச்ரேயஸ்ஸின் பொருட்டு ஆக மாட்டாது?' என்று சொன்னது உம்முடைய பதி விஷயத்திலும் அந்வயிக்கும் என்பதை, 'அகண்டமாயும் வாங்மனஸாநாஸ்பதமாயுமுள்ள அந்தப் பரம் ஜ்யோதிஸ்ஸும் உம்முடைய சரண அலக்தகத்தின் அடையாளத்தாலேயே ப்ரகாசிக்கின்றது' என்பதால் காண்பிக்கிறார்] என்னும் அவதாரிகை மிகவும் ரஸவத்தானது. பகவான் ஜகத் காரணமாயிருந்தும், 'விசேஷித்து இவன் தான் பகவான்' என்று அவன் அறியப்படுவது முழுவதும் அவன் லக்ஷ்மீபதியாக இருப்பதால் அன்றோ? அவனுக்கு ஸம்பவிக்கும் ஏற்றம் முழுவதும் லக்ஷ்மீயின் சரண ஸேவையாலன்றோ? என்பது ரஸம்.

அன்றிக்கே, "𑌯𑌤𑍍𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑌿𑌤𑌿 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌮𑍍; 𑌯𑌤𑍍𑌰 𑌦𑍇𑌹𑌿𑌨𑍀𑌤𑌿 𑌉𑌪𑌾𑌦𑌾𑌨𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌰𑌂𑌭𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌧𑌿𑌕𑌰𑌣𑌮𑍍, 𑌤𑌦𑌨𑍍𑌤𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌧𑌿𑌕𑌰𑌣𑌮𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌤𑍍𑌰 𑌸𑌂𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌚 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌯 𑌉𑌭𑌯𑌤𑍍𑌰 𑌭𑌗𑌵𑌤𑍀 𑌵𑌿𑌷𑌯 𑌇𑌤𑌿 𑌸𑍂𑌚𑍍𑌯𑌤𑍇" ['ஜங்கமாஜங்கமங்களுடைய ஸ்ருஷ்டி முதலியவை பகவானுடைய ஸங்கல்பத்தால்' என்று சொல்வதால் பகவானுக்கு

நிமித்த காரணத்வமும், 'அந்த ஸ்ருஷ்டி முதலியவை அவைகளைச் சரீரமாயுடைய சரீரியினிடத்தில்' என்று சொல்வதால் அவனுக்கு உபாதாந காரணத்வமும் ஏற்படுகின்றன. ஆகையால், ப்ரஹ்ம ஸூத்ரம் முதல் அத்யாயத்தில் ஆரம்பத்தில் ஜந்மாத்யதிகாரணத்தால் விவரிக்கப்பட்டுள்ள நிமித்த காரணத்வமும், அதன் முடிவில் ப்ரக்ருத்யதிகரணத்தால் விவரிக்கப்பட்டுள்ள உபாதாந காரணத்வமும் இரண்டும் இவ்விடத்திற் சொல்லப்பட்டவை ஆகின்றன. 'அப்படி இரண்டு வித காரணத் தன்மையுள்ள பகவான் லக்ஷ்மி பாத சிஹ்நத்தால் ப்ரகாசிக்கிறான்' என்றால், அந்த ப்ரஹ்ம ஸூத்ரம் முதல் அத்யாயத்திற்கு இந்தத் தம்பதிகளே விஷயம் என்று சொன்னதாகிறது. இதுவன்றோ ஸ்வாமியின் பாவம்?] என்று பாவ விவரணம் செய்திருப்பது மிகவும் ரஞ்ஜகம்.

அன்றியும் "அஶேஷாம் ஜங்கமாஜங்கமாநாம்" யத்ர ஸூத்ரே ஷஷ்டீ விபக்திஃ ச்ருதிஷு பஹுவசநம் ச । ததா ச ச்ருதிஸூத்ரோபாதாநஸார யத்வசஸ்யேவ । வேதாந்தாசார்யஃ ஸுகவிஃ" ['இந்த ஜங்கமாஜங்கமங்களுடைய ஸ்ருஷ்டி முதலியவை எவனிடத்தில் ஸம்பவிக்கின்றனவோ' என்னும் வாக்யத்தில், இந்த அர்த்தத்தை விளக்கும் 'ஜந்மாத்யஸ்ய யதஃ' என்னும் ஸூத்ரத்திலுள்ள ஆறும் வேற்றுமையும், இந்த அர்த்தத்தையே விளக்கும் 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே' என்னும் ச்ருதியிலுள்ள பன்மையும் ஆக இரண்டும் காணப்படுகின்றன. ஆகையால், ச்ருதி ஸூத்ரம் இரண்டும் இவ்விடத்தில் அநுஸரிக்கப்படுகின்றன என்பது குறிப்பு. இவ்விதம் கவநம் செய்வது வேதாந்த தேசிகனைத் தவிர்த்து யாரால் ஸாத்யம்?] என்னும் விஷயம் மிகவும் ஆச்சர்யகரமாகவே இருக்கிறது. ஸூத்ரத்தில் ஷஷ்டீ விபக்தி மாத்ரமே தவிர, பஹுவசநம் இல்லை; ச்ருதியில் பஹுவசநம் மாத்ரமே தவிர, ஷஷ்டீ விபக்தி இல்லை; அவை இரண்டும் இவ்விடத்தில் உள்ளன என்பது ஆச்சர்யம். இன்னும் இவை போன்ற ரஞ்சக அம்சங்கள் கணக்கற்றவையாகவே இருக்கின்றன.

"மாதா தேவி த்வமஸி பகவாந் வாஸுதேவஃ பிதா மே"

என்னும் இடத்தில் நீதி போன்றதொரு தாத்பர்யம் விவரிக்கப்பட்டிருக்கின்றது. லோகத்தில் தாய் தான் ப்ரஜைகளுக்கு மங்கள பரம்பரையைக் கொடுப்பவள். ஜகந் மாதாவாக இருக்கும் இந்த லக்ஷ்மீ விஷயத்தில் அந்த அம்சம் பூர்ணம் என்று கீழ் "ஸர்கே ஸர்கே த்வமஸி ஜகதாம் ஜங்கமாநாம் ப்ரஸூதிஃ" என்பதால் சொல்லப்பட்டது. அதுவே இந்த ச்லோகத்தால் ஹேது புரஸ்ஸரமாக நிச்சயிக்கப்படுகின்றது. 'ஹே தேவி! நீ தான் தாய்; பகவாந் வாஸுதேவன் தகப்பனாக இருக்கலாமே தவிர, அவன் தாயாக ஆகமாட்டான்' [த்வமேவ மாதா; ஸ பிதா பவேந்ந மாதா, மாத்ருபவநமதிக்ஷரம் ஸம்பவிதும் வஸுதேவஸ்யைவ ஸூநாவபி] என்று இந்த வாக்யத்துக்குப் பாவ விவரணம் செய்திருப்பதன் ரஸத்தை ரஸிகர்கள் அறிவார்கள்.

இந்தப் புஸ்தகம், ஸ்ரீரங்கம் வாணீவிலாஸ அச்சுக்கூடத்தில் க்ரயத்துக்கு அகப்படும், விலை அணா 8.

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.
91

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீநரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோ(அ)ந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்னா ।
அன்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீன்
ப்ராணான்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகீயம்.

ஓர் பெரிய அத்யாஹிதம்.

சென்ற டிஸம்பர் மீ 23உ அன்று, நமது தேசத்தின் ராஜப்ரதிநிதி (வைஸ்ராய்), தமது மனைவியுடனும் பரிவாரங்களுடனும் ரயில் மார்க்கமாக டெல்லி நகரத்திற்குப் போய்க்கொண்டிருக்கையில், அந்தப் பட்டணத்திற்குப் பத்து மைல் தூரத்தில் இருப்புப் பாதையில் ஒரு வெடி குண்டு இருந்து, ராஜப்ரதிநிதியின் வண்டி அதன் மீது போகும்பொழுது அது வெடித்துத் தண்டவாளத்தை முறுக்கித் தள்ளி, வண்டிகளுக்கும் சேதத்தை உண்டாக்கின செய்தி எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். தைவ யோகத்தால் அந்தச் சேதம் ராஜப்ரதிநிதி இருந்த பெட்டியைத் தாக்காமல், ஜனங்கள் இராமலிருந்த வேறொரு பெட்டியைத் தாக்கி வண்டியில் போய்க்கொண்டிருந்த ஜனங்களுக்கு அதிக நாசத்தை விளைவிக்காமல் போய்விட்டது. வண்டி முழுவதிலும் ஒரு அபிகாதம் இருந்ததாகவும், ஆனால் அதை அநாதரித்து ரயில் ஓட்டுகிறவர்கள் வண்டியை நிறுத்தாமல் டெல்லி நகரத்திற்குச் சரியான காலத்தில் வண்டியைக் கொண்டுவந்து விட்டதாகவும், ராஜப்ரதிநிதியும் அவருடைய பரிவாரங்களும் நிராபாதமாக க்ருஹம் போய்ச் சேர்ந்ததாகவும் நாம் அறிகிறோம். இதைக் கேட்க நமது மநஸ் மிக்க நிர்வ்ருதியை அடைகின்றது. கொடிய விபத்திலிருந்து ஸாது ஜனங்களைக் காப்பாற்றின இந்த விஷயத்தில் நாம் தைவத்தினிடம் மிக்க க்ருதஜ்ஞதை உள்ளவர்களாக இருப்பதுடன், ராஜப்ரதிநிதிக்கும் அவருடைய மனைவிக்கும் மற்றைப் பரிவாரங்களுக்கும் நமது அபிநந்தநத்தை இது வழியாக விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறோம்.

இந்த வெடிகுண்டின் பரிணாமம் வேறு விதமாக இருந்திருக்கும் பக்ஷத்தில், அது, ஜனங்கள் எல்லாருக்கும் அளவற்ற சோகத்தை விளைவித்தேயிருக்கும். முதலாவது, விபத் நேர்ந்திருந்தால் அதற்குப் பாத்ரமாயிருந்திருக்கக்கூடிய ஜனங்கள், எவ்வித அபராதத்தையும் அறியாத ஸாது ஜனங்கள். இரண்டாவது, அவர்கள், ராஜ ப்ரதிநிதியும் அவரைச் சேர்ந்தவர்களுமாகிற ராஜ மநுஷ்யர்கள். மூன்றாவது, அந்த ராஜ ப்ரதிநிதியும் இதர ராஜ ப்ரதிநிதிகள் போலல்லாமல், மிக உதாரமான மநஸ்ஸை உடையவர்; இந்தத் தேசத்திய ஜனங்களிடம் விசேஷித்த வாத்ஸல்யம் பொருந்தினவர்; இந்தத் தேசத்துக்கும் பெருத்த நன்மைகளைச் செய்யவேண்டுமென்று தீவ்ரமான அபிநிவேசம் கொண்டவர். இப்படிப்பட்டவர்களுக்கு இம்மாதிரியான ஆபத் அதிமாத்ரம் அநுசிதம். அது நேர்ந்திருந்தால் யாருக்குத் தான அது ஸஹ்யமாக இருக்கும்? அதை நினைக்கக்கூட நமது மநஸ் நடுங்குகிறது.

உபஸ்திதமாயிருந்த இந்த விபத் எப்படி ஸம்பவித்தது என்பது இது வரையில் ஒருவருக்கும் தெரியவில்லை; எப்படி நேர்ந்திருக்கக்கூடும் என்பதும் ஒருவராலும் ஊஹிக்கக்கூடாததாக இருக்கிறது. ஆனால் ஒன்று நிச்சயம். இது யாத்ருச்சிகமாக நேரக்கூடியதன்று. வெடி குண்டை இருப்புப் பாதையில் ஓரிடத்தில் வைத்து, அதைக் குறிப்பிட்ட காலத்தில் வெடிக்கும்படி செய்வதற்கு லோஹக் கம்பிகளைக்கொண்டு இரண்டு மைல் தூரம் வரையில் கார்ந்த ஸம்பந்தம் செய்து, அந்த விப்ரக்ருஷ்ட ஸ்தலத்தில் ஒருவரும் அறியாதபடி நின்றுகொண்டு எவனோ ஒருவன் இதைக் குறிப்பிட்ட காலத்தில் வெடிக்கும்படி செய்திருக்கிறான் என்று அந்த ஸ்தலத்தையும் அவ்விடத்தில் செய்யப்பட்டிருந்த ஸம்விதாநங்களையும் பரிசோதித்துப் பார்த்த ராஜ புருஷர்கள் சொல்லுகிறார்கள். இதை, யாரோ விசாரபூர்வகமாகவே செய்திருக்க வேண்டும் என்பதில் ஸந்தேஹமில்லை. யார் செய்திருக்கக்கூடும் என்பதை நிர்ணயிப்பதில் ஸாக்ஷ்யமே ப்ரமாணமாக வேண்டும். இம்மாதிரியான குற்றங்கள் நடைபெறும் பொழுதெல்லாம், ராஜ புருஷர்கள், இப்பொழுது அரசாட்சி செலுத்திவரும் ராஜாங்கத்தாரிடம் த்ருப்தி பெறாதவர்களாயிருக்கும் சில ஸ்வராஜ்யாபிமாநிகளான சிறுவர்களின் மீது ப்ரதம அதிசங்கையை செய்துகொண்டு விசாரிக்கப் புகுவது வழக்கம். அப்படி ப்ரவ்ருத்திப்பது தவறுதலான ப்ரவ்ருத்தியென்றாவது ந்யாய விருத்த மென்றாவது சொல்வது ஸாத்யமில்லை. மநுஷ்யர்களெல்லாரும் கேவலம் ஸாத்விகர்களல்லர். இக்காலத்திய அரசாட்சியின்மீது வெறுப்படைந்திருக்கும் ஜனங்களுட் சிலர், ரஜஸ் தமோ குணங்களின் ஆதிக்யத்தாலும் துஷ்டர்களுடைய ஸஹவாஸத்தாலும் கார்யாகார்ய விவேக மின்றிக் க்ரூரமான கார்யத்தில் ப்ரவ்ருத்திக்க நோக்க முள்ளவர்களாக இருக்கக்கூடும். இந்தக் கார்யம் அப்

படிப்பட்டவர்களின் கார்யமாக இருக்குமோ என்று ஸந்தேஹிப்பது ஸஹஜமே. ஆனால், ப்ரக்ருத விஷயத்தில் வேறு அநேக அம்சங்களும் கவனிக்கத் தக்கவையாக இருக்கின்றன. அவை என்ன அம்சங்கள் என்பதை நன்ருக ஆலோசித்து, அவைகளிலும் தமது மநஸ்ஸைச் செலுத்தி எவ்விடத்தில் உண்மை இருக்கின்றதோ அதை நமது ராஜ புருஷர்கள் கண்டு பிடிக்க ப்ரயத்நப்படுவார்களென்று நாம் நம்புகிறோம்.

இந்த த்ரோஹம் மிகவும் க்ரூரமானது; எல்லாராலும் மிகவும் வெறுக்கத்தக்கது. இம்மாதிரி கார்யத்தில் ப்ரவ்ருத்திக்கும் துஷ்டர்களுக்கு நல்ல புத்தியைக்கொடுத்து அவர்களை நல்வழிக்குக் கொண்டுவரத் திருவுள்ளம் பற்றுவதுடன், இம்மாதிரி விபத்திலிருந்து ஸாது ஜநங்களை எப்பொழுதும் ஸம்ரக்ஷித்துவர ஸ்ரீ பகவாந் க்ருபை செய்ய வேணுமென்றும் நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

* * *

கந்யைகளின் பால்ய விவாஹத்தைப் பற்றிய சட்டம் இரண்டு மூன்று மாஸங்களுக்குள் நிஷ்பத்திக்கு வருகிறது என்பது இன்னும் எல்லாருக்கும் நன்ருகத் தெரியவில்லை. க்ராமங்களில் வஸித்து வருபவர்களுட் பலர், சட்டத்தின் ஸ்வரூபத்தையும் ராஜாங்கத்தாரின் அதிகாரத்தையும் அறியாதவர்களாய், இது ஒருகாலும் நிஷ்பந்நமாக மாட்டாது என்றே ப்ரமித்திருக்கிருர்கள். மற்றும் சிலர், இப்பொழுது பல பெயர்களால் இந்தச் சட்டத்தின் அநீதியைப்பற்றி செய்யப்படும் ஆக்ஷேபங்களைப் பார்த்து, இந்தச் சட்டம் இந்தத் தேசத்திய ராஜ ப்ரதிநிதியால் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், அவருக்கு மேல்பட்டு சீமையில் இருக்கும் அதிகாரிகள் இதை மாற்றி விடுவார்கள் என்று ஒரு நம்பிக்கையுடன் இருக்கிருர்கள். இந்த நம்பிக்கையும் அதிகாரி அநதிகாரிகளின் அவிவேகத்தால் ஏற்பட்டதே. இன்னும் சிலருக்கு வேறொரு ப்ரத்யாசை மநஸ்ஸில் உதித்து நிற்கின்றது. மஹம்மதியர்கள் இந்தச் சட்டத்தைப் பலமாக ஆக்ஷேபிக்கிருர்களென்றும், மஹம்மதியர்களிடம் இங்க்லீஷ்காரர்களுக்கு ஒருவித பீதி இருப்பதால், அவர்கள் விஷயத்தில் இந்தச் சட்டம் நிவ்ருத்தி செய்யப்படுமென்றும், அப்பொழுது ப்ராஹ்மணர்களுக்கும் மோக்ஷம் பிறக்கலாமென்றும் அவர்களுக்கு ஒரு ப்ரத்யாசை இருக்கின்றது. இம்மாதிரியாக ஒரு நிவ்ருத்தி இந்தச் சட்டத்துக்கு ஏற்பட வேண்டுமானல், இந்தச் சட்டத்திற்கு ஆதி கர்த்தாக்களாகிற சட்ட நிர்மாண ஸபையாரின் அநுமதியாலேயே அது ஏற்படவேண்டும். அந்தச் சட்ட நிர்மாண ஸபையின் அங்கத்தினர்களின் நோக்

பால்ய விவாஹச் சட்டம்.

கத்தைப் பார்த்தால், அம்மாதிரி அநுமதி ஒருகாலும் கிடைக்கமாட்டாது என்பது வ்யக்தமாகத் தெரியவரும். ஆகையால் வருகிற ஏப்ரல் மாஸம் முதல் தேதி முதல் இந்தச் சட்டம் நிஷ்பத்திக்கு வந்துவிடும் என்பதில் ஆக்ஷேபமில்லை.

அப்படி அது நிஷ்பத்திக்கு வந்த பிறகு நாம் என்ன செய்யப்போகிறோம் என்பது தான் நன்ருக விளங்கவில்லை. சிலர், அதை மீறி நடப்பதால் ஸம்பவிக்கும் தண்டனைக்கு பயப்படாமல் நாம் நமது தர்ம சாஸ்த்ரம் சொல்வதையே கைப்பற்றி, எவ்வித ஆபத் நேர்ந்த போதிலும் தர்ம சாஸ்த்ரம் காண்பிக்கும் மார்க்கத்திலேயே நடந்து வரவேண்டுமென்று உபதேசிக்கிருர்கள். இது நடைபெறும் உபதேசமாக நமக்குத் தோற்றவில்லை. இந்தச்சட்டத்தை மீறி நடப்பதற்கு விதிக்கப்படும் தண்டனை கேவலம் பணம் செலுத்தும் அபராதமாக மாத்ரம் இருந்தால், அதை அநாதரிப்பது ஸாத்யமாகும். அந்த அபராதத்தைக் கல்யாணச் செலவுகளுள் ஒன்ருக நினைத்துக் கொண்டு ப்ராயேண எல்லாரும் சட்டத்தை மீறி நடப்பதற்குத் துணியக் கூடும். அந்தத் தண்டனை, காராக்ருஹ ப்ரவேச ரூபமாகவும் இருக்கலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறபடியால், அதை அநாதரிக்க நாம் சக்தர்களா? என்பது நமக்கு ஸந்திக்தமாகவே இருக்கின்றது. நாம் காராக்ருஹம் ப்ரவேசித்தால், நமது க்ருஹ க்ஷேத்ர ஆராமாதிகளையும் புத்ர மித்ர களத்ராதிகளையும் த்யஜித்தும், எவ்வித ஸ்வாதந்த்ர்யமுமின்றிக்கே ராஜ புருஷர்களால் ஒவ்வொரு வ்யாபாரத்திலும் நியமிக்கப்பட்டு நின்று கொண்டும், இவ்வளவு காலம் நாம் பழக்கப்பட்டு வந்திருக்கும் ஆசாரத்திற்கும் ஆஹாரத்திற்கும் அத்யந்தம் விருத்தமான ஆசாரத்தையும் ஆஹாராதிகளையும் அங்கீகரித்தும் இருக்க வேண்டாமோ? அப்படி இருக்க நமக்கு தைர்யம் போதாதென்றே நாம் நினைக்கிறோம். நமது தௌர்பல்யத்தையும் மனஸ்ஸில் உறுதியற்றிருக்கும் இருப்பையும் அறியாமல், நம்மிடம் க்ஷத்ரியத் தன்மை இருப்பதுபோல் நினைத்து இவர்கள் இம்மாதிரி உபதேசம் செய்கிருர்களே தவிர, வஸ்து ஸ்திதியைப் பராமர்சித்து உபதேசிப்பதாக நமக்குத் தோன்றவில்லை. இந்த உபதேசம் வீணை உபதேசமென்றே நாம் நினைக்கிறோம்.

தவிரவும், இதில் இன்னும் ஒரு அம்சம் கவனிக்கப்பட வேண்டியது உண்டு. பால்ய விவாஹத்தை விதிக்கும் சாஸ்த்ரத்தில் உண்மையான விச்வாஸமுள்ளவர்கள் சிலரே. பல பெயர்களுக்குப் பஹு காலமாகப் பால்ய விவாஹ பரிபாடி பழக்கப்பட்டு வந்திருக்கிறபடியால் மாத்ரம், அவர்களுக்கு அதில் ஒரு விதமான ச்ரத்தையும் வாஞ்சையும் ஏற்பட்டு நிற்கின்றன. அந்த வாஞ்சைப்படி அநுஷ்டிப்பதால் ஏதாவது ஒரு நிர்ப்பந்தம் ஜநிக்கின்

றது என்பதை அவர்கள் காணும் பக்ஷத்தில், ஸ்வல்ப சோகத்துடன் அவர்கள் தம்முடைய வாஞ்சையைக் கைவிட்டுப் புதிய பரிபாடிக்கு இணங்கி விடுவார்களே தவிர, உறுதியுடன் அதற்கு எதிர்த்து நிற்க மாட்டார்கள். இது, இக்காலத்தில் வயஸ் சென்ற வ்ருத்தர்களின் ஸ்திதி. வயஸ்ஸில் அதிகமாக முதிராமல் பாச்சாத்ய நாகரிகத்திற்கும் ஸம்ஸ்காரத்திற்கும் பரிசயப்பட்டிருக்கும் சிறுவர்களின் ஸ்திதியோ வென்றால், இந்தச் சட்டம் ஸம்பந்தப்பட்ட வரையில் பூர்ணமான ஔதாஸீந்யமே. ருது தர்சநத்திற்குப் பிறகு அதிக காலம் விளம்பியாமல் கந்யகைகளுக்கு விவாஹம் செய்து விட்டால், அதனால் பெரிய தோஷம் ஸம்பவிக்க மாட்டாது என்பதே அவர்களுடைய எண்ணம். மேலும், லோகம் கதாநுகதிகம். எந்த அநுஷ்டானமும், முதலில் பத்து ஜநங்களால் அநுஷ்டிக்கப்பட்டு விட்டால், அது, அத்யந்தம் கர்ஹ்யமாயிருந்தாலொழிய, மற்றை எல்லாராலும் எவ்வித ஆலோசனையுமின்றிக்கு அநுஷ்டிக்கப்பட்டு வருமன்றோ?

இந்த அம்சங்கள் எல்லாவற்றையும் ஆலோசித்துப் பார்க்கும்பொழுது, இந்தச் சட்டம், ஜநங்களுக்குள் பெருத்த கலஹத்தை ஜநிப்பிக்கும் என்று நாம் நினைக்கவில்லை. இந்தச் சட்டம் ப்ரவ்ருத்திக்கு வந்து ஐந்தாறு வர்ஷங்கள் சென்று விட்டால், எல்லாக் கோலாஹலமும் சாந்தமாகி விடுமென்றே நாம் நினைக்கிறோம். 'இதற்கு முன் அநுமரணம் செய்யக்கூடாதென்று சட்டம் செய்த பொழுது அதற்கு ஆக்ஷேபித்தவர்களெல்லாரும் சட்டம் செய்யப்பட்டு அது அமுலுக்கு வந்த பிறகு எப்படி சாந்தராகப் போய் விட்டார்களோ, அம்மாதிரியே இந்தச் சட்டத்திலும் எல்லா ஆக்ஷேபங்களும் சீக்ரத்தில் சாந்தமாகி விடும்' என்று நம்மை இப்பொழுது பரிஹஸிக்கும் தேசோத்தாரகர்களுடைய வார்த்தையும் நிறைவேறி விடும். இம்மாதிரி நாம் எழுதுவதைக் கொண்டு, நாம், இந்தச் சட்டத்தை அபிநந்தநம் செய்வதாகவாவது அதற்கு ஆக்ஷேபம் செய்வதை நிறுத்திவிட வேண்டுமென்று எண்ணுவதாகவாவது ஒருவரும் க்ரஹிக்கக்கூடாது. இந்தச் சட்டம் மிகவும் அந்யாயமான சட்டங்களுள் ஒன்றென்பதும், ஆகையால் அது ஸர்வ ப்ரகாரத்திலும் ஆக்ஷேபார்ஹமென்பதுமே நம்முடைய த்ருடமான அபிப்ராயம். ஆனால், நமது துர்பலத்தையும் உறுதி இல்லாத் தன்மையையும் ஆலோசித்து, முடிவில் இந்தச் சட்டத்திற்கு என்ன ஸம்பவிக்கும் என்பதை மாத்ரம் நிரூபணம் செய்து வெளியிடத் துணிந்தோம். உண்மையாகவே துர்பலர்களைப் பலிஷ்டர்கள் நிர்ப்பந்திக்க ப்ரவ்ருத்தித்தால், அந்தத் துர்பலர்கள் நிர்பந்தத்துக்கு உட்படாமல் வேறு என்ன செய்யக்கூடும்?

காலம் மிகவும் விபரீதமாக இருக்கின்றது. அநேக த்ருஷ்ட விஷயங்களில் ருஜுவாக ப்ரவ்ருத்திக்கும் புத்தியை உடைய தீமான்களும் ப்ரக்ருதம் போன்ற அம்சங்களில் விபரீதமான ப்ரமத்துக்குப் பாத்ர மாகிறார்கள். பரலோக ஸம்பந்தமான ச்ரேயஸ்ஸின் விஷயத்தில் ஜகத் முழுவதும் ஓர் இருண்ட மோஹத்தை அடைந்திருப்பதாகவே நாம் நினைக்கிறோம். இம்மாதிரியான மோஹம், ஜகத்தில், சிற்சில காலங்களில் ஸம்பவிக்கும் பெரிய உத்பாதங்களுக்கு ஸூசகமாக இருந்திருப்பதை நாம் கேட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட உத்பாதங்களொன்றும் இப்பொழுது நேராமல் இருக்கவேண்டும் என்பதே நமது ப்ரார்த்தனை.

𑌕𑌾𑌲𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 [illegible] 𑌨𑌨𑍁 𑌯𑌦𑌿 𑌕𑌰𑍋𑌤𑍍𑌯𑌂𑌶𑌂 [illegible]
[illegible] 𑌯𑌦𑌿 [illegible] 𑌯𑌦𑌿 [illegible] ।
[illegible] 𑌤𑌤𑍍𑌸𑍍𑌵 [illegible] 𑌚
[illegible] 𑌚 𑌨 [illegible] 𑌤𑌥𑌾 [illegible] ॥

𑌯𑍇𑌨𑍈𑌵 𑌦𑍀𑌵𑌦𑍀𑌵 𑌕𑌾𑌰𑍁𑌣𑌿𑌕𑍇𑌨 𑌦𑌤𑍍𑌤𑌾𑌂
𑌲𑍋𑌕𑌾𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌂 𑌗𑍁𑌣𑌵𑌤𑍀𑌂 𑌕𑌿𑌲 𑌪𑍂𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 ।
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌿𑌤𑌗𑍁𑌣𑌾 [illegible]
𑌲𑍋𑌕𑍋𑌪𑌕𑌾𑌰𑌿 [illegible] 𑌕𑍁𑌤𑍋 𑌵𑌿𑌷𑌾𑌦𑌃 ॥